# இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்

முனைவர் இரா. இளவரசு

இந்திய
விடுதலை இயக்கத்தில்
பாரதிதாசன்

# இந்திய
# விடுதலை இயக்கத்தில்
# பாரதிதாசன்

முனைவர் இரா. இளவரசு

மருதம்

672, பெரியார் சாலை
கருணாநிதி நகர்
திருச்சி-620021

மருதம் வெளியீடு : ஒன்று

முதற்பதிப்பு : திசம்பர் 1990

உரிமை : ஆசிரியர்க்கு

முகப்பு : இராசா

விலை : உரு இருபது

கிடைக்கும் இடங்கள் :

**மருதம்**
672, பெரியார் சாலை
கருணாநிதி நகர்
திருச்சி-620 021

**ஐந்திணைப் பதிப்பகம்**
279, பாரதி சாலை
திருவல்லிக்கேணி
சென்னை-600 005

**மணிவாசகர் நூலகம்**
12-ஆ, மேல சன்னதி
சிதம்பரம் 608 001

**சிலிக்குயில்**
20, ப. கோதண்டபாணித் தெரு
குடந்தை-620 001

அச்சிட்டோர் : இராசகிளி அச்சகம், சென்னை-20.

# புகுமுன்...

பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ்வேறு தான்வேறு என்றில்லாமல் ''நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும் நான் நான் நான்'' என்று முழங்கிய தமிழ் அரிமா. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பாட்டிலக்கிய வரலாற்றில் அழுத்தமான பதிவுகளை ஏற்படுத்தித் தனக்குப் பின்னே ஒரு பாட்டுக் குயில்களின் பட்டாளத்தையே விட்டுச் சென்ற பெருமை அவரின் உரிமை. தன்னேரில்லாத தமிழ் மறுமலர்ச்சிப் பாவலராக விளங்கிய அவர் நெஞ்சில் உற்றதைச் செய்கையில் நாட்டச் சிறிதும் தயங் காதவர். இளமை முதல் இறுதிக் காலம் வரை சூழ்ச்சி, வஞ்சகம், பொறாமை ஆகியவற்றைத் தொகையாக எதிர்நிறுத்தித் தூள் தூளாக்கும் காழ்ச் சிந்தை கொண்ட களமறவராகத் திகழ்ந்தவர்.

இன்னார், இனியர் என்னும் வேறுபாடின்றி எந்நிலையின ராயினும் தமிழுக்கும் தமிழர்க்கும் எதிரானவரெனத் தான் கருது வோரைக் கண்ணோட்டமின்றிச் சாடிய தறுகண்ணாளர்.

பல இயக்கங்கள் அவரின் பணிகளைப் பெற்றுச் சிறந்தன; எனினும் அவரே ஓர் இயக்கமாக விளங்கியவர். ஆம். பாவேந்தர் என்பது ஒரு தனிமாந்தரின் பெயர் என்பதைவிட ஓர் இயக்கத்தின் பெயர் எனல் சாலும்.

ஓர் இயக்கமாக விளங்கிய பாவேந்தர் இந்திய விடுதலை இயக்கத்தில் மிகுந்த ஈடுபாட்டோடு பாடுபட்டார் என்பதைப் பலரும் அறியத் துலக்கிக் காட்டும் பணியே இந்நூலில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

விடுதலைப்போரில் தமிழகத்தின், தமிழ் இலக்கியத்தின் பங் களிப்பைப் பற்றிப் பல வெளியீடுகள் வந்துள்ளன. அவற்றில் பாரதி தாசனுக்கு உரிய இடம் சரிவரத் தரப்படவில்லை. 1957 ஆகஸ்டு கலைக்கதிர் இதழ் (கோவை) விடுதலைப் போராட்ட மலராக வெளி வந்தது. தரமான அம்மலரில் 'விடுதலை இயக்கமும் பாட்டும்' என்னும் விரிவான கட்டுரை யொன்றை நாமக்கல் கவிஞர் எழுதி யுள்ளார். அக்கட்டுரையில் ''காந்தியடிகள் இயக்கம் தீவிரம் அடைந்து செயல்புரியத் தொடங்கியபோது, சமயத்துக்கேற்ற புதுப் புதுப் பாடல்களை இயற்றித்தர பாரதியார் நம்மிடையே இல்லாது போனார். ஆனால் பாரதியின் பாணியைப் பின்பற்றி நாமக்கல் கவிஞர் அப்போதைக்கப்போது இயற்றித் தந்த புதுப்புதுப் பாடல்கள்

விடுதலை இயக்கத்துக்கு மிகவும் உதவியாக இருந்தன....” (ப 60) என்று அவரே குறிப்பிடுகிறார். பாரதியாரின் மறைவையொட்டிய 1922, 23ஆம் ஆண்டுகளிலேயே—காந்தியடிகளின் இயக்கம் தீவிர மடைந்திருந்த காலக்கட்டத்திலேயே—அவ்வியக்கம்பற்றிப் பல பாடல்கள் இயற்றிப் பணியாற்றிய பாரதிதாசனின் பெயர் கூட அக்கட்டுரையில் சுட்டப்படவில்லை. இதற்குக் காரணம் புதுவையைக் களமாகக் கொண்டு நிகழ்ந்த பாவேந்தரின் விடுதலை இயக்கப்பணி பலரும் அறியும் வகையில் வெளிக் கொணரப்படவில்லை என்பதோடு இப்படியும் அவர் பணியாற்றியிருப்பாரா என எண்ணிப் பார்க்கும் தேவையே ஏற்பட முடியாத அளவுக்குத் தமிழ்த் தேசிய இனத்தின் தன்னிகரற்ற பாவலராகவே அவரை நாடு இனங்கண்டு கொண் டிருந்தது.

இந்திய விடுதலை இயக்கப் பணி என்பது பாவேந்தர் வாழ்க்கையின் ஒரு பகுதி. அந்தப் பகுதியைத் துலக்கிக் காட்டுவது அவரை முழுமை யாக அறிந்து கொள்ளும் முயற்சியின் ஒரு கூறு. பிற்காலத்தில் ‘தமிழ் நாடு தமிழருக்கே’ எனக் குரல் கொடுத்த நாவலர் சோமசுந்தர பாரதி யார், தந்தை பெரியார் முதலியவர்களெல்லாம் பேராயக் கட்சிக் காரர்களாக இருந்தவர்கள் என்பது வரலாறு. அத்தகு வரலாறு பாவேந்தர்க்கும் உண்டு. அந்தக் காலக் கட்டத்தில் ஆங்கிலேயர் களின் வல்லாண்மையை யெதிர்த்துக் குரல் கொடுத்தார்கள் என்பது அவர்களுக்கும் நமக்கும் பெருமை சேர்ப்பதே. பிற்காலத்தில் அவர் களிடம் ஏற்பட்ட கருத்துநிலை மாற்றத்தைச் சரிவர அறிவதற்கும் வளர்ச்சி நிலைகளைக் கணிப்பதற்கும் முற்காலப் பணிகள் பற்றிய அறிவு பயன்படும் என்பது தெளிவு.

பாரதிதாசனாகிய சுப்புரத்தினம் பாடிய முதற்பாடலாக இன்று தெரிய வருவது அவர் பதின்மூன்று அகவையில் (1904) பாடிய,

பழங்கலத்திலே பழங்களைத்தான்
பார்த்துத்தேடும் பயல்களைத்தான்
கிழங்களைத்தான் உதைக்கவேண்டும்
கெடுநினைப்போ அதிகமப்பா
ஒழுங்குபட வாழைச்சீப்பில்
ஒன்றுவிழுக் காடுதந்தாள்
விழுங்கிடவே அண்ணாவுக்கு
மீத்துக்கொடுக்க மறைப்பதென்ன ?

என்னும் பாடலே. தன் பெரியம்மா வாழைச்சீப்பு ஒன்றை வாங்கி வந்து, தனக்கும் வேறு சிலர்க்கும் ஆளுக்கு ஒரு பழம் தந்து விட்டு மீதிப் பழங்களை யெல்லாம் அண்ணன் சுப்பராயனை எடுத்துக்

கொள்ளும்படிக் குறிப்புக்காட்டிவிட்டுப் பழங்கல அறைக்குள் ஒளித்து வைத்தாள். பிறரறியாமல் அப்பழங்களைத் தின்றுவிட்டுப் பெரியம் மாவின் முறையற்ற செயலைக் கண்டித்து எழுதப்பட்டதே இம்முதற் பாடல் (கறுப்புக் குயிலின் நெருப்புக்குரல், ப 22-23). இவ்வாறு தொடங்கும் பாவேந்தரின் முற்கால வாழ்க்கையில் 1911 முதல் 1937 முடியவுள்ள காலக்கட்டத்தை இந்திய விடுதலை இயக்கச் சார்புக்காலம் எனலாம். இக்கால விடுதலை இயக்கப் பணிகளையே இந்நூல் விதந்து பேசுகிறது. 1911இல் மாடசாமி முதலிய விடுதலை இயக்கத் தாரைப் பாதுகாப்பதில் தொடங்கி 1938இல், இந்தித்திணிப்பை யொட்டித் தன்மான இயக்கத்தாரால் 'தமிழ்நாடு' கோரிக்கை முன்வைக்கப்படும்வரை விடுதலை இயக்கப்பணிகளில் பாவேந்தர் ஈடுபட்டார். இக்காலத்தையும் 1911 முதல் 1927 முடியப் 'பேராயக் கட்சிப்பணிக்காலம்' எனவும் 1928 முதல் 1937 முடியத் 'தன்மான இயக்கப்பணிக்காலம்' எனவும் பகுக்கலாம். பேராயக்கட்சிப் பணிக் காலத்திலும் பாரதி மறைந்த 1921 வரையிலான காலத்தில் அதாவது பாரதிதாசனுக்கு முப்பது அகவை முடியும் வரையில் கடவுட்பற்றுப் பாடல்கள் எழுதுவதிலேயே கருத்துச் செலுத்தினார் என்பதும் 1922 தொடங்கியே தேசியப் பாட்டுகளைத் தீட்டுவாராயினார் என்பதும் மனங்கொளத்தக்கன.

'இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்' என்னுந் தலைப்பில் இருபது பக்க அளவிலான என் கட்டுரையொன்று, 1976 முற்பகுதியில் முனைவர் பொற்கோ அவர்களின் 'புலமை' இதழில் வெளிவந்தது. 1975இன் தொடக்கத்தில் நாகர்கோவிலில் நடந்த இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற ஏழாவது கருத்தரங்கில் 'பாரதிதாசனின் கதர் இராட்டினப்பாட்டு' எனும் கட்டுரையைப் படித்தேன். கருத்தரங்க ஆய்வுக் கோவையில் சிதைந்த நிலையில் வெளிவந்த அக்கட்டுரை, கரந்தைத் தமிழ்ச்சங்கத் 'தமிழ்ப்பொழில்' இதழில் (1975 திசம்பர் 1976 சனவரி) முழுமையாக வெளியிடப் பட்டது. அவ்விரண்டு கட்டுரைகளின் திருந்திய, விரிவான வடிவமே இந்நூல். 'புலமை' இதழில் வெளிவந்த கட்டுரையின் இறுதியில் ''புதுவையினின்று 1920, 1930ஆம் ஆண்டுகளை யொட்டி வெளியான 'தேசபக்தன்', 'புதுவைமுரசு' முதலிய இதழ்களில் பாரதிதாசன் விடுதலை இயக்கப் பாடல்கள் பல எழுதியிருக்கலாம். அவ்விதழ்கள் பார்வைக்குக் கிடைப்பின் இக்கட்டுரை இன்னும் விரிவடைய வாய்ப் புண்டு'' என்று குறித்திருந்தேன். அக்கட்டுரை விரிவடைந்து புதியவடிவில் இன்று வெளிவருவதற்குக் காரணம் அவ்விதழ்களில் பல கிடைத்தமையே. இந்நூலிலும் (ப 102) இன்னும் கிடைக்க வேண்டிய படைப்புகள் பல உள்ளமை சுட்டப்பட்டுள்ளது. மீண்டும் மீண்டும் தேடுதல் தானே ஆராய்ச்சி. அதற்கு முடிவேது?

அந்தக் கட்டுரைகளின் சில பகுதிகள், எந்தக் கட்டுரையிலிருந்து எடுத்தவை என்பது பற்றிய எக்குறிப்புமின்றிச் சிலரால் எடுத்தாளப் பட்டன. அதே நேரத்தில் கட்டுரைக் கருத்துகளை வரவேற்றுத் தம் நூல்களில் என் பெயருடன் அவற்றைப் பதிவுசெய்தனர் சிலர். அதுவே நயத்தக்க ஆய்வு நாகரிகம். கட்டுரைகள் எழுதப்பட்டுப் பதினைந்தாண்டுகள் கழிந்தபின் இந்நூல் வெளிவருகின்றது. அப்போது அறிய இயலாத பல செய்திகள் இப்போது கிடைத்துள்ளன. பாவேந்தர் ஆய்வு ஓரளவு செழுமை பெற்றுள்ளது. ஆதலால் இந்நூலில் பழைய செய்திகள் சில மாற்றம் பெற்றுள்ளன. நம்பகமற்ற சில செய்திகள் விடப்படுள்ளன. புதிய செய்திகள் சில முன்வைக்கப் படுகின்றன.

விடுதலை இயக்கம் பற்றித் தமிழில் பல வெளியீடுகள் வந்துள்ள போதிலும் இன்னும் தெளிவாக்கப்பட வேண்டிய சில செய்திகள் உள்ளன. காட்டாக 'நாகபுரிக் கொடிப்போர்' நிகழ்ச்சியைக் குறிப் பிடலாம். நாகபுரி நகராட்சிக் கட்டடத்தில் தேசியக் கொடியைப் பறக்க விடக் கூடாதென்று அரசு தடைவிதித்ததன் காரணமாகக் கொடிப் போர் தொடங்கியதெனவும் நாகபுரியில் வெள்ளையர் வாழும் வீதி ஒன்றிலே தேசியக்கொடி பறக்க விடப்படுவதையும் எடுத்துச் செல்லப் படுவதையும் காவல்துறையினர் தடை செய்ததால் தொடங்கியது எனவும் குறிப்பிட்டுள்ளனர், நாகபுரிக் கொடிப்போர் என அது பெயர் பெற்றிருப்பினும் ஜபல்பூரில்தான் தொடங்கியது என்பது வரலாறு. தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களின் 'நவசக்தி' இதழ்ச் செய்திகளின் அடிப்படையில் கொடிப்போர்க் குறிப்புகள் இந்நூலில் ஓரளவு தெளிவாக்கப்பட்டுள்ளன. வாஞ்சிநாதன் ஆஷ் என்னும் அதிகாரியைக் கொன்ற நாள், நேரம் பற்றிய குறிப் பிலும் வேறுபாடு காணப்படுகிறது. 1911 ஜூன் 11 மாலை சுமார் 4 மணி (புதுவையில் தேச பக்தர்கள், ப 48) எனவும் 1911 ஜூலை 17 காலை 11 மணி (சித்திரபாரதி, ப 80) எனவும் 1911 ஜூன் 17 காலை 10-40 (கார்ல்மார்க்சின் இலக்கிய இதயம், ப 75) எனவும் வேறுபாடு! இறுதியில் இடம் பெறுவதே சான்றுகளின் அடிப்படையில் அமைந்த சரியான காலம் எனத் தெளிய முடிந்தது. இவ்வாறமைந்த பல வேறுபாடுகளில் சரியானவை எனத் தெளிந்தவற்றை முன் வைக்கும் முயற்சி இயன்றவரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுவையில் விடுதலை இயக்கத்தாரை ஒற்றறிந்த புலனாய்வுத் துறையினரின் நடவடிக்கைகள் பற்றிச் சில குறிப்புகள் கிடைக் கின்றன. இத்தொடர்பில் பாரிசு தேசிய நூலக ஆவணக் கருவூலப் பிரிவிலுள்ள மடல்கள் (தமிழாக்கம்—ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் 1982), புதுவை முத்துக்குமரசாமிப்பிள்ளையிடம் அகப்

பட்ட ஓர் ஒற்றனின் கையேடு, முனைவர் கோ. கேசவனின் 'Bharati and Imperialism—A documentation' (1987) எனும் நூல் ஆகியன குறிப்பிடத்தக்கன. அவற்றில் புதுவையில் வாழும் பிரஞ்சிந்தியக் குடிமக்கள் பற்றிய குறிப்புகள் பெரும்பாலும் இடம் பெறவில்லை. பிரிட்டிசு இந்தியாவிலிருந்து அங்கு அடைக்கலம் புகுந்த விடுதலை இயக்கத்தார், அவர்களைக் காண இங்கிருந்து சென்றவர்கள் பற்றிய குறிப்புகளே அதிகம் இடம் பெற்றுள்ளன. பாரதிதாசனாகிய கனக சுப்புரத்தினத்தின் பெயரை அவற்றில் காணமுடியவில்லை. இவரைக் கண்காணிப்பது புலனாய்வுத்துறையினரின் நோக்கமன்று என்பதும் இவர் பிரஞ்சிந்தியக் குடிமகன் என்பதும் நினைக்கத் தக்கன.

நூலுக்கு அடிப்படைத் தரவுகளாக அமைந்துள்ள பாடல்கள் பல, நாட்டுக்கு நன்கு அறிமுகமாகாதவையாதலால் அவற்றை ஓரள வேனும் பலரும் அறியும் வகையில் பாடல் வரிகளே பல இடங்களில் தரப்பட்டுள்ளன. மையக் கருத்துகளை வலியுறுத்தும் வகையில் மேற் கோள்கள் இடம் பெற்றுள்ளன. மேற்கோட் செய்திகள் பலர்க்கும் தெரிய வேண்டியவை என்பதாலும் மையக்கருத்தோடு தொடர்புடைய வர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அறிவிக்க வேண்டும் என்பதாலும் சற்று மிகையாகவே சில இடங்களில் மேற்கோள்கள் அளிக்கப்பட்டுள்ளன. பெரிய அளவினவாகிய மேற்கோள்கள் பெரும் பாலும் மேற்கோட்குறியின்றிப் பத்தியமைப்பில் சற்று உள்வாங்கியும், மேற்கோள்களில் காணப்படும் மொழிப் பிழைகள் திருத்தப்படாமலும் அச்சிடப்பட்டுள்ளன.

இந்நூல் உருவாக்கத்தில் பங்கு கொண்டோர் பலர். பாவேந்த ரோடு மிகவும் நெருங்கிப் பழகிய பெரியவர் எஸ். ஆர். சுப்பிரமணியன் அவர்களை அணுகியபோதெல்லாம் சிறிதும் தயக்கமின்றிச் செய்தி களை வழங்கினார். உடல் தளர்ச்சியையும் பொருட்படுத்தாமல் அவர் செய்த உதவியால், இதுவரை பாவேந்தர் வரலாற்றில் இடம் பெறாத செய்திகள் சில இந்நூலில் பதிவாகியுள்ளன. அருமை நண்பர் பெ.சு. மணி அவர்களின் உதவி மிகப்பெரிது. ஐயம் ஏற்படும் போதெல் லாம் அவரை நாடினேன். சான்றுகளின் அடிப்படையில் உடனுக்குடன் ஐயம் அகற்றப்பட்டது. விடுதலை இயக்கத் தொடர்பில் நான் அறிந்திராத செய்திகளை அறிமுகப்படுத்தினார். கருத்துரை வழங்கி யும், நூல்களை அளித்தும், குறிப்பெடுத்துக் கொடுத்தும், படி யெடுத்துத்தந்தும் உதவியோர் பலர். பாவேந்தரின் புதல்வர் மன்னர் மன்னன், புதல்வியார் வசந்தா தண்டபாணி, கவிஞர் பொன்னடியான், பாவலர் இலக்கியன், கவிஞர் தமிழ்க்கோவன், முனைவர் அ. கனகராசு, தினமணி நூலகர் பூபதி, முனைவர் பழ. அதியமான்,

வழக்குரைஞர் ஏ. கோபண்ணா, நண்பர்கள் தியாகு, கோ. மணி வாசகம், மருத்துவர் தோமினிக் சாமிநாதன், த. சித்தார்த்தன், பேராசிரியர் இரா. வேலம்மாள், முனைவர் கு. திருமாறன், புலவர் பி. தமிழகன் ஆகியோர் ஒவ்வொரு வகையில் உதவியுள்ளனர். ஆய்வாளர் கி தமிழரசி சிறிதும் சலிப்பின்றிக் குறிப்பெடுத்தும் படியெடுத்தும் உதவியமை தனித்துச் சுட்டத்தக்கது.

சென்னையிலுள்ள பெரியார் பகுத்தறிவு ஆய்வு நூலகம், மறை மலையடிகள் நூல் நிலையம், புதுவையிலுள்ள வரலாற்றுக்கழகம், பாவேந்தர் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம்-ஆய்வுமையம் முதலிய பல நிறுவன அலுவலர்கள் நான் அணுகியபோதெல்லாம் உதவினர். குறுகிய காலத்தில் நூல் அச்சாக வேண்டிய தேவை ஏற்பட்டபோது, பிறபணிகளைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு அச்சிடும் பொறுப்பை மனமுவந்து ஏற்றார் நண்பர் வைகறைவாணன். நண்பர் கள் அரணமுறுவல், இரமணி ஆகியோர் அவருடன் இணைந்தனர். அச்சகத் தொழிலாளர்களின் உழைப்பும் சேர்ந்து நூல் வெளிவரு கின்றது. இவ்வாறு பல்லாற்றானும் நூல் உருப்பெறத் துணைநின்ற எல்லோர்க்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றியை மகிழ்ச்சியுடன் உரித்தாக்குகின்றேன்.

இறுதியில் ஒரு சொல்.

இப்போதுகூட 'இந்தச் செய்தியை இங்கே சொல்லியிருக்கலாமே, இதனை இப்படி எழுதியிருக்கலாமே' என ஒரு நிறைவின்மை தோன்றுகிறது. இதைத்தான் 'ஆரா இயற்கை அவா', 'அறிதோறு அறியாமை காணுதல்' என்றான் அறிஞன் வள்ளுவன். இன்னும் இன்னும்...என்னும் நிறைவின்மை ஒருபுறம். ''உள்ளிய வினை முடித்தன்ன இனியோள்'' என்றானே நற்றிணைப் புலவன் அப்படி, ஒரு வேலையை முடித்திருக்கிறோமே என்னும் இன்பம் ஒரு புறம். இந்த மனநிலையோடு தமிழ் ஆயும் நல்லுலகின் முன் இந்நூலை அன்புடன் அளிக்கிறேன்.

வாழ்க்கையென்பதும் ஆய்வு என்பதும் கொண்டு கொடுக்கும் செயல்களே. பலரைச் சார்ந்தே அவை நடக்க முடியும். நான் கொண்டதைக் கொடுத்திருக்கிறேன், உங்களிடமிருந்து மேலும் கொள்வதற்காக.

நன்றியுடன்

**இரா. இளவரசு**

ஆர். என். 5, பட்டினப்பாக்கம், சென்னை-600,028

# நூல் அகம்

| | | |
|---|---|---|
| 0 : | நுழைவாயில் | 9 |
| 1 : | பாரதியாரைக் கண்டறிவதற்கு முன்பே... | 11 |
| 2 : | பாரதியார் அறிமுகம் | 13 |
| 3 : | பேராயக் கட்சியில்... | 17 |
| 4 : | பாரதம் போற்றல் | 19 |
| 5 : | மேலான விடுதலை | 23 |
| 6 : | தெய்வங்களை நோக்கி... | 25 |
| 7 : | தலைவர்களைப் போற்றல் | 29 |
| 8 : | இயக்கக் களத்தில்... | 39 |
| 9 : | ஒத்துழையாமையும் நூல் உருவாக்கமும் | 55 |
| 10 : | மேயோ ஒரு பன்றி | 66 |
| 11 : | மதுவிலக்கு | 67 |
| 12 : | மயக்கும் ஆங்கிலம் | 69 |
| 13 : | 'நீச நாகரிகம்' | 71 |
| 14 : | 'பசுத் தெய்வம்' | 72 |
| 15 : | பொருளியற் சமன்மை | 76 |
| 16 : | அகாலியர் போர்த்திறன் | 77 |
| 17 : | தாயின் மணிக்கொடி | 79 |
| 18 : | மாதர் குரல் | 84 |
| 19 : | உரிமைத் தாய்தனைப் போ என்று சொல்வதா ? | 85 |
| 20 : | தன்மான இயக்கச் சார்பு நிலையிலும் .. | 87 |
| 21 : | தீண்டாமை ஒழிப்பு | 90 |
| 22 : | முசுலீம் சிங்கக்கன்று | 93 |
| 23 : | மாற்றமும் முடிவும் | 95 |
| 24 : | தொகுப்பும் முடிப்பும் | 100 |
| இணைப்பு : | கதர் இராட்டினப்பாட்டு | 115 |
| திருத்திப் படியுங்கள் | | 124 |

# குறுக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| க | : | கட்டுரை |
| க.ம.வெ | : | ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம் வெளியீடு |
| கி.இ | : | கிழமை இதழ் |
| கு | : | குயில் |
| கு.அ | : | குடிஅரசு |
| தி.இ | : | திங்கள் இதழ் |
| தி.இ.மு | : | திங்கள் இருமுறை |
| தி.க.இ | : | திங்கள் கவிதை இதழ் |
| தே.சே | : | தேச சேவகன் |
| தொ.ஆ | : | தொகுப்பாசிரியர், தொகுப்பாளர் |
| நா.இ | : | நாள் இதழ் |
| நூ | : | நூல் |
| ப | : | பக்கம், பக்கங்கள் |
| ப.ஆ | : | பதிப்பாசிரியர், பதிப்பாளர் |
| ப.ம.தி | : | பன்மணித்திரள் |
| பா | : | பாடல் |
| பு.மு | : | புதுவை முரசு |
| ம.அ | : | மறு அச்சீடு |
| ஷை | : | மேற்படி |
| E | : | Essay |
| p | : | Page |
| pp | : | Pages |
| Vol | : | Volume |

# 0 : நுழைவாயில்

0.1 இந்திய விடுதலை இயக்கத்தின் ஈட்டிமுனையாக இருந்தது 'இந்தியத் தேசியக் காங்கிரசு'. அவ்வமைப்பு ஆங்கிலேயரால் தொடங்கப்பட்டு ஆங்கிலேயர் சிலரின் தலைமையின் கீழ் ஆங்கில விரும்பிகளின் ஆதரவோடு இயங்கியது. ஆங்கிலத்தில் படித்துப் பட்டம் பெற்றார்க்கு அலுவல் பெறுவதும் ஆளப்படுவோரின் இன்னல்கள்குறித்து ஆளுவோரிடம் முறையிடுவதுமே அதன் தொடக்கக் காலப் பணிகளாய் அமைந்தன. அவ்வாறிருந்த அமைப்பை விடுதலை மறவர்களின் பாசறையாக மாற்றியமைத்த சிறப்பு திலகர் பெருமானையே சாரும். அவரே, ''ஆங்கில மோகம் என்னும் காரிருளிலிருந்து தாய்மொழிப்பற்று என்னும் பேரொளிக்குக் காங்கிரசைக் கொண்டுவந்த பெருமைக்குரியவர்.''[1] அவருக்குப்பின் காந்தியடிகளால் மாநில மொழிகள் தம் வளர்ச்சியின் இன்றியமையாமை மேலும் வலியுறுத்தப் பட்டது.

0.2 ஆள்வோரின் மொழியாகிய ஆங்கிலம் அலுவலகம், கல்வியகம் எனப் பல நிலைகளில் அரசோச்சியது. ஆட்சியெதிர்ப்பு ஆங்கில மொழி மேலாண்மையெதிர்ப்பையும் உள்ளடக்கியது என்பது பின்னரே உணரப்பட்டது. இந்திய மக்களின் எழுச்சி அவரவர் தாய்மொழிவாயிலாகவே எளிதில் இயல்வது என்பதும், இந்திய மொழிகளின் வளர்ச்சி ஆங்கில மேலாண்மையின் தளர்ச்சி என்பதும் புலப்பட்டன. காங்கிரசின் செயற்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக மாநில மொழிகளின் வளர்ச்சி ஏற்றுக் கொள்ளப்பட்டது (நாகபுரி 1920). மாநிலந்தோறும் காங்கிரசின் செயற்பாடுகள் அந்தந்த மாநில மொழியின் வாயிலாகவே மேற்கொள்ளப்பட்டன. தலைவர்கள் மாநில மொழிகளின் வாயிலாகவே மக்களை அணுகினர். மாநில மொழிகளே மேடைகளில் ஒலித்தன; தாளிகைகளில், நூல்களில் இடம் பெற்றன; இலக்கியங்களாய் எழுச்சி தந்தன. நாட்டுப் பற்றோடு மொழிப்பற்றும் வளர்ந்தது. விடுதலை இயக்க வளர்ச்சி மாநில மொழிகளின் வளர்ச்சியாகவும் மாநில மொழிகளின் வளர்ச்சி விடுதலை இயக்க வளர்ச்சியாகவும் பிணைந்தன.

0.3 தமிழ்நாட்டிலும் திலகர் காலத்திலேயே விடுதலை இயக்கம் வலுவாக வேரூன்றியது. இங்கு மக்கள் இயக்கமாக அதை மாற்றிய பெருமை வ. உ. சிதம்பரனார், பாரதியார், சுப்பிரமணிய சிவா, வ.வே.சு. ஐயர் முதலியோரைச் சாரும். பட்டம் பதவிகளைத் துறந்தும் பலவகைத் துன்பங்களுக்கு ஆளாகியும் உயிரைப் பொருட்படுத்தாது நாட்டுப் பணியாற்றிய அவர்கள் திலகரின் ஆதரவாளர்கள். செழுந்தமிழ் அறிவு வாய்ந்தவர்கள். வ.உ.சி. மதுரைத் தமிழ்ச் சங்கம் மனமுவந்து உறுப்பினராய் ஏற்றுப் பெருமை கொண்ட புலமையாளர். பாரதியார் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். சுப்பிரமணிய சிவா 'தனித் தமிழ் அரிமா.'[2] வ வே சு. ஐயர் கம்பனில் தோய்ந்தவர். தமிழறிவு வாய்ந்த இத்தகு தலைவர்கள் தமிழில் முழங்கினர்; தமிழில் எழுதினர். பேச்சும் எழுத்தும் விடுதலை இயக்கத்தைப் பெரிதும் வளர்த்தன. தமிழால் விடுதலை இயக்கமும் விடுதலை இயக்கத்தால் தமிழும் வளர்ந்தன.

0.4 தமிழ் வளர்ச்சியில் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்றவர் பாரதிதாசன் என்பது உலகறிந்த உண்மை. இந்திய விடுதலை இயக்க வளர்ச்சியிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது என்பது பலர் அறியாத உண்மை. பிற்காலத்தில் தமிழக விடுதலை

முழக்கஞ் செய்த பாரதிதாசன் முற்காலத்தில் தன் தலைவர் பாரதியாரை அடியொற்றி இந்திய விடுதலையைக் குறிக் கோளாகக் கொண்டு பல பாடல்கள் எழுதிப் பணியாற்றினார். எனினும் ''பாரதியார், தேசபக்திக்கே-ஏகாதிபத்திய எதிர்ப்புக்கே முதன்மை தந்தார். பாரதிதாசனார், அதனை இரண்டாந்தர மாகக் கூட ஏற்கத் தவறிவிட்டார்.''[3] ''தமிழ்நாட்டின் அரசியல் சூழ்நிலை காரணமாக அரசியல் விடுதலைப் போருக்கு அன்னிய ராகவே வாழ்ந்தார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.''[4] ''பாரதி தாசன், அவர் காலத்தில் நடந்த ஏகாதிபத்திய எதிர்ப்பியக் கத்தைப் பிரதிபலிக்க முன்வரவில்லை''[5] எனும் ஆய்வாளர்தம் குறிப்புகள், இந்திய விடுதலை இயக்கத்திற்குப் பாரதிதாசன் ஆற்றிய பணிகள் பலராலும் சரிவர அறியப்படவில்லை என் பதையே அறிவிக்கின்றன. இன்று இலைமறை காயாக இருக் கும் அப்பணியை எல்லோரும் அறியும் வகையில் துலக்கிக் காட்டுவதே இந்நூல்.

# 1 : பாரதியாரைக் கண்டறிவதற்கு முன்பே

1.0 புதுவை பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அங்கே பிறந்து வளர்ந்த பாரதிதாசன் தன்னை 'ஓர் இந்தியன்' எனப் பெரு மிதமாகச் சொல்லிக் கொள்வதற்குக் காரணமாக அமைந்தவை பாரதியாரின் 'இந்தியா' இதழும் 'சுதேச கீதங்கள்' எனும் பாரதி யாரின் பாடல் தொகுப்புமேயாகும். பாரதியாரைக் கண்டறி வதற்கு முன்பே இவை இரண்டும் பாரதிதாசனுக்கு நன்கு அறி முகமாயிருந்தன.

1.1 பாரதியார் 1908ஆம் ஆண்டு செப்டம்பர் வாக்கில் புதுவை புகுந்தார். செப்டம்பர் கடைசி வாரம்வரை சென்னையிலிருந்து வெளியான 'இந்தியா' இதழ் அக்டோபர் 20 முதல் புதுச்சேரி யிலிருந்து மீண்டும் அச்சிடப்பட்டு 1910 மார்ச்சு 12 வரை வெளி யிடப்பட்டுள்ளது. பாரதியாரின் முதல் நூலான 'ஸ்வதேச கீதங்கள்' 1907இல் மூன்று பாடல்களை உள்ளடக்கியும் 1908இல் பதினான்கு பாடல்களை உள்ளடக்கியும் சென்னையி லிருந்து வெளியிடப்பட்டது. பாரதியார் புதுவை சென்றபின்

1909இல் 'ஜன்மபூமி' என்ற பெயரில் தம் ஸ்வதேச கீதங்கள் என்னும் நூலுக்கு இரண்டாம் பாகத்தை வெளியிட்டார்.[6]

1.2 புதுவையிலிருந்து வெளியான 'இந்தியா' இதழ்களையும் சுதேச கீதங்களையும் பாரதிதாசன் நன்கு அறிந்திருந்தார். அவரே கூறுகிறார்:

> (இந்தியா பத்திரிகையில்) சித்திர விளக்கமும் தெளிவாக எழுதியிருக்கும். படங்கள் ராஜீய சம்பந்தமானவை. அர்த்த புஷ்டியுள்ளவை. பத்திரிகை வெளி வருவதை வாசகர்கள் ஆவலோடு எதிர்ப்பார்ப்பார்கள். படத்தை வெட்டி அட்டையில் ஒட்டிவிட்டுச் சுவரில் தொங்கவிட்டு வைப்பார்கள். ஒவ்வொரு படமும் இங்லீஷ்காரனுக்கும் இந்தியனுக்கும் உள்ள சம்பந்தத்தை இங்கிலீஷ்காரனிடம் இந்தியன் அனுபவிப்பதைத் குத்தலாக எடுத்துக்காட்டு வதுதான் அந்தப் பத்திரிகையிலேயே சுவையான பகுதி. அந்தச் சித்திரம்தான் முதலில் என்னைத் தன் பரிவாரங் களின் பக்கமாக இழுத்தது. அந்தச் சித்திரம் என்னை இன்னானென்று எனக்குக் கூறிற்று... பாரதியாரும் தூத்துக்குடி சிதம்பரம்பிள்ளையும் சேர்ந்து பாடி வெளி யிட்ட ''சுதேச கீதங்கள்'' புதுச்சேரியில் படித்தவர்களிடை உலவியிருந்தது. குவளை (கிருஷ்ணமாச்சாரி) அந்தப் பாட்டுக்களில் சிலவற்றைக் கூவிப் பாட நான் கேட்டிருக் கிறேன். என் ஆசைக்கு ஒரு புத்தகம் கிடைத்தது ஒரு நாள்.
>
> சுதேச கீதங்களை நான் படித்து வந்தேன். ராகத்தோடு முணுமுணுத்து வந்தேன். இந்தியா பத்திரிகையின் சித்திர விளக்கங்கள், சிறுகதைகள், ஈசுவரன் தரும ராஜாகோயில் தெருவின் விளைவுகள், குவளையின் கூச்சல் இவைகள் எல்லாம் சுதேச கீதத்தின் உட்பொருளை எனக்கு விளக்கின. அதன் பிறகு கொஞ்சம் விஷயமான உணர்வோடும் ''நான் ஓர் இந்தியன்'' என்ற அகம்பாவத்தோடும் அப்பாடல்களை என்னால் பாட முடிந்தது நாளடைவில்.[7]

இக்குறிப்பு எதைக் காட்டுகிறது? பிரெஞ்சுப் புதுவையில் வாழ்ந்த பாரதிதாசன் தன்னை ஓர் இந்தியனாக உளமாரக் கருதத் தொடங்கி விட்டார் என்பதைத்தானே.

# 2 : பாரதியார் அறிமுகம்

2.1 பாரதியார் 'வல்லூறு நாயக்கர்' என்று தன் கட்டுரைகளில் குறிப்பிடும் வேணு நாயக்கர், அவரின் நெருங்கிய நண்பர். பாரதிதாசனின் உடற் பயிற்சியாசிரியர். அவரின் திருமண விழாவிலேயே பாரதிதாசன் பாரதியாரை முதன் முதலில் இன்னா ரென்று அறிந்தார். அதற்குமுன் ''வீதியில் அடிக்கடி பார்த்து 'இவர் ரவிவர்மாப் படத்தில் காணும் பரமசிவம்போல் இருக் கிறார்' என்று ஒப்புக் கூட்டி நினைத்த மனிதர்'' பாரதியார்தான் என்பது புலனாயிற்று. தொடர்பும் தொடங்கியது. அந்நிகழ்ச் சியைப் பாரதிதாசனே நினைவு கூர்வதைப் பார்ப்போம்:

> எனது கொட்டடி வாத்தியார் வேணு நாயக்கருக்குக் கலியாணம் வந்தது. மாலை 3 மணிக்குக் கலியாணப் பந்தலில் பாட்டுக் கச்சேரி நடந்தது. பாடகரில் நானும் ஒருவன்.
>
> கணீரென்று ஆரம்பித்தேன் ''வீர சுதந்திரம் வேண்டி நின் றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ'' என்பதை. அப் போது என் பின்புறமாக இதற்கு முன் நான் வீதியில் பார்த்த சில உருவங்கள் உட்கார்ந்திருந்தன. அவற்றில் ஒன்று ''ரவிவர்மாப் பரமசிவம்.''
>
> வேணு நாயக்கர் ''இன்னும் பாடு, சுப்பு'' என்றார். நான் ''தொன்று நிகழ்ந்த தனைத்தும்'' என்ற பாட்டைப் பாடினேன். சபையில் இருந்தவர்கள் மொத்தம் முப்பது பேர்கள் இருக்கும். 30 பேர்வழிகளில் சுமார் 25 பேர்கள் நான் பாடும்போது, அந்த ரவிவர்மாப் பரமசிவத்தையே பார்க்கிறார்கள். அந்த ரவிவர்மாப் பரமசிவத்தின் பெயர், விலாசம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. ஆனால், அவர் ஓர் குறிப்பிடத்தக்கவராய் இருக்கலாம் என்று தோன்றிற்று.
>
> என்னை மேலும் பாடச் சொன்னார் வேணு நாயக்கர். பாடினேன்.
>
> அப்போது, வேணு நாயக்கர், ''அவுங்க ஆர் தெரியு மில்ல?'' என்று கேட்டார்.

தெரியாது என்றுகூட நான் சொல்லி முடிக்கவில்லை. ரவிவர்மாப்படம், ''நீங்க தமிழ் வாசிச்சிருக்கிங்களோ?'' என்று கேட்டார்.

நான்: கொஞ்சம்

படம்: உணர்ந்து பாடுகிறீர்கள்.

வேணு நாயக்கர், அப்போது, ''அவங்கதானே அந்தப் பாட்டெல்லாம் போட்டது! சுப்பிரமணிய பாரதி என்று சொல்றாங்கல்ல?'' என்று பரமசிவப் படத்தை எனக்கு அறிமுகப் படுத்தினார்.[8]

இதிலிருந்து திருமண நிகழ்ச்சியிலும் தேசியப் பாடல்களைப் பாடும் பாரதிதாசன் நமக்குத் தெரிகிறார். பாரதியின் தேசப் பாடல்களைப் பாரதிதாசன் உணர்ந்து பாடிய முறையே இரு வர்க்கும் தொடர்பு முகிழ்க்கக் காரணமாயமைந்ததை அறி கிறோம்.

கீர்த்தனைகள், இலாவணிப் பாட்டு, வண்ணப் பாடல்கள் முதலிய பிற இசைப் பாடல்களை இயற்றவும் பாடவும் தெரிந் திருந்த சுப்புரத்தினம் அவற்றைத் தவிர்த்துத் தேசியப் பாடல் களைப் பாடியது மனங்கொள்ளத்தக்கது.[9]

2.2 திருமண நிகழ்ச்சியில் பாரதிதாசன் பாடிய பாரதியின் இரண்டு பாடல்களில் 'வீர சுதந்திரம் வேண்டி நின்றார்' என்று தொடங்கு வது 1908இல் சென்னையிலிருந்து வெளியான தொகுப்பில் உள்ளது. மற்றொன்றான 'தோன்று நிகழ்ந்த தனைத்தும்' எனத் தொடங்கும் பாடல் 1907-1908ஆம் ஆண்டுகளில் சென்னையிலிருந்து வெளியான தொகுப்புகளில் இடம் பெறாதது. 1909 மார்ச்சு மாத வாக்கில் புதுவையிலிருந்து வெளியான 'ஜன்மபூமி' தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. எனவே, பாரதி யார் பாரதிதாசன் அறிமுகம் 1909இல் மார்ச்சுக்குப்பின் நடந் திருக்கும் எனலாம்.

2.2.1 பாரதியாரை இன்னாரென்று அறிவதற்குமுன் ''இந்தியா பத்திரிகையைத்தான் எனக்கு நன்றாய்த் தெரியும். அப்போ தெல்லாம் நான் சர்க்கார் தமிழாசிரியனாகிவிட்டேன்''[10] எனவும் பாரதிதாசன் குறிப்பிடுவதிலிருந்து அவர் ஆசிரியப் பணியேற்ற பின்னரே பாரதியார் தொடர்பு ஏற்பட்டது என்று தெரிகிறது.

பாரதிதாசன் 16.7.1909இல் காரைக்காலை அடுத்த நிரவியில் உள்ள அரசினர் பள்ளியில்தான் முதன்முதல் ஆசிரியப் பொறுப் பேற்றார்.[11] ஆக அதன் பின்னரே சந்திப்பு நிகழ்ந்திருக்க வேண்டும்.

2.2.2 'கல்யாணப் பந்தலில் சந்திப்பு' நிகழ்ந்த காலக் கட்டத்தை ''இந்தியா பத்திரிகை நின்றுவிட்டது. அதன் பிறகு பாரதியார் சின்னைய ரத்தினசாமி நாயுடுவுடன் ஆரம்பித்து நடத்தி வந்த சூரியோதயமும் நின்று விட்டது......நின்று சுமார் ஓராண்டும் ஆயிற்று''[12] என்று பாரதிதாசனே குறிப்பிடுகிறார். 1906 மே மாதம் முதல் சென்னையிலிருந்து வெளிவந்த 'இந்தியா' வார இதழ் பாரதியார் புதுவைக்குச் சென்றபின் 1908 அக்டோபர் முதல் அங்கிருந்து வெளிவந்து 1910 மார்ச்சு 12 ஆம் நாளிட்ட இதழோடு நின்றுவிட்டது. பாரதியார் தொடர்ந்து எழுதி வந் ததும் சைகோன் சின்னையா பொறுப்பேற்று நடத்தியதுமான 'சூரியோதயம்' இதழும் 1910 ஜூனில் மறைந்துவிட்டது.[13] இவ்விரண்டு இதழ்களும் நின்றபின் சுமார் ஓராண்டு கழித்துச் சந்திப்பு நிகழ்ந்தது எனப் பாரதிதாசனே குறிப்பிடுவதால் 1911இல் தொடர்பு தொடங்கியிருக்குமோ எனக் கருத முடிகிறது.

2.2.3 ''பாரதியாரோடு பத்தாண்டுகள் பழகிய நினைவுகளைக் கூறும் தொடரில் முதல் கட்டுரை இது ஆகும்'' என்னும் குறிப் போடு 'பாரதியாரோடு பத்தாண்டுகள்' எனுந் தொடர் 'பாரதி தாசன் குயில்' திங்கள் இதழில் (10.5.1967) தொடங்கியது. 'பாரதியாரோடு பத்தாண்டுகள்' என்னுந் தலைப்பிட்ட, பாரதி யாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறும் பாவேந்தரின் கை யெழுத்துப்படி நூலொன்றும் உள்ளது.[14] மேலும் ''சுமார் 10 ஆண்டுகள் பாரதியாரோடு சுப்புரத்தினம் அவர்கள் நெருங்கிய பழக்கம் உடையவர். இன்று பாரதிதாஸன் அவர்கள் வாயால், நமது சுப்ரமண்ய பாரதியார் அனுபவத்தைக் கேட்பவர் அடங் காத ஆச்சர்யத்தையும் உயர்ந்த கருத்துக்களையும் பெறாமற் போகார்''[15] என்னுங் குறிப்பும் இருவர்க்குமிடையிலான பழக்கம் ஏறத்தாழப் பத்தாண்டுகள் கால அளவினது எனத் தெரிவிக் கின்றன. பத்தாண்டுகள் என்பது பாரதியார் புதுவையில் வாழ்ந்த 1908 முதல் 1918 வரையான கால அளவைக் குறிப்பதாகக் கருதலாகாதா எனத் தோன்றும். பாரதியார் புதுவை வந்து சில ஆண்டுகள் கழிந்த பின்னரே பாரதிதாசனுக்கு அவரோடு தொடர்பு ஏற்பட்டது என்பது முன்னர் விளக்கப்பட்டது. மேலும் ''பாரதியார் கி.பி. 1908இல் புதுச்சேரி வந்தார். அவர் புதுச்

சேரி வந்து ஓரிரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் அவருக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது. பழக்கம் ஏற்பட்ட நேரத்தில் நான் இருபது வயதுக்காளை. சரியாகச் சொன்னால் முரட்டுக் காளை''[16] எனவும் ''பாரதியாரை நான் முதலில் சந்தித்தபோது எனக்கு வயது இருபதிருக்கும்''[17] எனவும் அமைந்த பாரதி தாசன் கூற்றுகள் 1908 முதல் பாரதியாரொடு பழக்கம் இருந்தது எனக் கொள்வதற்கு இடந்தரவில்லை. மேலும் 29.4.1891இல் பிறந்த பாரதிதாசன், பாரதியாரொடு பழக்கம் ஏற்பட்டபோது தனக்கு இருபது வயது என்பதிலிருந்து 1911இல் தொடர்பு தொடங்கியது எனக் கருதமுடிகிறது.

2.2.4 பாரதியார் 1921 செப்டம்பர் 12 இல் காலமாகிறார். இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர், பாரதிதாசனின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பாரதியார் எடுத்துக்கொண்ட படமே இன்று நாடு முழுவதும் புகழ் பெற்று விளங்கும் 'ஓவல்' வடிவப்பாரதிப்படம். 'சென்னை பிராட்வேயில், ரத்னா கம்பெனி யில் வி. எஸ். சர்மா என்ற இளைஞர் எடுத்த முழுவுருவப் படத்திலிருந்து கிடைத்த' இப்படம் ''புதுவை நண்பர் பாரதி தாசனுக்கு அனுப்ப 1921 ஜூலை மாதம் எடுத்துக் கொண்ட புகைப்படம்''[18]. இச்செய்தி பாரதியாரொடு இறுதிக் காலம் வரை பாரதிதாசனுக்குத் தொடர்பிருந்தது என்பதைத் தெரிவிக் கிறது. ஆக, பத்தாண்டுத் தொடர்பு என்பது 1911 முதல் 1921 வரையிலான தொடர்பு எனக் கொள்ள முடிகிறது.

2.2.5 'பத்திரிகைகள் நின்று **சுமார்** ஓராண்டுக் காலம்', 'பாரதி யாரிடம் **சுமார்** பத்தாண்டுகளுக்கு மேல்'' அவர் புதுச்சேரிக்கு வந்து ஓரிரண்டு ஆண்டுகள் கழித்துத்தான்' எனத் தோராய மாகவே கால எல்லை குறிக்கப்படுவதும், ஒரு சொற்பொழிவில் ''ஏறக்குறைய பன்னிரண்டு யாண்டுகள் பாரதியாரொடு தொடர்புகொண்டிருந்தேன்''[19] என்று குறிப்பிடுவதும் நோக்கத் தக்கன. 1911இல் பாரதியாரின் அணுக்கத் தொண்டராகி விடுதலை இயக்க வினைப்பாடுகளில் முனைப்பாக ஈடுபடும் பாரதிதாசனைப் பார்க்க முடிகிறது. ஆக இருவருக்குமிடையிலான அறிமுகம் 1910 இன் இறுதி அல்லது 1911இன் தொடக்கத்தில் நிகழ்ந்திருக்கலாம்.[20]

# 3 : பேராயக் கட்சியில்...

3.0 காங்கிரசுக் கட்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டு பாடுபட்டவர் பாரதியார். 1905இல் கயா காங்கிரசில் சுதேசமித்திரன் செய்தியாளராகவும், 1906இல் கல்கத்தா, 1907இல் சூரத் காங்கிரசு மாநாடுகளில் பேராளராகவும் கலந்துகொண்டு அறிக்கை விடுத்து அணி திரட்டியவர். சென்னையிலிருந்து சூரத் மாநாட்டுக்குப் புறப்பட்டது முதல் மாநாடு முடிந்து சென்னை திரும்பியது வரையிலான செய்திகளை 'எங்கள் காங்கிரஸ் யாத்திரை' என நூல் வடிவில் (1908) தந்தவர், ''இந்தியாவின் நலத்தை விரும்பும் எல்லோருக்கும் காங்கிரஸ் முறைகளில் பல சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒருங்கே தோன்றுகிறது''[21] எனக் கருத்தறிவித்துப் பல சீர்திருத்தங்களைக் குறித்தவர். பேராயக் கட்சியைக் 'காங்கிரசு தேவி' எனப் பாரதியார் குறித்திருப்பினும் அதைப்பற்றித் தனியாகப் புகழ்ந்து பாடல் எதுவும் எழுதியதாகத் தெரியவில்லை அந்த இடைவெளியை அவரின் தொண்டர் பாரதிதாசன் நிரப்பியிருக்கிறார்.

3.0.1 பேராயக் கட்சியில் தன்னைப் பிணைத்துக்கொண்ட பாரதிதாசன் அதனை வலுப்படுத்தும் வகையில் பல பாடல்களைப் புதுவையிலிருந்து வெளிவந்த 'தேசசேவகன்' 'ஆத்மசக்தி' முதலிய இதழ்களில் எழுதினார்.[22]

3.1 பேராயக் கட்சியைத் 'தேச மகா மன்றம் (காங்கிரஸ்)' என்னும் தலைப்பில் (தே. சே. 13-3-1923) பாடுகிறார். ''முப்பத்து முக்கோடி மாந்தர் கருத்தில் முளைத்த பெருந்தெய்வம்,'' ''சத்திய மன்றம்'', ''உத்தம மன்றம்'' என்றெல்லாம் போற்றி

மன்றத்தைப் போற்றுவதா லுங்கள் செய்கைகள்
மாதவ மாகுமடா - அவை
மாதவ மாகுமடா - அந்தக்

குன்றத்தை வாய்மைக் குணக்கூட்டை மீறுதல்
குற்றம் பெருங்குற்றமாம் - அது
குற்றம் பெருங்குற்றமாம்

தின்றிடும் சோறும் பிடுங்கப் படாதது
தேசமன் றத்துணையால் -இந்தத்
தேசமன் றத்துணையால் - ஒரு

கன்றுக்குச் சொந்தம் கறந்திடும் பால்இக்
கருத்தை நிசம்புரிவீர் - இக்
கருத்தை நிசம்புரிவீர்

என்று 'மன்றத்தின் கட்டளையை மீறுதல் குற்றம், அதன் துணையால்தான் உரிமைகள் அனைத்தும் பாதுகாக்கப்படும்' என அறிவுறுத்துகிறார். மேலும்,

இப்பொழுதே உங்கள் தெய்வ மகாமன்
றிணையற்ற தாக்கிடுவீர்—சென்
றிணையற்ற தாக்கிடுவீர்—நீர்

அர்ப்பணம் செய்திடுவீர் அந்த மன்றத்தின்
ஆணைக் குயிர்பொருள்கள்—அதன்
ஆணைக்குயிர்பொருள்கள்......

சத்திய மன்றிச் சழக்கிய லாவகை
தாயருளாகுமன்றம்—அது
தாயருளாகுமன்றம்—அந்த

உத்தம மன்றினை வாழ்த்திடுவீர்—அதை
ஓங்கப் புரிந்திடுவீர்—வெற்றி
ஓங்கப் புரிந்திடுவீர்

என்று மன்றத்தை வாழ்த்தவும் வளர்க்கவும் வேண்டுகிறார்.

3.2 'பாரத சமூக மன்றம் (காங்கிரஸ்) சொல்லுகிறது' என்னும் தலைப்பில் பேராயக் கட்சி மக்களை நோக்கிப் பேசுவதாக அமைந்த பிறிதொரு பாடலில் (தே. சே. 26.12.1922)

இட்டது சட்டமெனப் பிறரால்—இன்று
ஏவப் படுவதை ஒப்புகின்றார்
சட்ட மென்றே ஒரு தெய்வமில்லை—ஒரு
சமூகம் ஒப்புதல் சட்டமடா !

எனச் சட்டத்திற்குப் புது விளக்கமளித்து,

நெஞ்சி லிருக்குது தேசப்பணி—இந்த
நேரத்தில் மாயை மறைக்குதென்றீர்
அஞ்சிக் கிடப்பதில் ஆசையெனில்—உங்கள்
ஆண்மைக் குடிக்குள்ள ஆண்மை யெங்கே ?

என்று வினவுவதோடு,

எள்ளும் கடைசி வருஷம்வரை—மிச்சம்
இல்லையென் றாக்கிய கொத்தடிமை
தள்ள எண்ணாவிடில் சாதல்நன்று—கெட்ட
சாவை எதிர்ப்பவர் சாதல்நன்று

என அடிமை வாழ்வின் இழிவைச் சுட்டிக்காட்டுகிறார். மேலும்,

மண்ணிற் குழைத்த பசுக்குலம்போல்—நதிப்
பள்ளத்தி லோடும் சலத்திரள்போல்
கிண்ணத்தி விட்ட மணித்திரள்போல்—இனிக்
கேடடைந் த பல கோடியினர்,

கண்ணிய மெண்ணி ஒரேமனதாய்—ஒரு
காரிய மாயின் அரைநொடியில்
பண்ணி விட்டால் இந்தப் பார்மதிக்கும்—இந்தப்
பாரத நாட்டினைப் பார்மதிக்கும்

என்று 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, உலகம் மதிக்கும்' என்பதை அறிவுறுத்துகிறார்.

## 4 : பாரதம் போற்றல்

4.0 பாரதியார் 13.2.1906 சுதேசமித்திரன் இதழில் ஒரு 'விண்ணப்பம்' விடுக்கிறார். ''எமது தாய்நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும், தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கிறேனாதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரதநாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்களாயின் அவர்மாட்டு மிக்க கடப்பாடுடையவனாவேன். தமிழ்ப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் நாட்டுப் படலங்களில் நிடதம் கோசலம் முதலிய பகுதிகளைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்படமாட்டா. தற்காலத்தே தமிழ்ப் புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேசபக்தி'ப் பாக்கள் புனைந்தனுப்புவராயின் அவையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்''[23] இவ்விண்ணப்பம் பாரதமணித்திருநாட்டைப் போற்றும் ஆங்கிலம், தமிழ் மொழிப் பாடல்கள் பலவற்றையும் தொகுத்துப் பதிப்பி

பதிலும், புதிய தேசபக்திப் பாடல்கள் தமிழில் புனையப்பட வேண்டுமென்பதிலும் பாரதிக்கிருந்த மிகுந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றது. இதற்குப் பின்னரே 1907இல் பாரதியின் 'வந்தே மாதரமென்போம்' 'எந்தையும் தாயும்' 'மன்னுமிமய மலை' என்னும் மூன்று தேசியப் பாடல்களடங்கிய முதல் வெளியீடு திரு வி. கிருஷ்ணசாமி ஐயரால் இலவசமாக வெளியிடப்படுகின்றது. பின்னர் 'ஸ்வதேச கீதங்கள்' (1908) 'ஜன்மபூமி' (1909) தொகுப்புகள் வெளியாகின்றன. தொடக்கத்தில் 'தேச பக்திப் பாடல்கள்' வேண்டுமென மற்றவர்களை நோக்கி விண்ணப்பம் விடுத்த பாரதியாரே மற்றவர்கள் எவரினும் பாரத நாட்டை 'வந்தனை கூறி மனத்தில் இருத்தி வாயுற வாழ்த்திப்' பாடுபவராக மலர்ச்சி பெறுகிறார். அவரை அடியொற்றிப் பாரதிதாசனும் பாரத நாட்டைப் பல பாடல்களில் பலவாறு போற்றுகிறார்.

4.1 'தெய்வீகத் தாய்நாடு' (தே. சே. 7.11.1922) எனும் பாடல் பாரத நாட்டைத் தாயாக உருவகப்படுத்தி ''யோகத்தின் தாய் கொள்கை வேகத்தின் தாய் செய்யும் யாகத்தின் தாய்'', 'ஆறு சமயத்தின் தாய்', 'நாலு வேதத்தின் தாய்', 'நாலு சாதிக்குத் தாய்', 'சீதை, அசோதை, புத்தர், சித்தர், நாரதன், பகீரதன், சோழன், சேரன், கம்பன், விசயன்' முதலிய பலருக்கும் தாய் எனப் பலபடப் பாராட்டுகிறது. ஓரிடத்தில் ''சீனச் சிங்கர்க்குத் தாய்'' எனக் குறிப்பிடுவது ஆராய்தற்குரியது.

4.2 பராசக்தியை விளித்து 'உலகத்தை ஓங்கச் செய், கலகத்தை நீங்கச் செய்' எனத் தொடங்கும் 'உடைமை நாடு' எனும் பாடல் (தே. சே. 28.11.1922),

காலப் பெருங்கடலில் — நாளும்
கரைந்த தோற்றமெலாம்
பாலப் பருவமுதல் — எங்கள்
பாரதத் தாய்அறிவாள்
நாலு திசைமுழுதும் — கொள்கை
நாற்பதி னாயிரத்தார்
ஆலின் கிளையவைகள் — என்னில்
ஆக்கும்மரம் இவள்தான்

எனப் பாரதத் தாயை அடிமரமாக உருவகப்படுத்தி அவளே இயக்கல், மாற்றுதல், இணைத்தல், உணர்த்தல் என்னும்

நான்கு தொழில்களின் அடிப்படையில் நான்கு வருணங்களைப் பகுத்துரைத்தாள்,

''இயக்கல்'' ''மாற்றுத''லும்—ஒருங்
''கிணைத்தல்'' ''உணர்த்தலா''ம்
செயலின் நான்குபெயர்—இவை
செய்வது நால்வருணம்
இயக்கல் சூத்திரராம்—மாற்றல்
இயம்பும் வாணிபராம்
முயற்சி கொண்டிணைத்தல்—தன்னை
முடித்தல் வல்லரசர்
உணர்த்தல் பார்ப்பனராம்—அன்னை
உரையின் கீர்த்திகண்டாய் !
பணத்தில் சாதியில்லை—ஏழைப்
பறையர் தாழ்மையில்லை
பிணத்தில் செய்கையில்லை—அது
பெரிதும் தாழ்ந்ததுதான்
துணைக்கு நான்குமல்லால்—ஒன்றைத்
தீண்டிடல் தீமையென்பாள்

என்று நால் வருணத்திற்குப் புதுவகையான விளக்கமளித்ததாகப் பாடி ''முப்பது கோடி மக்கள் பெற்ற முதன்மைத் தெய்விகத்தாள்'' ஆகிய பாரதத் தாயின் 'உடைமைகளை ஊன் சிலிர்க்கப்' பாடுகிறார் பாரதிதாசன். நால் வருணத்திற்குப் பாடல்களிலும், உரைநடையிலும் பாரதி அளித்துள்ள சில விளக்கங்களோடு, மேற்சுட்டிய விளக்கம் ஒருபுடையொத்தது.[24]

4.3 'கொள்கைத் திருநாடு' (தே. சே. 20.2.1923) எனும் பாடல் 'நீத மன்னர், பல ஞானியர் இன்னுடல் நீத்த மண் இது', 'அந்த நாளில் கண்ணன், அருச்சுனன், வில்விதுரன் அறங்காத்தனர். விண்ணின் மதியொத்த பண்டைய வாழ்வை நினைத்தால் வீரம் உண்டாகு தென்தோளில்' எனப் பாரதியை அடியொற்றிச் சென்று,

கம்பன் அருள்கவி காளியின் நற்கன
வார்ந்ததும் இந்தத் தேசமே—எனில்
இம்பரிற் கோள்நிலை எண்குறி யாவும்அப்
பாற்கர னாருபதேசமே''

எனப் பாரத நாட்டின் பெருமைகளைப் பேசுகிறது.

4.4 'அன்பு தரும் பாரதத் தாய்' (தே. சே. 17.4.1923) அனைத்துப் பொருள்களிலும் தன் அழகைக் காட்டுகிறாளாம். 'சின்னஞ் சிறு வண்டு, சித்திரத்தேன் பூக்கள், தென்னமரத் தோப்பு, சீதத்தென்றற் காற்று, பாய்ந்திடும் வீரப்புலி, பாடிடும் சாந்தக் குயில்...' முதலியவற்றோடு,

கன்னியும் நாதனும் காதல் அறம்செய்யும்
பின்னிய ஓலைக் குடிசை தனக்குள்ளும்...
பேர்ந்த பழஞ்செங்கல் பிள்ளைப் பழம் பொம்மை
தேர்ந்த கதையுரைக்கும் சின்னங் களுக்குள்ளும்...
காட்டிற் சிறுகோயில் — அதிலெந்தக்
காலத்திலும் பூசை—அங்குப்
பாட்டைத் திருடர்கள் பச்சைக் கொலைவேடர்
கூட்டத்திலும் தெய்வக் கொள்கை யிருப்பதில்...

நிழலை வெறுத்தங்கு நெல்லை வளர்க்கின்ற
தொழில் புரியும்பறைச் சோதரர் தோளுக்குள் ...

என எல்லாப் பொருள்களிலும் தன்னெழில் காட்டுகிறாள் பாரதத் தாய்.

முழுதும் அவள் ரூபம்—எனில் நாட்டின்
மோகத்தில் என் வாழ்வு—அவள்
எழிலுண்டு கண்ணேரில் இழிவென்ப தொன்றில்லை...

எனப் புதுமை பொலியப் பாடுகிறார் பாரதிதாசன்.

4.5 'நெஞ்சில் ஏறும் கனல் நிகர்த்த பாரதத் தேவி தனது ஆசையைப் பெருக வைக்கும் பாடல்களை அன்றாடம் பாடு' எனப் பாரதிதாசனை வேண்டுகிறாளாம். அவரும் பாரதத்தாரை நோக்கித் 'துன்பங்களைக் கண்டு மலைக்க வேண்டாம்'

வாழ்விற் கலந்திருந்த இன்பம்—உங்கள்
வாய்க்குத் தவறிவிட்ட தென்றே— இந்தப்
போழ்தில் உரைக்குவரும் பேச்சில்—உள்ள
போக்கில் மலைத்துவிட வேண்டா
ஆழ்ந்து மிதந்துவரும் மீன்கள்—கடல்
ஆழந்தனை மலைப்ப துண்டோ...

என வினவி,

வெள்ளம் மடைதிறந்த வாறே—உங்கள்
வீரர் நிலத்தில்வைத்த மோகம்—அதற்
குள்ள மனவுறுதி யோடே—அச்சம்
ஒட்டிப் பணிபுரிந்து வாழ்வீர்'

என வாழும் வகையை விளக்குகிறார் (தே. சே. 29.5.23).

பாரதியின் ''...நாட்டு மக்கள் பிணியும் வறுமையும் நையப் பாடென்று ஒரு தெய்வம் கூறுமே...'' எனவரும் ''பராசக்தி'' பாடல் ஈண்டு எண்ணத்தக்கது.

## 5 : மேலான விடுதலை

5.1 விடுதலையின் மேன்மையைப் பல பாடல்களில் புலப்படுத்து கிறார் பாரதிதாசன். பாரதியின் வீச்சு படிந்துள்ள அப்பாடல் களில் ஒன்று 'சுதந்திரம் அமரத்தன்மை' (தே.சே 24.4.1923, 1.5.1923) என்பது.

ஆன விடுதலைப் பூமி—எது
வாயினும் அஃது நலந்தரும் வானம்

என விடுதலை பொருந்திய நாட்டைத் தெய்வ உலகமென்றும்

கட்டை விலக்காத நாய்க்கு—நல்ல
கைலைமலை நரகாகி வருத்தும்

என அடிமைகள் வாழும் பகுதி நரகமாகுமென்றும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். இப்பாடலில் 'தேவர்' என்னுஞ் சொல்லுக்குப் புது விளக்கம் தருகிறார்.

தேவர்கள் யார்என்று கேட்பீர்—வீரம்
சேர்ந்திடும் வாய்மை படைத்தவர் தேவர்
ஆவதும் தீவதும் எண்ணா—தறம்
ஆண்மைத் தனத்தில் இயற்றுவர் தேவர்
வில்லைப் பிடிக்கின்ற தோளும்—நல்ல
வேதம் படிக்கின்ற மேலான நெஞ்சும்
நல்ல வியாபார நோக்கும்—விதை
நட்டுப் பயிர்செய்யும் தாய்போன்ற அன்பும்

நாலும் நலங்கு தலின்றி—ஒரு
நாயும் எறும்பும் அழுங்குர லின்றிச்
சீலம்படத் தங்கள் நாட்டைத்—திறம்
செய்து முடித்தவர் தேவர்கள் என்பேன்

தொழிலடிப்படைப் பிரிவுகளாக நால் வருணத்தை விளக்கி, அவற்றிடை ஏற்றத் தாழ்வு காட்டாமல் எல்லோரும் தேவர்கள் என்பதுடன் நிறுத்திக் கொள்ளாது,

சுதந்திரம் பெற்றவர் எவ்வெவ ரேனும்
அன்னவர் தேவர்க ளாவர்—அஃ
தற்றவர் யாவரும் வாடும் புழுக்கள்

என விடுதலை அமிழ்தம் உண்போரே தேவர்கள் எனப் பொருள் விரிவு செய்கிறார். இறுதியில்,

மான மிழந்திட்ட நாடே—முன்னர்
மண்ணிடை வானைக் கொணர்ந்திட்ட நாடே
தேவ நிலைக்கும் உனக்கும்—இடை
சேர்ந்து மறைத்திடும் கொத்தடி மைக்கே
ஆவியைப் போக்குதல் நன்றாம்—உங்கள்
ஆண்மையி னாலதை வென்றிடல் வேண்டும்

என அமரத்தன்மை எய்த அறிவுறுத்துகின்றார்.

5.2 சுதந்திர தேவியொடு ,பாவலர் நேரடியாகப் பேசுகிறார் (தே.சே. 19.6.1923). ''தஞ்சமடைகிறேன் பாதத்தில், சிங்கத் தன்மையை எமக்கருள்'' என வேண்டி

உச்சி மலையடி உன்னழகு—தன்னி
லோடுஞ் சிறுத்தை மனத்தெளிவு—கட்டுங்
கச்சை யறுத்து வருங்குதிரை—தன்
கருத்தினில் வந்து கலப்பவளே—அடி...

தாவிடுவாய் உள்ளத் தாமரைமேல் வந்து
தாக்குது பாருன்றன் காதற்கனல்—எங்கள்
ஆவியுடல் பொருள் அத்தனையும்—உன்றன்
ஆசை நெருப்பில் துரும்புகளாம்—அடி...

என்று அவளொடு கலப்பதில் பேரார்வம் காட்டுகிறார்.

5.3 சிங்கப் படையினைப் போலப் பகைத் தீயை எதிர்த்திடும் இளந் தமிழ் வீரரின் நெஞ்சில்,

> வெற்றி நிலைத்திட வேண்டும்—தங்கள்
> வீர மெலாம்புவி ஏற வேண்டும்
> சுற்றம் சுகப்பட வேண்டும்—நற்
> சுதந்திர வாழ்விற் கூட வேண்டும்

எனும் எண்ணங்கள் எழுவன என்கிறார் (தே. சே. 19.6.1923) பாவேந்தர்.

5.4 'சுதந்திரச் சங்கு' ஆசிரியர் சுப்பிரமணியன்—சரசுவதி ஆகியோர்க்கு 29.6.1936இல் நிகழ்ந்த திருமணத்திற்குப் பாரதிதாசன் எழுதிய வாழ்த்தில் மணமகன், சுதந்திரத்தேவியை நோக்கி 'அன்னையே இங்கு வா' என்று கூப்பிட்டபோது "அடடாவோ அவள்தான் வந்து தாரிழந்த நிலா முகத்துச் சரஸ்வதியாய்ச் சுப்ரமணியன் கரந் தொட்டாளோ!" என்று மண மகளைச் சுதந்திரத் தேவியாய்க் காண்பதும் நோக்கத்தக்கது.[25]

## 6 : தெய்வங்களை நோக்கி...

6 0 தொடக்கக் காலத்தில் பல தெய்வங்களைப் பாடி மகிழ்ந்தவர் பாரதிதாசன்.

> கடவுள் இதோஎன்று மக்கட்குக் காட்டிச்
> சுடச்சுட அவன்அருள் துய்ப்பீர் என்னும்[26]

ஏராளமான பாடல்களை எழுதியதாக அவரே குறிப்பிடுகிறார்.

6.1 வேலவனைப் பாடும்போதும் விடுதலை வேட்கை மீக்கூர்ந்த வராக, பாரத விடுதலைக்குத் துணைசெய்ய வேலவனை வேண்டுபவராகக் காட்சியளிக்கிறார்.

> வீழ்தலும் யாம் வாழ்தலுமே வேலவா உன் கையிலுண்டு
> வீணில் நாங்கள் பட்டதெல்லாம் சொல்லவோ—நின்பால்
> வேண்டி நிற்பதெல்லாம் இன்பமல்லவோ—இந்த
>
> ஆழ்கடல் புவிமே லெமக்கினி
> தான பாரத பூமியை நீ

அட்டதிக்கும் போற்றும் வண்ணம் ஆக்குவாய்—வானில்
எட்டவே உரிமைக் கொடி தூக்குவாய்
பாழ்படச் செய்தாரிந் நாட்டை ஊழ்வினைதானோ அறியேம்
பாரதத்தார் கொத்தடிமை ஆயினார்—சிலர்
பசிதொலைக்க வேறு தேசம் போயினார்—அந்தோ

ஏழ்கடல் செலும் கீர்த்தி போயின
தீனர் யாமெனும் பேரு மாயின

திக்கணம் கடைக்கண் பார்த்தால் ஓர் நொடி—தனில்
எங்குளப் பகையனைத்தும் மண்பொடி
மாக்கடல் நீர் தீப்படக்கை வேல் விடுங்கந்தனே—உன்னை
வழிபடும் போதும் குறை நேர்வதோ—வீரர்
மனதிலும் பொல்லாத சோர்வு சேர்வதோ—கெட்ட

வறுமை நோய்கள் அச்சமுதலாம்
வழிமறிக்கு மிக்கலி தவிர்த்தினி

வரவிடாதே எமது நாட்டிற் கெடுதலை—ஈக
வாழ்க்கையில் நல்வாழ்க்கை யாகும் விடுதலை[27]

எனத் துன்பங்களை யெல்லாம் போக்கி உரிமைக் கொடியைத் தூக்கி வாழ்க்கையில் சிறந்த வாழ்க்கையாகும் விடுதலையை வழங்குக என்கிறார்.

6.2 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' எனத் தொடங்கும் சக்திப் பாட்டு முதலாகப் பராசக்தியைப் போற்றியும் வேண்டியும் பல பாடல்கள் இயற்றியுள்ளார் பாரதிதாசன். அவற்றில் விடுதலை இயக்கத் தொடர்புக் குறிப்புகளடங்கிய பாடல்களும் உள்ளன.

6.2.1 அருணகிரியின் சந்தப் பாடல்களில் பாரதிதாசனுக்கு மிகுந்த ஈடுபாடுண்டு. அருணகிரியின் செல்வாக்கைப் பாரதிதாசனின் தொடக்கக்காலப் படைப்புகளில் குறிப்பாக 'மயிலம் ஸ்ரீஷண்முகன் வண்ணப்பாட்டு' (1920) 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது' (1926) பாடல்களில் அதிக அளவிலும், பிற்காலப் படைப்புகளில் ஆங்காங்கும் (ப. ம. தி, ப. 59,109, 1964) காணமுடிகிறது. 'பராசக்தி திருப்புகழ்' என்னும் பாடல் (தே.சே. 3 4.1923) அத்தன்மையது. பாடலின் முற்பகுதி ஒருவகைச் சந்தக் குழிப் பிலும், பிற்பகுதி பிறிதொரு சந்தக் குழிப்பிலும் பாடப்பெற் றுள்ளன.

பூநிறை பச்சைச் சோலைகள் மாகனி
தேனிலி னிக்கத் தாவிய நீணதி பலவோடு
போர்மலை ஓங்கத் தூவுநெல் வாழைகள்
நேர்கழை சித்ரத் தாமரை வாவிகள் வளமாக
நானில மெச்சக் கூடிய பாரதம்

எனப் பாரத நீர்நில வளங்களைச் சுட்டி, அப்பாரதத்தின் 'மேனிலை கெட்டுப் போவதில் மனமுருகாத நாயென இழிந்த நிலையில் நான் இருக்கிறேன், பராசக்தியே! என் உள்ளத்தையும் உடலையும் வலிமை பொருந்தியன ஆக்கு'

பங்கப் படவிவை பிறரிட மடிமைபொ
ருந்திக் கெடுவதை விடுதலை செயஒரு
சிங்கத் தினைநிகர் மனவலி அருளுக இதுதேதி!...
பொங்கிக் கவிழ்வதை எவர்நிலை புரிபவர்?
அங்கத் தனைபுய வலிபெற விசயனை
முந்தச் செயுமருள் எனதுள மிசையுற வரவேணும்...

என அடிமை பொருந்திய நாடு விடுதலை பெற அருச்சுனனை விஞ்சும் ஆற்றல் தனக்கு அருள வேண்டும் என்கிறார் பாரதிதாசன்.

6.2.2 பராசக்தி பாரதமக்களை நோக்கி, 'பெரும் செயல் புரிக என்றாள். அவள் பேச்சினை எங்கள் மூச்செனக் காப்போம். அந்தச் சக்தியாகிய இன்ப ஊற்றில் பிறந்தது ஒரு தீ, உரிமைத் தீ!'

ஆண்ட நாட்கள் பலயுகம் மனமே! நாம்
அடிமைப் பட்டது சிலசில நிமிஷம்

மாண் பினிலுயர் பாரத மக்கள்
வடுப்பெறுமுன் பகைவர்ஓட
வளர்ந்ததிங் கொருதீ!—இன்று
வளர்ந்ததிங் கொருதீ!!...

தடுப்பது துகள் தகிப்பது வாய்மை—நாம்
சகத்தைக் காக்கும் சக்தியின் கூட்டம்

விடுக்கு மொழியில் விடுதலைக் குரல்
விருப்பமனைத்தும் அமரவாழ்வில்
கொடுக்குதிங் கொருதீ!—மனமே
கொடுக்குதிங் கொருதீ!!

இடுக்கி டமுதல் எங்கணும் காதல்—உயிர்
யாவு மீதோ விடுதலை மீதில்

பிடித்தது நாம் அவள் மலர்த்தாள்
பெய்ததங்கே தண்ணருள்காண்!
பகைக்கது பெருந்தீ!—மனமே
பகைக்கது பெருந்தீ!![28]

எனச் சக்தியின் அருளால் ஆங்கிலேயப் பகையை அழிக்கமுடியும் என்கிறார்.

6.2.3 பராசக்தியை நோக்கி நாங்கள் மேலான நிலையில் இருந்ததை நீ அறியமாட்டாயா? நாளுக்கொரு துன்பம் என வளர்வதெல்லாம் உன்னைக்

கெஞ்சுவதன் பயனோடி—அம்மா
கேடுவந்து சேருவதுன் தயவோடி

எனக் கேட்டு, வெள்ளையர் கடுமையான சட்டமியற்றிக் கொடுமை செய்வதை,

ஆள் கொடுத்த பெருநாடு—பின்னும்
அளவின்றிப் பொருட்குவை கொடுத்திருக்க—இங்குக்
கோல் நடத்தும் துரைமார்கள் நமைக்
கொடியதோர் சட்டமிட்டுக் கடுமை செய்தால்—அந்த
நாள் கொடுத்தவாக் குறுதியை—நிலை
நாட்டுவது துரைமன்னர் கடமையன்றோ—இது
நீள் புவிக்குள் அதிசயமே—இங்கு
நியாய மென்பதனை வர்க்கும் பொதுவில்லையோ

எனச் சக்தியிடம் சுட்டிக்காட்டி வினவுகின்றார்.[29]

6.2.4 காளிக்கு ஒரு விண்ணப்பம் விடுக்கிறார் பாரதிதாசன் (தே.சே. 12.6.1923) 'காளியே உன் அருளின் ஒரு துளியிருந்தால், அதன் ஆற்றலால் நான் பாரத தேசத்தை விடுவிப்பேன். பண்டை நாள் ஆரியரை உற்பத்தி ஆக்குவேன். பாரதத்தைப் புவிக்குத் தலையாக்கிக் காட்டுவேன். வாணிகத்தைப் பெருக்குவேன். வறுமையை மாய்ப்பேன், வலியோர் எளியோரை வாட்டுவதைத் தொலைப்பேன். எல்லோரும் சமமென்று சட்டம் நடத்துவிப்பேன், எல்லோரும் தெய்வப் பிறவிகள், ஈசன் பெற்ற பேர்கள், உறவினர்கள் என்ற உணர்வை எழுப்பிடுவேன், எனப் புதிய பாரதம் படைக்கும் வேட்கையைப் புலப்படுத்துகிறார்.

# 7 : தலைவர்களைப் போற்றல்

7.0 புதுவைக்கு வந்த கோகலே, திலகர், சி.ஆர். தாசு, காந்தியடிகள் முதலிய தேசியத் தலைவர்களைக் கண்டு மகிழ்ந்த பாரதிதாசன் பல ஆண்டுகள் பாரதியார், அரவிந்தர், வ.வே.சு. ஐயர், வ உ. சிதம்பரனார் முதலியோரிடம் நெருங்கிப் பழகினார்[30]. ''பள்ளி நேரம் போக ஓய்வு நேரங்களில் பாரதியாருடன் இருப்பேன். அரவிந்தர், வ.வெ.சு. அய்யர், பாரதி ஆகியோர் ஓயாமல் பேசிக்கொண்டிருப்பர். அவர்கள் பேச்சில் அடிபடாத செய்தி எதுவுமில்லை. நான் அருகில் அமர்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கேட்டு எவ்வளவோ தெரிந்துகொண்டேன். பாரதியார் எதைப் பேசினாலும் ஒரு கவிஞனுக்குரிய மிடுக்கோடு தான் பேசுவார். இப்புரட்சிக்காரரின் பேச்சைக் கேட்டு இளைஞனான என் உள்ளத்திலும் அப்போது தேசிய உணர்வும் புரட்சிக் கருத்துக்களும் வேர்விடத் தொடங்கின''[31] என்கிறார். விடுதலை இயக்கத்தை வீறுகொள்ளச் செய்த பெருத்தலைவர்கள் பலரும் பாரதிதாசனால் போற்றப்பட்டுள்ளனர்.[32]

7.1 காந்தியடிகளைப் (1869-1948) போற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார் பாரதிதாசன்.[33] 1923இல் ஏர்வாடா சிறையில் காந்தியடிகள் இருந்தபோது ''மனிதரில் மிக்கோன் காந்தி மகாத்மா'', ''தனக்கென அன்றிச் சகத்துக்கே வாழும் வீரன்'' என்றெல்லாம் பாராட்டிச்

சிறையினிற் காந்தி யண்ணல்
　　செகமெலாம் அன்னோன் பேச்சு
இறையவர் என்று தம்மை
　　எண்ணிடும் சர்க்கார் மேலே

தரையினி லுள்ளோர்க் கெல்லாம்
　　சலிப்பின்மேல் சலிப்பு நெஞ்சே!
மறைவினில் உள்ளோன் மூட்டும்
　　மருக்கனல் தன்மை கண்டாய்

சிறிதுமேல் வலிது பாயும்
　　சின்னது வலிய தொன்றைப்
பிறிதொரு நாட்டைக் கூட்டிப்
　　பிடித்து நொக்கிடக் கிளம்பும்

குறுகிய செயலில் வையம்
குதித்தது: கரைக்கு மீள
இறையவன் அருளின் காந்தி
எழுந்தது புவியில் நெஞ்சே![34]

என்று உலகம் உய்வதற்காக இறைவன் அருளால் காந்தியடிகள் தோன்றினார் என்கிறார். புதுவை 'ஆத்மசக்தி' இதழிலும் [ஜூலை 1923] ''தேவி அனுப்பி விட்டாள் அந்தத் திருவருள் தான் ஆவியொடு காந்தி அவதாரம். கண்டிடுங்கள்'' எனப் போற்றுகின்றார்.

7.2. 'பாஞ்சாலச் சிங்கம்' இலாலாலசபதிராய் (1865—1928) நாட்டு விடுதலைக்காக இன்னல்கள் பல ஏற்று இன்னுயிர் துறந்தவர். ''... வீர பூமியிலே பிறந்து கல்வியிலேயும் செல்வத்திலேயும், கீர்த்தியிலேயும், மதிப்பிலேயும் நிகரற்றவராக விளங்கி வந்தவர் நமது லாலாலாஜ்பத்ராய்...''[35] என்று பாரதியாரால் உரைநடையிலும் பாட்டிலும் போற்றப் பெற்றவர். அவரைப் பாரதிதாசன்,

காளை, இளங்கன்னியர்க்குத் தோளும் கற்பும்
கதியற்ற நாட்டினுக்குக் கண்ணும் போன்றான்

எனப் போற்றி, 1923இல் அவர் நோய்வாய்ப்பட்டதையறிந்து வருந்தி, நோய் நீங்க வேண்டுமென்னும் வேட்கையை வெளிப்படுத்தும் பாடலொன்றை வரைந்துள்ளார். 1907இல் மாண்டேலாவிற்கு நாடு கடத்தப்பட்ட நிகழ்ச்சியையும் நினைவு கூர்ந்து,

இன்றைக்கே லஜபதிநோய் தீர்ந்த தென்றே
யாருரைப்பார் என் காதில் ? அந்தோ நாட்டின்
நன்மைக்கே வினவறிந்த நாளாய் இந்த
நாள்வரைக்கும் உழைத்தவனை மறப்ப துண்டோ ?
குன்றைப்போல் கலங்காத வீரன் பல்கால்
கொடுஞ்சிறையில் பிறநாட்டிற் கொண்டு சேர்த்தும்
அன்றுபோல் சுதந்திரப்போர் இன்றும் நீங்கா
அருந்துணையைப் பிணிநலித்தால் நலியா ருண்டோ?[36]

என்று மிகவும் வருந்துகிறார் பாரதிதாசன்.

7.3. ''அஞ்செழுத்தினைச் சைவர் மொழிதல் போல்'' நாட்டுத் தொண்டாற்றும் நல்லோர் யாவரும் போற்றி மகிழும் ஆற்றல்

சான்றவர் திலகர் பெருமான் (1856-1920). ''சுயராஜ்யம் எமது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவோம்'' என்று முழக்க மிட்டவர். 'கீதா ரகசியம்' எழுதிய அவர் 'கிளம்புங்கள் பணிக்கு' என முழக்கம் செய்து, பொழுதெல்லாம் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டதை,

ஓதுகின்ற யோகத்தால் பயன்கண் டாலும்
ஒருவர்க்கே பயனன்றிப் பிறருக் கில்லை!
மோதுகின்ற அறியாமை மிகுந்த நாட்டார்
'யோகம்' எனும் மொழியினிலோர் மோகம் கொள்வார்,
ஆதலினால் 'நீ இறத்தல் இல்லை, தேகம்
அழிவதொன்றே' எனும்ஒரு சொல்லை மட்டும்
கீதையிலே இருந்தெடுத்துத் திலகன் காட்டிக்
'கிளம்புங்கள்பணிக்' கென்று முழக்கம் செய்தான்.

கேட்டெழுந்தார் நாட்டார்கள் கேட்ட தன்றிக்
கிளர்ந்தெழுந்தார் உணர்ந்தெழுந்தார் என்ப தில்லை
போட்டதிட்டம் விடவில்லை திலகன் மட்டும்
பொழுதெல்லாம் பொதுவுக்கே உழைத்தான்[37]

எனப் பாடுகின்றார். அமைதியாகப் பொறுமையுடன் இருந்த நாடு ஆங்கிலேயரை எதிர்த்து ஆர்த்தெழுவதற்கு அடிப்படை அமைத்த பெருமை திலகரின் உரிமை என்பதை,

கரடியும் புலியும் இல்லாக் காடெனப்
போரிலா திருந்த இந்த நாட்டில்
திலகர் மக்களைப் போருக்குத் திரட்டினார்
ஆங்கி லேயனை அன்னவன் சரக்கை
அழிக்க வேண்டும் என்பன அனைத்தும்
திலகர் அந்நாள் இட்ட திட்டம்
ஆங்கிலன் இதன்பால் அவிழ்த்து விட்ட
அடக்கு முறையால் அந்தத் திட்டம்
மக்கள்பால் மதிப்பைப் பெறுவ தானது[38]

எனப் பதிவு செய்கிறார் பாரதிதாசன்.

7.4. 'பாபு அரவிந்த கோஷ்' ஆகிய அரவிந்தர் (1872—1950) பாரதியைப் போல் ஆங்கிலேய அரசுக்குத் தெரியாமல் 1910 ஏப்பிரல் 4இல் புதுவைக்கு வந்து சேர்ந்தார். பாரதிக்கும் அவர்க்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. பாரதியின் தொண்ட

ராகிய பாரதிதாசனும் அரவிந்தரைப் பலமுறை கண்டு பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். அரவிந்தரைப் பாம்பாக உருவகப் படுத்திப் 'பாம்புப் பாட்டு' ஒன்றும் 'அரவிந்தர் யோகம்' என்ற பெயரில் பிறிதொரு பாடலும் இயற்றியுள்ளார்.

7.4.1.1. பாரதிதாசனின் 'பாம்புப் பாட்டு' புதுவையில் வெளிவந்த 'கற்பகம்' இதழில் முதலில் வெளிவந்ததாகவும், அதனைக் 'கலைமகள்' (சென்னை) 1942 ஆம் ஆண்டு பொங்கல் இதழில் 'சி. சுப்பிரமணிய பாரதி எழுதியது, பெ.தூரன் தேடி உதவியது' என்னும் குறிப்போடு வெளியிட்டிருந்ததாகவும், பாரதிதாசனின் நூல்களைத் தொடக்கக் காலத்தில் வெளியிட்ட திரு. காசி ஈ. லட்சுமணப்பிரசாத் இதைப்பற்றிக் கலைமகள் நிறுவனத் தார்க்கு எழுதியதாகவும் அவர்களிடமிருந்து மறுமொழி எதுவும் வரவில்லையென்றும் அறிகிறோம்.[39] ''பாரதிதாஸன் அவர்கள் எழுதிய பாம்புப் பாட்டை பாரதியாரின் நண்பரான ஓர் ஆசிரியரே பாரதியார் பேரால் தம் பத்திரிக்கையில் வெளி யிட்டது சிலருக்கேனும் ஞாபகமிருக்கலாம்'' என்னும் இன்னு மொரு குறிப்பு 1938க்கு முன்னரே இப்பாடல் பாரதியார் பெயரில் பிறழ அச்சேறியதை அறிவிக்கிறது.[40] மேலும் தஞ்சைத் தமிழ்ப். பல்கலைக் கழகம் 1987இல் வெளியிட்ட 'பாரதியார் கவிதைகள்' ஆய்வுப் பதிப்பில், ஆறு கண்ணிகளைக் கொண்ட இப்பாடலின் முதல், இறுதிக் கண்ணிகளாகிய இரண்டு மட்டும் இரு தனிச்சொற்கள் விடப்பட்டு 'அரவிந்தப் பாம்பு' என்ற தலைப்பின் கீழ் (ப.835) பாரதியார் பாடலாகச் சேர்க்கப் பட்டுள்ளது. சுத்தானந்த பாரதியார் தன் 'கவிக்குயில் பாரதியார்' என்னும் நூலில் (ப 50-51, 1945) தந்துள்ள தகவல் அடிப்படை யில் சேர்த்துள்ளனர். சுத்தானந்த பாரதியாரை அடியொற்றித் 'தேசீய கவிராஜ சிங்கம் சுப்பிரமணிய பாரதியார்' என்னும் நூலிலும் இவ்விரண்டு கண்ணிகளும் பாரதியார் பாடலெனக் குறிப்பிடப்பட்டு விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.[41]

7.4.1.2. பாரதியின் பாடலெனப் பலரும் மயங்கிய அந்தப் பாடலில் 'அரவிந்தப் பேர் புனைந்த அன்புப் பாம்பை' நோக்கி,

> ஆடுபாம்பே எழுந்தாடு பாம்பே
> அன்னைதுயில் நீங்கிநலம் துன்னப் பாம்பே

எனத் தொடங்கி 'உண்மை நிலை கண்டுரைக்கும் யோகப்பாம்பு, திண்மை நிலை கொண்டிருக்கும் தெய்வப் பாம்பு' என்றெல்லாம் போற்றி,

பாரதத்திலே பிறந்த பன்னகப் பிள்ளாய்—இந்தப்
பாரதத்தில் அன்புவைத்த நல்ல பாம்பே!
பாரதத்தை விடுவிக்கும் வழிநி னைந்தே—நல்ல
பக்குவ மிகுந்திருக்கும் படப் பாம்பே...
பாரதர்க்குப் பாரதத்தில் உரிமை யில்லை—இந்தப்
பாவனையைத் தீர்க்க நல்ல காலமுமில்லை
சீர்கெடுக்க நினைத்திடும் பகைக்கு லத்தை—நீ
சீறிப் படத்தை விரித் தாடு பாம்பே....

எனப் பாரதத்தை விடுவிக்கும் வழியை நினைத்திருக்கும் பாம்புக்கு வேண்டுகோள் விடுக்கிறார்.

7.4.2. 'அரவிந்தர் யோகம்' என்னும் பிறிதோர் பாடல்,

ஆங்கிலத்துப் பெருங்கவிஞன் அரவிந் தர்க்கோ
அணிநாட்டின் பிணிநீக்கும் கவலை யல்லால்
தீங்கியலும் சிறுசெயலில் பணத்தில் காசில்
சிறிதேனும் கவலையுறக் கண்ட தில்லை

என அரவிந்தரைப் புகழ்வதோடு பாரதியார்க்கும் அவர்க்கு மிருந்த தொடர்பையும்

பாங்கன் ஒருவன் கிடைத்தான் அரவிந்தர்க்கே
பாரதி ஓர் தமிழ்க்கவிஞன்! நாட்டின் அன்பன்!

தூங்கியது நாடந்நாள் இரண்டு பேரும்
சொல்லாலே உணர்வுதந்தார் ஏடும் தந்தார்.
வங்காளச் சிங்கமவன் எண்ணம் செய்வான்
வரிப்புலிப் பாரதி அதனைத் தமிழாய்ச் செய்வான்...[42]

என்று சுட்டி ''ஊருக்குழைப்பதுதான் யோகம்'' என்னும் முத்தாய்ப்போடு முடிகிறது.

7.5 ''பாரதி புகழ்பாடும் கவிதைகள் பலவற்றை பாரதிதாசன் இயற்றி அளித்துள்ளார். இவ்வகையில் நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளை, தேசிக விநாயகம் பிள்ளை ஆகியோர் உட்பட எவரும் பாரதிதாசன் தொட்ட சிகரங்களைத் தொட வில்லை''[43] என்பார் பெ. சு. மணி.

பாரதிக்குத் தாசன் எனத் தான் அழைக்கப்படுவதை எதிர்ப்பு களுக்கிடையிலும் பெருமையாக ஏற்றுக்கொண்ட சுப்புரத்தினம்

பாரதியைப் பற்றிப் பல பாடல்களும் கட்டுரைகளும் எழுதியிருப்பதோடு இறப்பதற்கு முன் இறுதியாக இயற்றிய படைப்பும் பாரதி வாழ்க்கை வரலாற்றுத் திரைப்பட வடிவ எழுத்தோவியமே. தனக்கு வேண்டிய பெரிய தலைவர்களிடமெல்லாம் குறைகண்டு சாடிய பாரதிதாசன், பாரதியை எவ்விடத்தும் சாடாது போற்றுபவராகவே விளங்குதல் குறிப்பிடத்தக்கது.

'எழுத்தில் சிங்க ஏற்றின் குரலைப் பாய்ச்சிய' பாரதியின் நற்றமிழ்ப்பற்று, சாதி, மூட நம்பிக்கை எதிர்ப்புணர்வு, மனித நேயம், படைப்பாற்றல் ஆகியன பாரதிதாசனால் விதந்து பேசப்படுவதைப் போல விடுதலை இயக்கப் பங்களிப்பு விதந்து பேசப்படவில்லை. எனினும் சில இடங்களில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குவிக்கும் கவிதைக் குயில் இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு...

அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்...[44]

கொணர்க நாட்டுக்கு விடுதலை என்றே
ஆணை முரசம் அடித்த பாவலன்
வாணாள் தமிழுக்கு வழங்கிய பாரதி[45]

சேண் புகுந்த சுப்ரமண்ய பாரதி உன்
தெய்வமொழி இங்கு வைத்த வன்மையாலே
ஆண்மையினி லேறுகின்றோம் இன்றே எங்கள்
அடிமையை நின் ஆவலினைத் தீர்ப்போம் அண்ணே[46]

விடுதலை விடுதலை விடுதலை என்று
விடுதலை வேட்கை முழக்கிய பாரதி
கடையென உளறும் பறைய ருக்கும்
கருத்திலார் இகழும் புலைய ருக்கும்
விடுதலை விடுதலை விடுதலை என்றார்
வேற்றுமை பார்ப்பது கெடுதலை அன்றோ
வடுநீங்கு பாரதி விடுதலை வேட்கை
மாசிலா உணர்வினில் எழுந்ததென் றுணர்க...
அடிமைதீர் பாரதி விடுதலை வேட்கை
அன்பினில் அறத்தினில் எழுந்ததென் றுணர்க[47]

இவ்வாறு பாரதியின் விடுதலை வேட்கையையும் அதன் சிறப்பையும் குறிப்பிடும் பாரதிதாசன் சீனப்படையெடுப்பு இந்திய எல்லை

யில் நிகழ்ந்தபோது பாரதியின் புதிய ஆத்திசூடியைப் 'போர் நூல்' எனப் புகன்று புதிய விளக்கமளித்தார்.

காந்தி யண்ணல் கழறி வந்த
ஊறிலாக் கொள்கையைப் பாரதி ஒப்பிலர்!...
போர்நூல் புதிதாய்ப் புகன்றார் பாரதி;
அதுதான் புதிய ஆத்திசூடி ஆகும்

என்று குறிப்பிட்டுப் 'பழநாட்போர்நூல்' புறப்பொருள் வெண்பா மாலை என்றும்

அதைத்தான் பாரதி அழகுறச் சுருக்கி
அச்சம் தவிர் ஆண்மை தவறேல்
இளைத்தல் இகழ்ச்சி என்ற மூன்றால்
தொடக்கம் செய்தார் தூய நூலாகவே

என்று தொடங்கி,

ஔவையார் முனைமுகத்து நில்லேல் என்றார்
பாரதி முனையிலே முகத்து நில் என்றார்...

ஏறுபோல் நட என இயம்பிய அதுவும்
கீழோர்க் கஞ்சேல் எனக்கிளத் தியதும்
குன்றென நிமிர்ந்து நில் என்று கூறியதும்
எண்ணுக எண்ணுக இந்நாட் டிளைஞர்கள்
கேட்டினும் துணிந்துநில் என்று கிளத்தித்
தேசத்தைக் காத்தல் செய் என்று செப்பினார்
போர்த்தொழில் புரியேல் என்பதைப் புதைத்துப்
போர்த்தொழில் பழகு நீ என்று புகன்றார்...

வெள்ளைக் காரனை வெருட்டச் சொன்னவர்
கொள்ளைக் கார னான சீனனை
எதிர்த்துப் போரிட இதனைச் சொன்னார்

இறக்கவில்லை பாரதி இருக்கின்றார்! அவர்
சாவதற் கஞ்சேல் என்று சாற்றிப்
புத்துயிர் நம்மிடம் புகுத்து கின்றார்.
சீனன் பெற்ற சிறிய வெற்றியைப்
பெரிதென எண்ணிடேல் என்று பேசுவார்
தோல்வியிற் கலங்கேல் என்று சொன்னார்

பரரத வீரரே பாரத வீரரே
பாரதி பாரதப் படையின் தலைவர்
என்று நீவிர் எண்ணுதல் வேண்டும்
நல்வழி காட்ட வல்லவர் என்று
நம்புதல் வேண்டும் நவிலக் கேளீர்
கோல்கைக் கொண்டுவாழ் என்றார்
வேல் கொண்டு சீனனை வெல்லச் செல்கவே"[48]

என்று பாரதியின் ஆத்திசூடித் தொடர்கள் எக்காலத்தும் அயலாரான எதிர்த்துப் போராடுவார்க்குப் பொருந்துமாறு அமைந்திருக்கும் சிறப்பைப் புலப்படுத்துகிறார். புதிய ஆத்தி சூடி 'விடுதலைப் போர் நூல்' ஆகிறது.

7.6 வழக்கறிஞராகவும் தமிழறிஞராகவும் சிறந்து விளங்கிய வ.உ சிதம்பரனார் ''சுதேசியென்றும் சுயராஜ்யம் என்றும் சொல்லவும் மக்கள் அஞ்சியிருந்த தென்னாட்டில், வந்தே மாதரம் என்று வாயால் சொல்லவும் அஞ்சியிருந்த தமிழ்நாட்டில் சுதேசி முழக்கமும் வந்தே மாதர முழக்கமும் செய்து சுயராஜ்ய உணர்ச்சியை எழுப்பிய பெருந்தலைவர்''.[49] 'வந்தே மாதரம் பிள்ளை' 'தென்னாட்டுத் திலகர்' 'கப்பலோட்டிய தமிழன்' என்றெல்லாம் பாராட்டப்படும் அவரை மனமாரப் போற்றி இரண்டு பாடல்கள் எழுதியுள்ளார் பாரதிதாசன்.

'நாட்டுக்குத் தொண்டு' என்ற தலைப்பிலான பாடலில்

நாட்டுக்குத் தொண்டு
நமக்கு மகிழ்ச்சி
நடக்கட்டும் போர் என்றான்
வாழ்க சிதம்பரன் பேர்

கேட்டுக்கும் வெள்ளையர் நீட்டுக்கும் துப்பாக்கி
வேட்டுக்கும் வெஞ்சிறை வீட்டுக்கும் அஞ்சாமல்...

வ. உ. சி பணியாற்றியதைக் குறிப்பார்.[50]

'மானவீரன் வ.உ.சி.' என்னும் பிறிதொரு பாடல் அவரின் பன்முகப்பட்ட பணிகளையும் குறிப்பிட்டுப் பாராட்டுகிறது.

வெள்ளையன் கப்ப லாலே
விரிந்தஇந் நாட்டின் செல்வம்
கொள்ளைகொண் டோடல் கண்டு

கொதிப்புற்ற சிதம்ப ரன்பேர்
பிள்ளைதான் பேருக் கத்தால்
பிழைக்கவந் தடிமை கொண்ட
நொள்ளையர் மாயச் செய்தான்
நோன்மைசேர் கப்பல் விட்டான்...

பகைவனைப் பரங்கிப் பேயைப்
பாரத நாட்டி ருந்து
தகைப்பதும் உரிமை நாட்டில்
தலைநிமிர்ந் துயர்ந்து வாழ்தல்
வகையென வேங்கை யாகி
வடக்கொடு தெற்க னைத்தும்
தொகைதொகை மறவர் கூட்டம்
தொகுத்தனன் வெடிம ருந்தாய் !

விடுதலை மறவ னுக்கு
வெள்ளையர் சுரண்டல் கூட்டம்
கெடுதலை கோடி தந்தார்
உலகினைக் கெடுக்க வந்தார்.
படுகொலை வழக்கு நூறு
பாய்ச்சினர்; சிறைக் கோட்டத்துள்
கொடுதலை என்றார், வீரச்
சிறுத்தையா கோழை யாகும் ?

என்று பாராட்டுவதோடு 'திக்கெல்லாம் திருட வந்த சிவந்த தோல் பரங்கியரின் பல்லுடைப்பதைப் போல அவர் கல்லுடைத்ததாகவும், எண்ணெயைப் பிழிவதைப் போல் வெள்ளைக் காரரின் மண்டையைப் பிழிவோம் என்று மனத்தில் எண்ணி எண்ணிச் செக்கிழுத்ததாகவும்' புனைந்துரைக்கிறார் பாரதி தாசன். [51]

7.7 வீரஞ்செறிந்த வரலாற்றுக்குரிய வ.வே.சு. ஐயர் (1881-1925) 1907 அக்டோபர் 10இல் 'பாரிஸ்டர்' படிப்புக்காக இலண்டன் சென்று அங்கிருந்த தீவிரவாத இயக்கத் தலைவர்களுடன் இணைந்து இந்திய விடுதலைக்கு முனைப்பாகப் பாடுபட்டதால் படிப்பை முடிக்காமலேயே மாறுவேடம் பூண்டு 1910 அக்டோபர் 9இல் புதுவை வந்து சேர்ந்தார். பாரதி, அரவிந்தர் முதலிய 'தேசபக்தர்' குழாத்தில் இணைந்தார். ஆதலால் பாரதிதாசன் அவரை நன்கு அறிந்து கொண்டு பழகுகிற வாய்ப்புகள் ஏற்

பட்டன. குற்றால அருவியில் 3.6,1925இல் மகள் சுபத்திரா வொடு அவரும் விழுந்து இறந்து போகிறார். இதனைப் பாரதிதாசன்

கேட்டீரோ தமிழர்களே, நம்மில் மிக்க
கீர்த்திகொண்ட தமிழன் உயிர்நீத்தசெய்தி

என அறிவித்து

பருவமயக் கத்தாலே ஆங்கி லத்தில்
பல்கலைவல் லானாகி இன்னும் கற்கக்
கருதிஅந்த ஆங்கில நாடு ஏக, அங்குக்
கண்ணெதிரே நகைக்காட்டிக் கருத்திற் பாய்ந்த
திருநுதலைச் சுதந்திரநற் றெய்வந் தன்னைச்
செங்கைகள் கூப்பித்தன் தெய்வ நாட்டை
ஒரு நொடியில் விடுவிப்பேன், ஒன்றும் வேண்டேன்
உறுவன வந்துறுக...

எனும் அவர்தம் உணர்ச்சியைப் படம் பிடித்து, 'காயத்தை நற் பொருளை உயிரை நாட்டின் கதிக்களித்தோன்,' 'நலம் விளைக்கும் கற்பகம்', 'புது நினைப்புக் குன்றம்' என்றெல் லாம் போற்றி, அவர்தம் தொண்டு 'இருள் கொண்ட நெஞ் சத்தில் அணைகடந்த வெள்ளம் போல் தேசபக்தியை வளர்த் தெடுப்பது [52] எனப் பாராட்டுகிறார்.

7.8 ஆங்கிலேயரை எதிர்த்தும் விடுதலை இயக்கத்தை ஆதரித்தும் மேடைகளில் பாடி நடித்த கலைஞர்கள் பலர். அவர்களுள் எஸ்.எஸ். விசுவநாததாஸ் (1886-1940) குறிப்பிடத்தக்கவர். நாடக மேடையில் சுப்பிரமணியர் வேடத்தில் தோன்றும் போதும் கதருடையணிந்து வெள்ளைக்காரர்களைக் கொக்காக உருவகப் படுத்திக் 'கொக்கென்றால் கொக்கு-நம்மைக் கொல்ல வந்த கொக்கு, அக்கரைச் சீமைவிட்டு வந்து கொள்ளை அடித்துக் கொழுக்கும் வெள்ளைக் கொக்கு' என்று பாடி,

'கொக்கு பறக்குதடி பாப்பா—அதன்
குறிப்பை உணர்ந்து கொள்வாய் பாப்பா'

என மக்களிடம் எழுச்சியை ஏற்படுத்தியவர் அவர். 1940 திசம்பர் 31ஆம் நாள் நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போதே மறைந்தார். அவரைப் புகழ்ந்து,

கொக்குப் பறக்குதடி பாப்பா என்று
கொடுத்தஅடி ஆங்கிலனைத் துடிக்க வைத்து
மக்களையும் எழுப்பிற்று விசுவ நாத
தாசென்னும் பாவாணன் வரைந்த பாட்டு!
வைக்கோலைத் தின்னுகின்ற மாடும் அன்னோன்
வாய்ப்பாட்டில் சொக்கிவிடும்! நடிப்பில் வல்லோன்[53]

எனப் பாடுவதோடு ஆண்டுதோறும் அவர்க்கு நினைவு விழா நடத்தவேண்டும் என்கிறார் பாரதிதாசன்.

7.9 நாவலர் சோமசுந்தர பாரதியார் (1879-1959) 1904ஆம் ஆண்டிலிருந்தே பேராயக் கட்சிக்காரராகப் பணியாற்றி, மதுரைக்குச் சி.ஆர். தாசையும் தூத்துக்குடிக்குக் காந்தியடிகளையும் அழைத்துப் பேசச் செய்ததோடு நெல்லை, மதுரை ஆகிய நகரங்களில் காங்கிரசு மாநாடுகளைக் கூட்டியவர்.[54] அவரைப் பாரதிதாசன் 'பசுமலைத் தமிழன் சோமசுந்தர பாரதி' என்னுந் தலைப்பில் பாடும்போது,

இந்தியநாட்டு ரிமைக்கும் விடுதலைக்கும்
　ஈடிணையற் றெவர்க்கும் மேலாய்ச்
செந்தமிழன் வஉசி செலுத்தியநற்
　கப்பற்குச் செயலா ளன்காண்
வெந்தணலாய் வெள்ளைநாய் எதிர்ப்புக்கும்
　அஞ்சாத வேங்கை என்றன்
சிந்தைக்கும் செயலுக்கும் தென்பூட்டும்
　செம்மாந்த சிங்கம் போன்றோன்."[55]

என அவரின் வெள்ளையாதிக்க எதிர்ப்பைச் சுட்டுகின்றார்.

## 8: இயக்கக் களத்தில்...

8.0 இந்தியத் தேசிய அரசியலில் மிதவாதம், தீவிரவாதம் என்ற இரண்டு அணியினரோடு மறைமுகப் புரட்சி இயக்கப் போராட்ட அணியினரும் இருந்தனர். அயல்நாடுகளிலும் இயங்கிய இவ்வணியின் வீரர்கள் தீவிரவாதத் தேசியத் தலைவர்களிடம் அளப்பரிய மதிப்பும் பற்றும் கொண்டிருந்தனர். வங்காளப் பிரிவினை (1905) யைத் தொடர்ந்து நடந்த அடக்குமுறை நிகழ்ச்சிகள், இந்திய இளைஞர்களைப் புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்தன. வெடிகுண்டுகளை வீசவும் துப்பாக்கியைப் பயன்படுத்தவும் தொடங்கினர். இந்தியாவிலும் அயல்

நாடுகளிலும் உயிரைப் பொருட்படுத்தாது ஆங்கிலேய அதிகாரி களைக் குறிவைத்துத் தாக்கினர். இலண்டனில் 1909 ஜூன் 1இல் இந்திய அலுவலக அதிகாரியான சர். கர்சன் வில்லியை மதன்லால் திங்கரா என்னும் புரட்சிவீரர் சுட்டுக் கொன்றார். வ.வே.சு. ஐயரின் புரவலரும் இந்தியப் புரட்சித் தாயுமான மேடம் காமா பாரிசில் இயங்கிய புரட்சி இயக்கத்தில் முதன்மை யானவர். இவர் தமது 'வந்தே மாதரம்' (பாரீஸ்) 1911 ஏப்பிரல் மாத இதழில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடும் ஒவ்வொரு ஆங்கிலேயனையும் ஒவ்வொரு இந்தியனும் கொல்ல வேண்டும் என்று எழுதினார்.

8.0.1 ''இந்தப் பின்னணியில் 1908இல் கப்பலோட்டிய தமிழர் வ. உ.சி.யின் கொடிய சிறைவாசத்திற்கு மூல காரணமான ராபர்ட் வில்லியம் எஸ்கார்ட் ஆஷ் என்னும் வெள்ளையனை (ஸப்-கலெக்டர் தூத்துக்குடி) சுட்டுத்தள்ளத் திட்டம் உரு வாயிற்று. இந்தத் தேசபக்த வீரச்செயலை சாதனை செய்ய வாஞ்சிநாதன் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.''[56]

8.0.2 செங்கோட்டையைச் சார்ந்த வாஞ்சிநாதன் புதுச் சேரிக்கு இருமுறை சென்று வ.வே.சு ஐயரின் மேற்பார்வையில் துப்பாக்கிச் சுடும் பயிற்சியைப் பெற்றார்.

> ''வ. வெ. சு. ஐயர் இந்த ஒரு மாதமும் தினம்தினம் 'தர்மாலயம்' வந்து வாஞ்சிக்குத் தனியே போதித்து வந்தார். அதிகாலையில் சுமார் நாலுமணிக்கு ரிவால் வருடன் நான் வாஞ்சியை அழைத்துக் கொண்டு போய் புதுவைக்கு அருகே உள்ள கரடிக்குப்பம் ஓடை வெள்ள வாரியில் கை நடுங்காமலும் குறி தவறாமலும் சுடுவ தற்குக் கற்றுக் கொடுத்தேன் ......1911-ம் ஆண்டு மே மாதம் இறுதியில் ஒரு நாள் இரவு சுமார் 11 மணிக்கு நானும் கண்ணுப் பிள்ளையும் வாஞ்சியை அழைத்துக் கொண்டு பிஸ்டல், துண்டுப் பிரசுரங் களுடன் தர்மாலயத்திலிருந்து கால்நடையாய்ப் புறப் பட்டு முதலில் வில்லியனூர் போய் அங்கிருந்து பாகூர் வழியாய் ஆற்றைக் கடந்து திருப்பாப்புலியூர் சென்று ரயிலில் ஏற்றி அனுப்பினோம்'' என்று திரு என். நாகசாமி குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது.[57]

திருநெல்வேலி திரும்பிய வாஞ்சிநாதன் 1911 ஜூன் 17இல் மணியாச்சியில் திட்டமிட்டப்படி ஆஷ் என்னும் வெள்ளையதி காரியைச் சுட்டுக் கொன்று தன்னையும் மாய்த்துக் கொண்டார்.

8.0.3 பாரதிதாசன், ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை அடைந்தது எவ்வாறு என்பதை ஒரு பாடலில் விளக்குகிறார்.

உடல்பொருள் ஆவி உவந்தீந் தவரின்
ஈகத்தி னால்தான் எய்தினோம் விடுதலை...
ஈவதும் பெறுவதும் இல்லை விடுதலை
சாவு ஆயிரத்தைத் தந்து பெற்றது

என விடுதலை எய்திய விதத்தைவிளக்கி அதற்காகப் பாடுபட்ட சிலரின் பெயர்களைப் பட்டியலிடுகிறார்.

வ.உ.சி வாஞ்சி வ.வே.சு பாரதி
போன்ற கிளர்ச்சியின் புரட்சி யாளர்கள்
மானம் மிகுந்த வாழ்வினர் திலகர்
காந்தி பகத்சிங் சரோஜினி குடும்பம்
ஈ.வே.ரா சிங்கார வேலனார் ஜீவா
இன்னும் உயிரை எண்ணாக் கடமையர்
ஆயிரம் ஆயிரம் பேரை அளித்துப்
பெற்ற விடுதலை...[58]

எனும் பட்டியலில் வாஞ்சியின் (1886-1911) பெயர் குறிக்கப் பட்டிருப்பது நோக்கத்தக்கது.

8.1 வாஞ்சிநாதன், துப்பாக்கியையும், சுடும்பயிற்சியையும் புதுவையில் தான் பெற்றார். ''ஆஷ் கலெக்டரைச் சுட்ட கைத்துப்பாக்கி பாவேந்தர் அனுப்பியதே" என்கிறார் மன்னர்மன்னன்.[59] 1978இல் இவர் குறிப்பிடும் இச்செய்திக்கு மாறாக முன்னரே சில செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன.

8.1.1 ''பிரான்சிலிருந்து அம்மையார் காமா அனுப்பிய பிஸ்டல்'' தான் வாஞ்சி புதுவையிலிருந்து கொண்டு சென்றது என்கிறார் என். நாகசாமி.[60] ''புதுச்சேரியில் கைத் துப்பாக்கி சுடும் பயிற்சியை வாஞ்சி வ.வே.சு. ஐயர் மேற்பார்வையில் பெற்றதாகக் கூறப்படுகின்றது. 1911-ல் மே மாதம் மேடம் காமா பாரிசில் இருந்து அனுப்பிய பிரௌனிங் பிஸ்டலை வ.வே.சு ஐயர் வழங்கினார் என்றும் கூறப்படுகின்றது. ஆஷ் துரையை சுட வாஞ்சி பயன்படுத்தியது எப். என். பிரௌனிங், தானியங்கி 256 குழல் பிஸ்டல் என்று புலனாய்வுத்துறை அறிக்கை கூறுகின்றது''[61] என்பது பெ.சு மணி அவர்களின் குறிப்பு.

8.1.2 புதுச்சேரி ஆளுநர்க்கு 6.6.1912இல் புதுச்சேரி பெல்கோம் தெரு 10ஆம் எண் முகவரியிலிருக்கும் இராமசாமி செட்டி மகன் தெய்வநாயகச் செட்டி வணக்கத்துடன் எழுதிய மடலில் 'நாங்கள் கடலூருக்கு வந்ததும் ஆங்கில ஆட்சியில் தனி நீதி மன்றத்தில் ஒரு பெரிய வழக்கில் ''தீர்ப்பளிக்கப்பட்டது. (மார்ச் கடைசியில்)அதில் ஆஷ்கலக்டரைச் சுடுவதற்குத் துப்பாக்கி கொடுத்த மனிதர் வ.வெ.சு.அய்யர்தான் என்று எட்டு சாட்சிகள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் இரகசிய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ''சன்னத்தை'' வைத்திருக்கிறார்கள். அவர்கள் புதுச்சேரியைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் வேறு பல நீதி மன்றங்களில் தங்கள் வாக்குமூலங்களைக் கொடுத்தார்கள் என்றும் கேள்விப் பட்டோம்''[62] என்று குறிப்பிடுவதும் மனங்கொள்ளத்தக்கது.

8.1.3 'பாரதிதாசன் அனுப்பியது' 'மேடம் காமா அனுப்பியது' எனும் இரு கருத்துகளில் எது ஏற்புடையது எனக் காண வேண்டும். புரட்சியாளர்களோடு பாரதிதாசனுக்கும் தொடர்பிருந்தது. வங்காள இளைஞன் ஒருவனுக்கு அவர் துப்பாக்கி வழங்கியிருக்கிறார். பாரதிதாசன் உள்ளத்தில் விடுதலை உணர்வும் புரட்சிக் கருத்துக்களும் வேர்விடத் தொடங்கிய காலம். ''அந்தச் சமயத்தில் ஒரு வங்காள இளைஞனும் எங்களுடன் இருந்தான். அவன் அரவிந்தரின் தீவிரச் செயல்களால் ஈர்க்கப்பட்டுப் புதுச்சேரி வந்து தங்கியவன். அப்போது வங்காள ஆளுநராக இருந்த ஒரு வெள்ளையரைச் சுட்டுக் கொல்வதற்காக ஒரு துப்பாக்கியை அந்த இளைஞனுக்குக் கொடுத்துதவினேன்''[63] என்று பாரதிதாசனே குறிப்பிடுகிறார்.

வங்காள இளைஞனுக்குத் துப்பாக்கி தந்ததைக் குறிப்பிடும் இவர் வாஞ்சிநாதனுக்குத் தந்ததாக எங்கும் குறிப்பிடவில்லை. வாஞ்சியின் மறைவிற்குப் பின், அவரின் தோழரான மாடசாமியொடு தனக்கேற்பட்ட தொடர்பைப் பல இடங்களில் சுட்டும் பாரதிதாசன் வாஞ்சியொடு எந்தத் தொடர்பும் கொண்டிருந்ததாக எங்கும் குறிப்பிடவில்லை. ஆனால் வாஞ்சியை வழி நடத்தியவர் வ.வே.சு. ஐயர் என்பதும், வ.வே.சு. ஐயரின் புரவலராக மேடம் காமா விளங்கினார் என்பதும், ஆஷ் கொலையைத் 'துணிவார்ந்த திருநெல்வேலிச் செயல்' எனத் தம் 'வந்தே மாதரம்' (பாரீஸ் ஜூலை 11) இதழில் பாராட்டியிருக்கிறார் என்பதும் சான்றுகளின் அடிப்படையில் அமைந்த உண்மைகள். இந்த நிலையில், 'பாரதிதாசன் அனுப்பிய கைத்

துப்பாக்கி' எனக் கொள்வதினும், வ.வே.சு. ஐயர் குழுவி னிடத்தில் பெற்றது, அது காமா அம்மையார் அனுப்பியதாக இருக்கலாம் எனக் கொள்வதே ஏற்புடையது எனலாம்.

8.2.0 பாரதியார் புதுவைக்குச் சென்றபின் ஆங்கிலேய அரசின் புலனாய்வுத் துறை அவர்க்கும் அங்கிருந்த பிற தேசபக்தர் களுக்கும் கொடுத்த தொல்லைகள் அளவிறந்தன. ஆதலால் அவர்களைக் கடுமையாகத் தாக்கி எழுதினார். ''ஒற்றர்கள் என்றும் சாரர்கள் என்றும் நமது முன்னோர்களால் அழைக்கப் பட்டு வந்த ரஹஸியப் போலிஸாரின் வேலையானது, உலகத் துள்ள எல்லாத் தொழில்களிலும் அதிக நிஷித்தமானது'' என்றும் அத்தொழில் செய்வாரை ''இழிதொழில் செய்பவர்கள்''[64] என்றும் எழுதினார். மேலும் எங்குத் திரும்பினாலும் ஒற்றர்கள் தென்படுவதையும் பொய்க்குற்றச்சாட்டுகள் புனையப்படு வதையும் கிண்டற் சுவைமலிய,

> நமது தேசம் புராதன செல்வங்களை யெல்லாம் இழந்து விட்டதுபற்றி நாம் வருத்தப்பட வேண்டாம்! ஏனென் றால் இப்போது புதிய செல்வங்கள் பலவற்றைப் பெற்று நமதுநாடு விளங்குகின்றது. ரஹசியப் போலீஸார் என்று கூறப்படும் வேவுகாரரில் பிரிட்டிஷ் இந்தியாவைப் போல இத்தனை பெருமை கொண்ட தேசம் உலகத்தில் வேறொன்றிருக்குமென்று நமக்குத் தோன்றவில்லை. ஹே மாதா! நீ என்ன பாக்கியம் பெற்றுவிட்டாய்! ரிஷிகள் இல்லை; கவிகள் இல்லை; யுத்த வீரர் இல்லை; சாஸ்திர விற்பன்னர்கள் இல்லை; இவர்களெல்லாம் இல்லாமல் போய்விட்டதனால் என்ன நஷ்டம்! எங்கு திரும்பினாலும் வேவுகாரர்கள் அகப்படுகிறார்களே, அது போதாதா? சுதேசிய மெழுகுவர்த்திகள் எங்கேனும் பம்பாயிலிருந்து தருவித்தால், கல்கத்தாவி லிருந்து வெடிகுண்டு செய்யச் சாமான்கள் தருவித் தான் என்று எழுதி அதிகாரிகளிடம் கொண்டு ரிப்போர்ட்டை நீட்டி விடுகிறார்கள். பொய் சொல்லி, ஸ்வஜனத்துரோகம் செய்து பிழைப்பதும் ஒரு பிழைப் பாகுமா? வயிற்றை நிரப்புவதற்காக தமட்டிலுந்தானா மனிதன் உலகத்தில் ஜீவித்திருக்கிறான்?''[65]

என்று வரைந்து காட்டுகிறார்.

8.2.0.1 புதுவையில் அந்நாளிலிருந்த தேசபக்தர்களுக்கு ஆங்கிலேய அரசு அளவிறந்த தொல்லைகளைக் கொடுத்தது. இதனை,

''எங்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் இழைத்த தொந்தரவுகள் இவ்வளவுதான் என்று சொல்ல இயலாது. தபால் காரியாலயம் மூலம் எங்களுக்கு எதுவும் கிடைக்க விட்டதில்லை. அப்படியே தவறி ஏதாவது வந்தாலும் அதைபறிமுதல் செய்து வந்தார்கள்.

புதுவை வாசிகளிடம் தேசபக்தர்கள் பேசினால் உடனே அவர்களிடம் சி. ஐ. டி. சென்று அவர்களை பயமுறுத்திப் பேசாமல் செய்துவந்தார்கள். அப்படியும் அவர்கள் மீறிப் பேசினால் பிரிட்டிஷ் எல்லைக்குள் சென்றபொழுது அவர்களைக் கைது செய்து இம்சித்து வந்தார்கள்.

பிரிட்டிஷ் சர்க்கார் புகாரின் மேல் பிரெஞ்சு சர்க்கார் தேசபக்தர்கள் வீடுகளைப் பல தடவைகள் சோதனை செய்தார்கள். ஜோடித்த வழக்குகளை தேசபக்தர்கள் மேல் கொண்டுவந்தபொழுது பிரெஞ்சு இந்திய சர்க்கார் அவைகளை அப்போதைக்கப்போது விசாரித்து எவ்வித குற்றமும்இல்லாததால் புகார் கொண்டு வந்தவர்கள் முகங்களில்கரியைப் பூசி அனுப்பினார்கள்.

தேசபக்தர்கள் தனியே அல்லது சேர்ந்து வெளியே சென்றால் சி. ஐ. டி. சிறிது தூரத்தில் பின் தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் எங்கெல்லாம் போனார்கள்; யார் யாரைக் கண்டு அவர்கள் பேசினார்கள் என்று சி. ஐ. டி. கவனித்து வந்தார்கள்''[66]

எனும் நாகசாமியின் கூற்று நன்கு காட்டும்.

8.2.0.2 இதனை இன்னும் சற்று விளக்கமாகப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார். புதுவையில் தேசிய உணர்ச்சி

''மறையாமல் காத்த பெருமை இங்கிலீஷ்காரரையே சாரும். அரவிந்த கோஷ் வீட்டுக்கெதிரில் சுமார் 15 பிரிட்டிஷ் ரகசியப்போலீஸ்காரரை ஸ்திரமாகப் போட்டு வைத்தார்கள். ஈசுவரன் தருமராஜா கோயில் தெருவில் சுமார் 10 ரகசியப் போலீஸ்காரர்களைத் திரிய விட்டு வைத்தார்கள்.

அப்போதெலலாம் புதுவை ஈசுவரன் தருமராஜா கோயில் வீதி சுதேசிகளின் சகவாஸத்திற்குப் பேர் போனது, பாரதியார் வீடு, வ.வே.ஸு ஐயர் வீடு, பொன்னு முருகேசம் பிள்ளை வீடு, வாத்தியார் சுப்ரமணிய ஐயர் வீடு, ஆறுமுகம் செட்டியார்

வீடு, ராஜா நாராயணசாமி வீடு, நாகசாமி ஐயர் வீடு — அனைத்தும் அந்தத் தெருவில்தான்! இவர்களுக்கெல்லாம் சி.ஐ.டி. போட்டிருந்தார்கள்"

என்று பொதுவான சூழலை விளக்கியபின் பாரதியை எவ்வாறு புலனாய்வுத் துறையினர் தொடர்ந்தனர் என்பதைக் காட்டுகிறார்.

''பாரதியார் வெளியில் புறப்படுவார். சி. ஐ. டி. பின் தொடர்வான். சட்டப்படி அவன் பாரதியாரை அதிகமாக நெருங்கலாகாது. கொஞ்சம் எட்டியே தொடர வேண்டும். அவன் நெருங்கிவிடும் நேரமோ, அவன் தொந்தரவு படும்நேரமாகும்! பாரதியார் அவனைத் திரும்பிப் பார்ப்பார். அவரின் விழி கோபத்தையடையும். அவன் செய்வது குற்றம் என்று அர்த்தம். நேர்ந்தது தொல்லை சி. ஐ. டிக்கு! சி. ஐ. டி.யோடு கைகலந்த ஒரு மனிதன் யார் ?"[67]

இதிலிருந்து பாரதியார் புலனாய்வுத்துறையினரோடு கைகலந்தாரெனவும் கருதமுடிகிறது.

8.2.0.3. தீவிரவாதத்தை ஆதரிக்கும் பாரதி, அரவிந்தர், வ.வே.சு. ஐயர் முதலியோர் தங்கியிருந்தமையால் ஏற்பட்ட புலனாய்வுக் கெடுபிடி ஆஷ் கொலையுண்டபின் இன்னும் அதிகமாகியது. ''ஆஷ் கொலைக்குக் காரணமாயிருந்த வாஞ்சியும், திருநெல்வேலியில் சதித்திட்டம் உருவாகக் காரணகர்த்தாவான நீலகண்டனும் புதுவைக்கு வந்து புரட்சிக்காரர்களிடம் ஆலோசனைகளும், ஆயுதமும் பெற்றவர்'' எனச் சென்னை மாநில ஆளுநர் முர்ரே ஹம்மிக் என்பவர் புதுவை மாநில ஆளுநர்க்கு மடல் எழுதினார்.[68] கொலை தொடர்பாகப் புலனறியும் நோக்கில் காவல் துறையின் ஆற்றல் வாய்ந்த மேலதிகாரிகளாகிய பாபுராவ் நாயுடு, அப்துல்கரீம் சாகிப், புருசோத்தம நாயுடு ஆகிய மூவரும் பல காவலர்களோடு புதுவை புகுந்தனர்.[69]

8.2.1. இந்தப் புலனாய்வுத் துறையினரால் பலவகைத் தொல்லைகட்கு ஆட்பட்ட பாரதியாரையும் பிறரையும் பாதுகாக்கும் மெய்க்காவலராகப் பலமுறை பணியாற்றியுள்ளார் பாரதிதாசன். புலனாய்வுத்துறை விரித்த சூழ்ச்சிவலைகள் இவரால் கிழித்தெறியப்பட்டன.

திலகர் செய்த உரிமைக் கிளர்ச்சியால்
கொலைமுதற் பற்பல குற்றம் சுமந்த
மாசிலா மனத்து மாட சாமியும்

அன்புறு பாரதி அரவிந் தர்முதல்
வன்முறை யுடையரால் வருந்துவார்க் குதவியும்
பன்முறை புதுவையில் செத்துப் பிழைத்தேன்[70]

எனப் பாரதிதாசனே பாடியுள்ளார்.

8.2.2 குடும்ப விளக்கின் 'விருந்தோம்பல்' பகுதியில் முதியவர், தம் பழைய நினைப்புகளாகக் கூறும் செய்திகள் பலவும் பாரதிதாசன் வாழ்க்கையில் நிகழ்ந்தவை. ''நான் இளமைத் துடிப்பில் அப் போது செய்த பல துணிச்சலான செயல்களைக் குடும்ப விளக்கில் 'விருந்தோம்பல்' பகுதியில் ஒரு முதியவர் கூறுவதுபோல் வெளிப்படுத்தியிருக்கிறேன்''[71] என்று பாரதிதாசனே குறிப்பிடு கிறார்.

2.2.2.1 'மாசிலாமனத்து மாடசாமி' எனப் பாரதிதாசன் குறிப் பிடும் எஸ். எம். மாடசாமிப் பிள்ளை, வ. உ.சியின் மீது எல்லை யற்ற ஈடுபாடு கொண்டவர். 'சுதேசி கப்பல் கம்பெனி'யில் பணியாற்றியவர். திருநெல்வேலிப் பகுதியில் நீலகண்ட பிரம்மச் சாரி நடத்திய மறைமுகப் புரட்சி இயக்கக் கூட்டங்களில் கலந்துகொண்டு 'ராமமூர்த்தி' எனும் மாற்றுப் பெயரில் பாடு பட்டவர். வ. உ.சி, சுப்பிரமணிய சிவா ஆகிய இருவரும் கைதானதும் (1907) மூண்டெழுந்த திருநெல்வேலிக் கலவரங் களில் மாடசாமியும் ஒரு குற்றவாளியாக்கப்பட்டார். வாஞ்சி நாதன் ஆஷைக் கொன்றதையொட்டியும் 'மாடசாமியைப் பற்றித் தகவல் தந்தால் ஆயிரம் ரூபாய் தரப்படும்' எனக் காவல் துறை அறிவித்தது.[72] அவர் புதுச்சேரியில் புகுந்து தலைமறை வாக வாழ்ந்து வந்தார். அவரைப் பாதுகாப்பதில் பாரதி தாசனுக்குப் பெரும் பங்கு இருந்தது.

குடும்பவிளக்கு 'விருந்தோம்பல்' பகுதியில்

ஆரும் அறியாமல் அன்பான நண்பரைநான்
சாரும் கடல்தாண்டிச் சைகோனில்-சேரும்வணம்
செய்யஒரு கட்டுமரம் சென்றேறி னேன், கப்பல்
கையெட்டும் எல்லையைநான் காணுகையில்-எய்தும்
உளவறிந்து தீயர் சிலர்நீராவி ஓடம்
மளமளென ஓட்டி வருதல் தெளிவுபடக்
காணாத் தொலைவினிலே கட்டுமரத்தை விடென்றேன்
ஊணோ உறக்கமோ ஒன்றுமின்றிக்-கோணாமல்
நட்ட நடுக்கடலில் ஒன்றரைநாள் நான்கழித்தே
எட்டுமணி இரவில் என்வீட்டைக்-கிட்டினேன்

என்றொரு செய்தி இடம் பெறுகிறது. இதில் 'அன்பான நண்பர்' எனக் குறிப்பிடப்படுபவர் மாடசாமியே என்றும் அவரைக் கப்பல் வழிக் கடல் கடந்து சைகோனுக்கு அனுப்பி விடும் திட்டமிருந்தது என்றும் அறிய முடிகிறது.

''கலெக்டர் ஆஷ் கொலையின் காரணமாக புதுவையிலுள்ள சில முக்கியத் தீவிரவாதிகளின் மீதும் போலீசுக்குச்சந்தேகம் எதிரொலித்தது. இவர்களின் வீடுகளையும் சோதனையிட போலீஸ் தயாராகியது. இந்நிலையில் மாடசாமி புதுவையிலிருந்தால் பேராபத்துகள் வருமென பாரதியாரும் இவருடைய ஆப்த நண்பரும் தாசனுமாகிய சுப்புரத்தினமும் யோசித்தனர். மாடசாமியை பிரெஞ்சுஆட்சியிலிருந்த சைகோன் நாட்டிற்கு அனுப்ப முடிவு செய்தனர். அப்பணியை கவி பாரதியார் சுப்புரத்தினத்திடமே ஒப்படைத்தார். மாடசாமியை அவர் பெயரிலேயே பாஸ்போர்ட் எடுத்து, அவர் உருவத்திலேயே பிரயாணம் செய்வதில் பல வழிகளில் தொல்லைகள் இருந்தன. எப்படி நிறைவேற்றுவது என்ற சிந்தனையில் சுப்புரத்தினம் ஈடுபட்டார்.

சுப்புரத்தினம் அடிக்கடி சென்று சந்திக்கும் கணித மேதை முகமது என்ற பெரியவர் அப்போது அங்கு வந்திருந்தார். அந்நாளில் முஸ்லீம்களில் பெரும் பாலோர் சைகோன் தொடர்புள்ளவர்கள். முகமது அவர்களின் உருவம் சுப்புரத்தினத்தின் கண்களிலும் கற்பனையிலும் பளிச்சிட்டது! மாடசாமியை இவர் உருவத்தில் மாற்றினாலென்ன? என்ற எண்ணத்தில் முகமதுவை மாடலாக்கிக் கொண்டு மாடசாமியை மாற்றினார். கண்களில் அழகிய பிரேம் கண்ணாடி, எடுப்பான வண்ணத்தில் லுங்கி, மல் ஜிப்பா, தலையில் சிவப்பு நிறக் குஞ்சம் கட்டிய தொப்பிக் கோலத்தில் ஒட்டபிடாரம் மாடசாமி புதுவை முகமதுவாகி பாஸ்போர்ட்டும் பெற்றார். சுப்புரத்தினம் முகமதுவுக்கு வழியனுப்பும் நண்பராக அவரும் இடுப்பில் லுங்கியும், லேஸ்ஜிப்பாவும் அணிந்து இருவருமாக புதுவை கடற்கரைக்கு வந்தனர்.

சைகோனுக்குச் செல்லும் கப்பலில் பயணிகள் ஏறிக் கொண்டிருந்தனர். கடலில் நிற்கும் கப்பலில் ஏற சிறிது தூரம் தோணியில் செல்ல வேண்டும். இவ்விருவர்களின் மீது சந்தேகப்பட்ட துப்பறியும் போலீஸ்

> இவர்களைப் பின் தொடர, இவர்களும் திடீரென அருகேயிருந்த கட்டு மரத்தில் ஏறிக்கொள்ள சுப்புரத்தினம் வேகமாகச் செலுத்தினார். மற்றொரு படகில் போலீஸ் தங்களையே பின் தொடருவதைக் கண்ட அவர்கள் சட்டென்று பக்கத்தில் வந்து கொண்டிருந்த மற்றொரு படகிற்கு மாறி கடலில் வெகுதூரம் வரை சென்று விட்டனர். சுமார் ஒன்றரை தினங்கள் அவ்விருவரும் கடலிலேயே ஊண் உறக்கமின்றியிருந்து மீண்டும் எவருக்கும் தெரியாமல் சுப்புரத்தினம் முகமது உருவிலிருந்த மாடசாமியை வேறோரு கப்பலில் சைகோனுக்கு ஏற்றியனுப்பி தப்பிக்கச் செய்துவிட்டார்! (சுப்புரத்தினம் என்பவர்தான் பாரதிதாசன்)
>
> சில நாட்கள் மாடசாமி சைகோனிலிருந்த பின் இலங்கைக்குச் சென்றார்.[73]

இம்மேற்கோள் குடும்பவிளக்கு விருந்தோம்பல் பகுதிச் செய்திக்கு விளக்கமாக அமைந்துள்ளது.

8.2.2.2 புதுவையில் ஆங்கிலேயப் புலனாய்வுத் துறையினர்க்கு உளவு சொல்லிக்கொண்டிருந்தவர்களில் மயூரேசனும் அவன் தந்தை தெய்வநாயகச் செட்டியும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பொய்ச் செய்திகள் பலவற்றைத் தந்து பொருள் பெற்று பிழைத்தனர்.[74] புலனாய்வுத்துறையினர் இவர்களைப் பயன்படுத்திப் பொய்க்குற்றச்சாட்டுகளை விடுதலை இயக்கத்தார் மீது சுமத்தினர். மாரேசன், ஒருமுறை தனக்குப் போதிய பணம் கொடுக்காமல் புலனாய்வுத் துறையினர் ஏமாற்றி விட்டதாக நீண்ட மடல் எழுதி அம்மடல் 'இந்தியா' இதழில் வெளிவந்ததாகவும் அறிய முடிகிறது.[75] அந்த மயூரேசனின் சூழ்ச்சியை முறியடித்து மாடசாமியைப் பாதுகாத்தார் பாரதிதாசன்.

> ''மயூரேசன் அரவிந்தர் வீட்டிலிருந்த புரட்சிக் கருத்துக்கள் அடங்கிய ஐந்து நூல்களை எப்படியோ களவாடிச் சென்றுவிட்டார். இந்த விபரம் எனக்குத் தெரியும். ஒரு நாள் நடராஜாச்சாரியின் நாடகம் பார்த்துவிட்டுத் திரும்பிய அரங்கநாதனும், நானும் சற்றும் எதிர்பாராமல் மயூரேசன் வீட்டில் எட்டிப் பார்த்தபோது அரவிந்தர் வீட்டிலிருந்து களவாடப்பட்ட புத்தகங்களும், பக்கத்தில் ஒரு கைத் துப்பாக்கியும் இருக்கக்

கண்டு, பளிச்செனத் தோன்றிய ஒரு தந்திரமாக, அவற்றை எடுத்துக் கொண்டு வந்துவிட்டோம்.

மறுநாள் மாடசாமியிடம் அந்தத் துப்பாக்கியைத் தந்து ஈஸ்வரன் தருமராஜா கோவில் தெருவிலிருக்கும் பாரதி வீட்டுக்குச் சென்றோம். துப்பறிவோரும் மயூரேசனும் தொடர்வது தெரிந்தது. எதிரிலிருந்த காமாட்சி யம்மன் கோவிலில் புகுந்து அதற்கருகிலிருந்த ஒரு வீட்டில் மாடசாமியை ஒளித்து விட்டேன். மீண்டும் காமாட்சியம்மன் கோவில் உட்புறம் நுழைந்து சுற்று மதிற்சுவர் மீது ஏறிப் பக்கத்தில் உள்ள தெருவில் குதித்துவிட நினைத்தேன். கோவிலுக்குள்ளே வந்து விட்டான் மயூரேசன்.

கண் இமைக்கும் நேரம். மிக உயர்ந்த மதிற் சுவரினின்று கீழே குதித்தேன். ஓட்டமாக ஓடிப் பாரதி வீட்டிற்குள் புகுந்தேன். வெகுநேரங் கழித்து மாட சாமியை மீட்டு வீடு வந்து சேர்ந்தேன்.

மறுநாள் பாரதி என்னைப் பார்த்து, ''மீண்டும் இந்த உயரத்திலிருந்து உன்னால் குதிக்க முடியுமா? உனக்குள் கனன்று கொண்டிருந்த புரட்சி எண்ணம் உன் காலுக்கு வலிமையூட்டியுள்ளது! என்று கூறினார்.''[76]

''நாடு தொழும் ஊழியரை
நான்காக்க ஓர் வீட்டு
மாடியினின்றே குதித்து
மான்போலும் ஓடினேன்''

என்னும் குடும்ப விளக்கு முதியோர் கூற்று மேற்குறித்த நிகழ்ச்சியைச் சிறிது மாற்றத்தோடு சுட்டுகிறது எனலாம். 'நாடு தொழும் ஊழியர்' என்று இங்குக் குறிக்கப்படுபவர் மாடசாமியே.

8.2.3 ''சென்னை மகாணத்திற்கு வலுக்கட்டாயமாகா வேணும் பாரதியாரைக் கடத்திச் செல்லும் திட்டத்தோடு காவலதிகாரிகள் இருவர் புதுவை வந்து சேர்ந்தனர். இக்கடத்தல் திட்டத்தை முன்னுணர்ந்த பாரதிதாசன் இதனை முறியடிக்கத் திட்டமிட்டார். மாறுவேட மிட்டுக் கொண்டு சென்னை மாகாணக் காவல் அதிகாரி ஒருவரை அணுகினார். ''நான் பாரதிக்கு விரோதி.

அவருடைய ஆட்சேபகரமான புத்தகங்கள் என்னிடம் உள்ளன. என் இல்லம் வந்தால் தருகிறேன்'' என அழைத்தார். அவரும் மாறுவேடக்காரரின் பேச்சுக்களை உண்மையென்று நம்பி விட்டார். பலிபீடத்திற்கு அழைத்துச் செல்லும் ஆட்டைப் போன்று காவலதிகாரியைப் பாரதிதாசன் அழைத்துச் சென்றார். அதனைக் கண்ட மற்றோர் அதிகாரி உடனே விரைந்து வந்து பாரதிதாசனின் கொலைப் பிடியிலிருந்து காவலதிகாரியை அழைத்துச் சென்று அவர் உயிர் காத்தார்.[77]

8.2.4 1911 ஜீனில் இங்கிலாந்தின் புதிய அரசராகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அதே ஆண்டில் திசம்பர் தொடக்கத்தில் பம்பாய் வந்தார். திசம்பர் இறுதியில் தில்லியில் முடிசூட்டு விழா 'தர்பார்' நடந்தது. அந்த நிகழ்ச்சிக்குப் புரட்சி இயக்கத்தாரால் கேடுவிளையலாம் என்று அஞ்சிய பிரிட்டிசு அரசு புலனாய்வுத்துறையை முடுக்கிவிட்டது.

அந்த ஆண்டின் முற்பகுதியில் மணியாச்சியில் 'ஆஷ்' கொல்லப்பட்டதும், கொன்ற வாஞ்சிநாதனின் சட்டைப்பையில் இருந்த தமிழ்க் கடிதத்தில் ஐந்தாம் ஜார்ஜ், முடிசூட்டு விழாவில் கலந்துகொள்வதற்காக ''எங்கள் தேசத்தில் காலை வைத்த உடனேயே அவனைக் கொல்லும் பொருட்டு 3000 மதராசிகள் பிரதிகினை செய்து கொண்டிருக்கிறோம். அதை தெரிவிக்கும் பொருட்டு அவர்களில் கடையேனாகிய நான் இன்று இச் செய்கை செய்தேன். இதுதான் இந்துஸ்தானத்தில் ஒவ்வொருவனும் செய்ய வேண்டிய கடமை''[78] என்று எழுதப்பட்டிருந்ததும், வாஞ்சிக்குப் புதுவையோடிருந்த தொடர்பும் அரசின் கண்காணிப்பைப் புதுவையில் குவித்தன.

> டில்லியில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவுக்காக (''டெல்லி தர்பார்'') பெருத்த ஏற்பாடுகள் நடந்து வந்தன. சந்தேகப் பேர்வழிகளையெல்லாம் போலீசார் வெகு ஜாக்கிரதையாய்க் கவனித்து வந்தார்கள். புதுவை சுதேசிகளை சென்னை போலீஸ் மறக்கவில்லை. வேண்டிய பந்தோபஸ்துகளைச் செய்திருந்தார்கள்.
>
> இதற்கிடையில் தெற்கே மணியாச்சி ரயில்வே ஸ்டேஷனில் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ், வாஞ்சி ஐயர் என்ற தேசபக்த இளைஞரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதன் காரணமாக, புதுவையில் பிரிட்டிஷ் இந்தியா வேவுகாரர்களின் ஆர்ப்பாட்டம் வெகு அதிகமாகி விட்டது...

சென்னைப் போலீஸ் சில விளம்பர நோட்டீசுகளை அச்சிட்டு, புதுவையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பரப்பியது. அதில், சுதேசிகளான எங்கள் பெயரை அச்சிட்டு அவர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குத் தலைக்கு ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொன்னார்கள். கொலை, கொள்ளை ஃபோன்ற குற்றங்களைச் செய்து ஒளிந்து கொள்பவர்களைக் கண்டுபிடிக்க இம்மாதிரி விளம்பரம் செய்வதுண்டு. வெளிப்படையாய், குடும்பத் தோடு வாழ்ந்துவரும் எங்களைப் பற்றி இப்படி விளம்பரம் வெளியிட்டது இதுதான் முதல் முறையாகும்.'' [79]

என்பார் ஸ்ரீ. ஸ்ரீ. ஆசாரியார். ''தென் இந்தியாவில் பலாத்காரச் சதிச் செயல்களுக்குப் புதுவையே தலைமையகம் என்று ரௌலட் கமிட்டி கருதியது'' [80] என்னும் ரா. அ. பத்மநாபனின் குறிப்பும் நோக்கத்தக்கது.

''பிரிட்டிஷ் போலீஸ் ஒற்றர்கள் நாயெனத் திரிந்து கொண்டிருந்த காலம். ஆஷ் கலெக்டர் சுடப்பட்ட பின்னர் நூற்றுக்கணக்கான போலீஸ்காரர்கள் புதுவை வந்தனர். பின்னர் கிடைத்த தகவலின்படி 200 சப் இன்ஸ்பெக்டர்கள் உடையின்றி பாரதி, அரவிந்தர், வ. வெ. சு. அய்யர், சீனுவாசாச்சாரியார் இவர்களைச் சுற்றிய வண்ணமிருந்தனர். பாவேந்தரும் வேணு நாயக்கர், அவரது தம்பி தெய்வசிகாமணி, சிவப்பிரகாச நாயக்கர், ஜெயராம்பிள்ளை, முனுசாமி நாயக்கர் இம்மாதிரி பலர் பாரதியாருக்கு பாதுகாப்பாக விருந்தனர். அத்தனை பேரும் — 24 மணி நேரமும் பாரதியைக் காப்பாற்றுவதே மூச்செென கொண்டிருந்தனர். கோட்டைக்குப்பத்தில் (ஒற்றர்கள்) ஒரு கார் கொண்டுவந்து வைத்திருந்தனர். அது புதுச்சேரியில் காரே இல்லாத காலம். இந்த மூவரையும் தூக்கிக் கொண்டுபோய் விடுவது என்ற முடிவில் அவர்கள் சுற்றிக் கொண்டிருந்தனர். அந்தத் தகவல் பிரஞ்சு அரசுக்கு தெரிவிக்கப்பட்டது. அந்தச் சில நாட்கள் மட்டும் இந்த மூவரையும் சங்கர செட்டியார் வீட்டிற்கு

பக்கத்து வீடான கல்வே செட்டியார் வீட்டில் வைத்து பிரஞ்சு குதிரைப்படையினர் இருவர் கல்வே வீட்டு வாயிலில் காவலிருந்தனர். கோமுட்டி வீதி இருபக்கத்தி லும் குதிரைப்படை போலீஸ் காவலிருந்தது என்றார் பாவேந்தர். மேலும் ஒருநாள் அன்று முழுநிலவு. பிரிட்டிஷ் போலீஸ் ஏதாவது தந்திரம் பண்ணி பிரஞ்சு போலீசில் யாராவது அவர்களிடம் ஏமாந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம். ஒரு படகு தயார் செய்து பாரதி, அரவிந்தர், வ.வெ.சு. அய்யர், நான், வேணு, தெய்வசிகாமணி ஆகியோர்—நான்கு மைல்கள் கடலில் சென்று இரவெல்லாம் கழித்தோம் என்று முடித்தார் பாவேந்தர். இது பற்றி கூறும்போது பாவேந்தர் உணர்ச்சி வேகத்தோடு கூறினார். இந்தச் செய்தியை இரண்டு மூன்று முறை வெவ்வேறு மனிதர்களிடம் கூறக் கேட்டிருக்கிறேன்"[81] என்கிறார். சு.ர. சுப்பிரமணியன். இதிலிருந்து ஆங்கிலேய ஒற்றரிடமிருந்து பாரதி முதலி யோரைக் கண்ணுங்கருத்துமாகக் காப்பாற்றுவதில் பாரதிதாசனுக்கிருந்த முனைப்பான முயற்சி புலனா கின்றது.

8.2.5 ''அரவிந்தர், பாரதி, பாரதிதாசன் ஆகிய மூவரும் பொன்னு முருகேசன் பிள்ளை வீட்டில் பேசிக்கொண்டி ருப்பது வழக்கம். அப்படிப் பேசுவதைப் பலமுறை பல கணி வாயிலாகக் கண்டும், ஒற்றுக்கேட்டும் வந்த பிரிட்டிசு அரசின் ஒற்றன் ஒருவனைப் பிடித்து, வாழைத் தார் ஒன்றை வெட்டிவந்து அவன் கையில் சேர்த்து அதனைத் திருடினான் எனக் குற்றம் சுமத்தி வழக்குப் போட்டு மாட்டி விட்டார் பாரதிதாசன். வழக்கை விசாரித்த நடுவர் 'என் வீட்டுப் பலகணியில் இவ்வாறு பார்த்திருந்தால் நான் சுட்டிருப்பேன். வழக்குப் போட மாட்டேன்' எனப் பாரதிதாசனிடமும், 'நான் ஒரு சிஐடி' என வெளிப்படையாகச் சொன்ன ஒற்றாளி யிடம் 'இவ்வாறு சொல்லாமல், தண்டனையை ஏற்றுச் சிறைக்குச் சென்றபின் சிஐடி என்று சொல்லியிருக்க வேண்டும்' என்றும் கூறித் தீர்ப்புரைத்தாராம். இதனைப் பலமுறை பாரதிதாசன் என்னிடம் சொல்லிச் சொல்லி நடுவரின் தீர்ப்பைப் பாராட்டுவார்'' [82] என்கிறார் எஸ். ஆர். சுப்பிரமணியன்.

8.2.6 பாரதியார் பலநேரம் அவர் வீட்டின் மாடிப் பகுதியிலேயே இருக்கும் பழக்கமுடையவர். அவர் வீட்டிற்கு எதிர்வீட்டு மாடியில் புதிதாக ஒரு பெண் குடிபுகுந்தாள். அணிமணி பூண்ட அவள் பாரதியாரின் கவனத்தைத் திரும்பும் வகையில் தோற்றமளித்து ஊஞ்சலில் பலமுறை உந்தி உந்தி ஆடிக் கொண்டிருந்தாள். இதனைச் சற்றும் பெறாத பாரதியார் சுப்புரத்தினத்திடம் முறையிட்டார். சுப்புரத்தினம் நண்பர்களுடன் எதிர் மாடிக்குச் சென்று உசாவி உண்மையறிந்தார்.

புலனாய்வு ஆதிகாரி அப்துல் கரீம் என்பவரால் அங்கே குடியமர்த்தப்பட்டவள் அப்பெண் என்பதும், பெத்தாச்சி என்பவரின் ஆசை நாயகியாக இருந்தவள் என்பதும் தெரியவந்தன.

பாரதியைப் பற்றித் தனக்குத் தெரியும் என்றுரைத்த அப்பெண் பின்னர் வேறு வீட்டுக்குக் குடிபெயர்ந்தாள். துப்பறிவாரின் சூழ்ச்சி முறியடிக்கப்பட்டது.[83]

8.2.7 1924 திசம்பர் இறுதியில் காந்தியடிகள் தலைமையில் 39ஆவது அனைத்திந்திய காங்கிரசு மாநாடு பெல்காம் நகரில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்குத் தமிழகத்திலிருந்தும் பிற பகுதிகளிலிருந்தும் தொண்டர்கள் நடந்தே சென்றனர்.[84] அவ்வாறே நடந்து செல்லுமாறு புதுவையிலிருந்தும் திருவாளர்கள் கதர் நடேசன், சி.எம். சாமி ஆகிய இரு தொண்டர்களையும் பாரதிதாசன் அனுப்பினார். வழியில் அவர்களுக்கு உரிய உதவிகளைச் செய்யுமாறு பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் அறிக்கையும் வெளியிட்டார்.[85]

8.2.8 வங்காளத்திலிருந்து வெளியிடப்பட்ட 'பாரதமாதா' படம் ஒன்று. இந்தப் படத்தின் அடிப்படையில் 'பாரதமாதா' பொம்மை உருவாக்குமாறு புதுவை குயவர்பாளையத்தைச் சார்ந்த வைத்தியலிங்கத்திடம் சொல்லப்பட்டது. அணிகலன்கள் எதுவுல்லாமல் 'பாரதமாதா' படம் இருப்பதை வைத்தியலிங்கம் சுட்டிக்காட்டினார். உடனே வ.வே.சு. ஐயர்,

> ''பாரத நாட்டில் இப்பொழுது என்ன மிச்சமிருக்கிறது? இருந்ததையெல்லாம் அன்னியர்கள் சுரண்டிக் கொண்டு போய் விட்டார்களே! பஞ்சத்திலும் வறுமையிலும் வாடிக் கிடக்கும் பாரதமாதாவுக்கு ஆபரணம் செய்து பூட்டிக்

> கொள்ள வசதியில்லை. சும்மா படத்திலுள்ளது போலவே மொட்டையாகவே நிறுத்து" என்றார். ஆனால் பாரதியோ ''... அந்நியன் எதைக்கொண்டு போய் விட்டான்?... கங்கையையும் யமுனையையும் பாயாகச் சுருட்டி எடுத்துக் கொண்டுபோய் விட்டானா?இமயத்தையும் வேங்கடத்தையும் பெயர்த்துத் தலைமேல் சுமந்து கொண்டு போனானா?... நமது கலாசாரத்தையா, வீரத்தையா, தர்மத்தையா?... எதைக் கொண்டு போனான்? பாரதமாதா மகாராணி. அவளுக்கு ஒரு குறைவும் இல்லை. அவள் சர்வாலங்கார பூஷிதை. எல்லா ஆபரணங்களும் குறையாமல் பூட்டிக் கொண்டு வா!''[86]

என்றார். பாரதியின் அறிவுரைப்படி அணிகலன்களோடேயே 'பாரதமாதா' பொம்மைகள் உருவாக்கப்பட்டன. அவை சென்னை முதலிய இடங்களுக்கு விடுதலை இயக்கத் தொண்டர்களால் எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றின் உள்ளே விடுதலை இயக்கத்தார்க்குப் பயன்படும் பிரான்சு நாட்டுக் கைத்துப்பாக்கி முதலிய கருவிகள் மறைத்து வைத்து அனுப்பப்படுமாம். பாரதியார் ஒரு முறை பல பொம்மைகளைப் பாரதிதாசனிடம் அளித்துச் சென்னைக்குச் சென்று விடுதலை மறவர்களிடம் சேர்க்கச் சொன்னார். ஒரு பெட்டியில் அவற்றை எடுத்துச் சென்ற பாரதிதாசன் சென்னை அண்ணாப் பிள்ளைத் தெரு முனையில் இருந்த புதுச்சேரியைச் சேர்ந்த, பங்களூர் க ப, நாராயணன் செட்டியார் கடையில் வைத்துவிட்டு அமர்ந்திருந்தார்.[87] அப்போது ஒருவன் செட்டியாரைத் தாக்க, அவனைப் பாரதிதாசன் உதைத்தார். இந் நிகழ்ச்சியே

> பாப்புனைவார் ஓர்நாளில் பாவைபல தந்துசென்னை
> போயப் புலவர்க் கீயஎனைப் போக்கினார்—மாப்பாவை
> இட்டபெட்டியைச் சென்னைச் செட்டிகடை ஒன்றில்நான்
> இட்டங்குக் குந்தி இருக்கையிலே—'விட்டேனா
> பாரடா'! என்றொருவன் செட்டிமேல் பாய்கையிலே,
> 'ஆரடா நீ!'யென்(று) அதட்டிநான்—நீரோடைக்(கு)
> உள்ளே விழவுதைத்தேன்

எனக் குடும்பவிளக்கு விருந்தோம்பல் பகுதியில் குறிக்கப்படுகின்றது.

# 9 : ஒத்துழையாமையும் நூல் உருவாக்கமும்

9.0 'நன்மையுடன் ஒத்துழைப்பது எவ்வளவு இன்றியமையாத கடமையோ அதைப் போலவே தீமையுடன் ஒத்துழையாமை செய்வதும் புனிதமான கடமை' என்ற அடிப்படையில் காந்தியடிகளின் முன் முயற்சியால் எதிர்ப்புக்கிடையில் 1920இல் கல்கத்தாவில் நடந்த சிறப்புக் காங்கிரசில் ஒத்துழையாமை இயக்கம் உருப்பெற்றது. ஆங்கிலேய அரசு வழங்கிய பட்டங்களையும் மதிப்புநிலைப் பதவிகளையும் துறப்பது, கல்விக் கூடங்களையும், நீதிமன்றங்களையும் சட்டமன்றங்களையும் புறக்கணிப்பது, அயல் நாட்டுத் துணிகளை அணியாமல் விலக்குவது முதலிய பல திட்டங்களின் அடிப்படையில் ஒத்துழையாமை இயக்கம் செயற்பட்டது. ''ஒத்துழையா இயக்கத்தின் பயனாக தங்களுடைய சக்தி இவ்வளவு இருக்கிறதென்பதை ஜனங்கள் உணர்ந்து கொண்டார்கள். பொறுமை எதிர்ப்பில் ஜனங்களுக்குள்ள சக்தியை இவ்வியக்கம் வெளிக்கு கொணர்ந்தது இன்னும் இவ்வியக்கம், வேறெவ்வழிகளாலும் இயலாதபடி, பாமர ஜனங்களிடையே ஒரு விழிப்பை உண்டாக்கியது.

ஒத்துழையா இயக்கத்தினால் நமக்குச் சுயராஜ்யம் வராமலிருப்பினும், இவ்வியக்கத்தின் பயனாகப் பல கொடுஞ்சம்பவங்கள் நிகழ்ந்தனவேனும், நாம் எந்த ஸ்தாபனங்களைப் பகிஷ்கரித்தோமோ அவைகள் இன்னும் நிலவிக் கொண்டிருந்தாலும், நாம் அரசியல் சுதந்திரம் பெறுவதற்கு ஒத்துழையா இயக்கம் ஒரு சாதனம் என்பதை எவரும் மறுக்க முடியாது. இவ்வியக்கத்தின் ஓர் அமிச வெற்றி, சுயராஜ்யத்திற்கு அருகாமையில் நம்மைக் கொண்டு வந்து விட்டிருக்கிறது.''[88] என அவ்வியக்கத்தின் பெறுபேறுகளைக் குறிப்பிடுகிறார் காந்தியடிகள்.

9.0.1 ஒத்துழையாமை இயக்கத்திற்குத் தென்னாட்டில் மிகுந்த ஆதரவு இருந்திருக்கிறது. ''...ஒத்துழையாமைப் போராட்டத்துக்கு ஆக்கமளித்தது தென்னாட்டவர் தந்த ஆதரவே எனலாம். நம்மவர் ஆதரவு இல்லாவிட்டால் போராட்டத்தை நடத்த காங்கிரசே முன்வந்திருக்குமா என்பது சந்தேகமே'' என்று மூதறிஞர் இராஜாஜி 1935இல் இந்துவில் எழுதினார்.''[89] ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தி வைத்த நேரத்தில், 1924 நவம்பர் நடுவில், திருவண்ணாமலையில் நடந்த 30ஆவது தமிழர் மாநாட்டில் தலைமையேற்றுப் பேசிய பெரியார் ஈ.வெ.இரா ''இரண்டு வருடகாலம் ஒத்துழையா இயக்கம் செய்த வேலையை

வேறெவ்வியக்கமுஞ் செய்யவில்லை. தேசத்திலிருந்த பதவி மோகத்தையும், அச்சத்தையும் அவ்வியக்கம் பறக்கடித்தது. தேசபக்தர்கள் சிறைசாலையைத் தவச்சாலையாகக் கொண்டார்கள். சுயராஜ்ய அரும்பும் முகிழ்ந்தது என்று சொல்லலாம். அத்தகைய ஒத்துழையா உணர்வு சாகாதவாறு காக்குமளவும் தேசத்துக்கு உய்வுண்டு என்று உறுதி கூறலாம்.... ஒத்துழையாமை ஒடுங்க ஒடுங்க நாட்டில் கட்சி வேற்றுமைகளும் சாதி சமயச் சண்டைகளும் பெருகும் என்பதிற் சந்தேகமில்லை''[90] என்று பேசினார்.

திரு.வி.க அவர்களும் ''மாநாட்டிற்குத் தலைமை வகித்த ஸ்ரீமான் ஈ.வி. இராமசாமி நாயக்கரைப் பற்றித் தமிழ் நாட்டார்க்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. ஸ்ரீமான் நாயக்கர் உள்ளும் புறமுமொத்த உண்மையாளர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர்.... ஒத்துழையாமையில் அவர்க்குள்ள பற்றுக்கோரளவில்லை. ஒத்துழையாமை உறங்கும் இவ்வேளையிலும் அவரது ஊக்கம் அதையே குறிக்கொண்டு நிற்கிறது. காந்தியடிகள் ஒத்துழையாமையை நிறுத்த முற்பட்டுள்ள இந்நேரத்திலும் ஸ்ரீமான் நாயக்கர் அதன்மாட்டு ஆர்வங்கொண்டு அறிக்கையை மறுத்துள்ளாரெனின் அவர்க்கு அவ்வியக்கத்தின் மீதுள்ள பற்று நனி விளங்கும்''[91] எனப் பெரியாரைப் பாராட்டி எழுதினார். இப்படித் தென்னாட்டவரால் ஆதரிக்கப்பட்டு மக்கள் இயக்கமாக மலர்ந்த ஒத்துழையாமை இயக்கத்தில் பாரதிதாசனும் பங்கேற்கிறார்.

9.0.2 பாரதிதாசன், ''1920 ஆம் ஆண்டில் சத்தியாகிரக இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டார்.''[92] ''ஒத்துழையாமைக் காலத்தில் இவர் வ.ரா. அவர்களின் 'சுதந்திரன்' முதலிய பத்திரிகைகட்கு எழுதிய கவிதைகள் நல்ல எழுச்சியை உண்டாக்கி உதவின.''[93] ''ஒத்துழையாமை சுடர் விட்டு எரியும்போது அதன் ஒவ்வொரு தத்துவத்தையும் விளக்கும் வகையில் இருபது சிறுசிறு நூல்கள் எழுதினார். அவற்றில் அப்போதே அச்சிடப்பெற்றவை சில. நூல் எழுதி முடித்தும் முகவுரை மேலட்டை முடிவுறாதவை சில. சில அச்சுக் கூடத்தையே எட்டிப் பார்க்கவில்லை.''[94]

9.0.3 முழுமையான விடுதலையை அடைவதற்கும், புதிய இந்தியாவைக் கட்டியெழுப்புவதற்கும் பயன்படுவதாகக் காந்தியடிகளால் முன்வைக்கப்பட்டதே 'நிர்மாணத் திட்டம்'. இக்கட்டுமானத் திட்டம் முதலில் பதின் மூன்று கூறுகளொடு தொடங்கிப் பின்னர்

பதினெட்டுக் கூறுகளைக் கொண்டதாக விரிவடைந்தது. வகுப்பு ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கதர், பிற கிராமக் கைத்தொழில்கள், துப்புரவு, அடிப்படைக் கல்வி, வயதுவந்தோர் கல்வி, பெண்ணுரிமை, உடல்நலம், தாய்மொழி, நாட்டுப் பொது மொழி, பொருளியற் சமன்மை, உழவர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், பழங்குடிகள், தொழுநோய்த்தடுப்பு ஆகியனவே அப்பதினெண் கூறுகள். இவற்றோடு பசுப்பாதுகாப்பு, இயற்கை மருத்துவம் ஆகியனவும் இணைப்பாக இறுதியில் இடம் பெற்றன.[95] 1941இல் காந்தியடிகளால் இத்திட்டம் முன் மொழியப்பட்டுப் பின்னர் விரிவடைந்ததெனினும், இதன் கூறுகள் பலவும் ஒத்துழையாமைக் காலத்திலும் அதற்கு முன்னரும் காந்தியடிகளாலும் பிறராலும் வலியுறுத்தப்பட்டு வந்தவையே. விடுதலை இயக்க வரலாற்றில் அவ்வப்போது வலியுறுத்தப்பட்ட இவற்றில் பல கூறுகளைப் பாட்டாக்கிய பெருமைக்குரியவர் பாரதிதாசன்.

9.0.4 விடுதலை இயக்கத்துக்குத் துணைபுரியும் நோக்கில் பாரதி தாசன் இயற்றி அச்சான நூல்களாக இன்று தெரிய வருவன மூன்று. அவை 'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்', 'தொண்டர் படைப் பாட்டு', 'கதர் இராட்டினப் பாட்டு' ஆகியன.[96] இவற்றுள் மூன்றாவது நூலே இன்று பார்வைக்குக் கிடைக்கிறது. ஏனை இரு நூல்களும் இந்நூலுக்கு முன்பே வெளியிடப்பட்டவையாகத் தெரிகின்றன.

9.1 'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்' பாரதியின் அரையுருவப் படமும் கருத்து விளக்கப் படங்களும் கொண்டு நாலணா விலையில் "நல்ல வர்ண மெட்டுகளில் தேசீய கீதங்கள், தேசீய விடுகவிகள், தேசீயத் தாலாட்டுகள், தேசீய விளையாட்டுப் பாட்டுகள், சிட்டுக் குருவிப் பாட்டு, நிலாப் பாட்டு, நாய்ப் பாட்டு, தேசீயக் கப்பல், தேசீய கல்யாணப் பாட்டுகள்" ஆகியவற்றை உள்ளடக்கி வெளி யிடப்பட்டதாக அறிகிறோம்.[97] இந்நூலில் அடங்கியனவாகக் குறிப்பிடப்பட்டுள்ள பாடல்கள் சில புதுவையிலிருந்து வெளிவந்த தேச சேவகன் இதழில் (1922, 1923) இடம் பெற்றுள்ளன. 1935இல் பாரதிதாசன் நடத்திய 'ஸ்ரீ சுப்ரமண்யபாரதி கவிதா மண்டலம்' இதழ்களில் பல பாடல்கள் மீண்டும் வெளியிடப் பட்டுள்ளன. இந்நூல் இன்று கிடைக்காத நிலையில் பாட்டு களின் தலைப்புகள், பாட்டினுள் சொல்லப்பட்டுள்ள செய்திகள் ஆகியவற்றை நோக்கினால் இதழ்களில் வெளியிடப்பட்டுள்ள

பாடல்களே நூலில் இருந்திருக்கலாம் என்னும் முடிவுக்கு வரலாம். பாடல்களைப் பார்ப்போம்.

9.1.1 நூலின் பெயரை நினைவுறுத்தும் வகையில் 'சிறுவர் சிறுமியர் பாட்டு-தேசியம்' என்னும் பெயரில் 'சென்று கனி பறித்துக் கொண்டு' என்ற மெட்டு என்னும் குறிப்பொடு ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் இதழில் (வெளியீடு 2) வந்துள்ள பாடல் :

மன்னும் இமயமலை வடக்காம்—புகழ்
வாய்ந்திருக்கும் குமரி தெற்காம்—நலம்
பன்னும் தொடர்ச்சி மலை இரண்டு—மற்ற
பக்கங்களில் அமைந்த துண்டு

பாரத நன்னாடு
பழமை பெற்றநாடு—தினம்
சாரத் தமிழிலதைப் பாடு!

முன்னும் கவிஞர் உளம் போன்றாள்—அவள்
முப்பது கோடி மைந்தர் ஈன்றாள்
அன்னை வாழ்க என வாழ்த்தி—மற்றும்
அவளுக் குறும் பகையைத் தாழ்த்தி,

ஆர்வத்தினில் ஏறு
தாரணிக்குள் வீறு—கொண்ட
பாரத புத்ரனென்று கூறு!

எனத் தொடங்குகிறது. இத்தொடக்கமே புது வகையில் கிழக்கு மேற்கு மலைத் தொடர்களை இந்தியப் பெருநாட்டின் எல்லைகளாக்கிக் காட்டுகிறது.

அடிமை நீங்க இந்த நரியும்—மண்ணில்
ஆர்க்கும் உயர்வென்பது தெரியும்
அடிமையாகும் அந்த காரம்—அதை
அகற்றினால் தெரியும் வீரம்

என முடியும் இப்பாடல் அடிமையாகும் இருளை அகற்றுதல் கடமையாகும் என்பதை இளையார்க்கு அறிவுறுத்துகிறது.

9.1.2 'தேசிய விடுகவி'களாக விடுகதை அமைப்பில் வெளிவந்த சில பாடல்கள் கிடைத்துள்ளன. புதிர்ப்பண்போடு சுவையான முறையில் 'பிள்ளைப் பாட்டு' எனும் குறிப்பொடு இளைஞரிடையிலும் நாட்டுப்பற்றை எழுப்பி அடிமை நிலையை அகற்றும் வகையில் அவை எழுதப்பட்டுள்ளன.

9.1.2.1 கங்கைநதி தலையிலுண்டு சிவனார் அல்ல
காலடியிற் குமரியுண்டு ராமன் அல்ல
சங்கையற்ற வயதுண்டு கிழவி யல்ல
சாத்திரத்தின் ஊற்றனையாள் கலைமா தல்ல
எங்குலத்தைப் பெற்றதுண்டு பிரமன் அல்ல
ஏற்றுண்ணும் எண்ணமில்லை இறுமாப் பல்ல
மங்கைஎன்று பாடிடுவார் புலவ ரெல்லாம்
மற்றிதனை இன்னதென வழுத்து வீரே!

இவ்விடுகவிக்கு விடை 'பாரதநாடு'. 'பாரத நாட்டை வாழ்த்து வீர்' என முடியும் இவ்வெண்சீர் விருத்தம் (தே.சே. 24.4.1923) பாரதத் தாயின் பெருமையைப் படம் பிடிக்கிறது.

9.1.2.2 'மை' ஈற்றுச் சொற்களை அடுக்கிக் காட்டி, நம்மைச் சீரழிக்கும் 'மை' எது? நாம் அடைய வேண்டிய 'மை' எது? என இரண்டு கேள்விகளை நம்முன் வைக்கும் இன்னொரு விடுகவி இது (க.ம. வெ. 2).

ஆமை அருமை பெருமை சிறுமை
அடிமை கடுமை மடமையே
ஊமை உண்மை இன்மை இளமை
உரிமை திறமை இவைகளில்
தீமை செய்து பாரதத்தைச்
சீர ழிப்பது சொல்வாய்
நாமடைய வேண்டு வதையும்
நன்கு பார்த்துக் கூறுவாய்

தீமை செய்து பாரதத்தைச் சீரழிப்பது 'அடிமை' (நிலை) என்றும், நாம் அடைய வேண்டியது 'உரிமை' என்றும் இப்பாட லுக்கு விடை தரப்பட்டுள்ளது. பிற்காலத்தில் மடமையைக் கடுமையாகச் சாடிய பாரதிதாசன், மடமை நிலையிலும் அடிமை நிலையே நாட்டைச் சீரழிப்பதாய்க் கருதியுள்ளது கவனிக்கத் தக்கது.

9.1.2.3 பாரத நாட்டுச் செல்வங்களுள் ஒன்றாகப் பலராலும் பாராட்டப்படுவது இமயமலை. அதனை விடையாக அமைத்து ஒரு விடுகவி பாடுகிறார் பாரதிதாசன் (க.ம வெ. 2).

அதிக உயரத்தில் ஆகாய வாணி
அவளூர்க்கும் நம்மூர்க்கும் வைத்ததோர் ஏணி
மதிப்புக் கடங்குமோ அவ்வேணி உயரம்

மனிதர்சிலர் ஏறப்பார்த் தடைந்தனர் துயரம்
குதித்துக் குதித்திறங் கிடுவர்சில பெண்கள்
குளிரில் இறங்குகையில் பாடிடுவர் பண்கள்
இதற்கு விடைசொல்லக் கூடுமோ? என்னால்
ஏற்ற பரிசளிக்க லாகும்இது சொன்னால்!

விடை சொன்னால் ஏற்ற பரிசு கிடைக்குமென்றாலும் எளிதில் விடையை உணர இயலாதவாறு இவ்விடுகவி அமைந்துள்ளது.

9.1.3 வேறு எப்பாவலரினும் தாலாட்டுப் பாடல்கள் பலவற்றைத் தந்தவர் பரரதிதாசன். மடமைத்தனத்தைப் போக்க வேண்டி அவர் பாடிய தாலாட்டுப் பாடல்களை உலகறியும். அடிமைத் தனத்தை அகற்ற வேண்டிப் பாரதப்பற்றை ஊட்டி ஆண், பெண் குழந்தைகட்கு அவர் பாடிய இரண்டு தாலாட்டுப் பாடல்களைப் பலர் அறியார் (க.ம.வெ.1).

9.1.3.1 வீர மகனே வேலவனே விண்ணவர்கள்
கோரும் உரிமை கொடுக்கவரும் ஆணழகே

என்று விளித்து,

நீல விழிகள் நிலவு முகம் தாமரைவாய்
கோல உதடு கொட்டுதமிழின் அரும்பு

என்று படம்பிடித்து,

வேளைக்கு வேளை விறல்வளரும் பாரதனே...
அமுத முனக்குப் பாரதத்தாய் அன்பெல்லாம்...
இன்பம் உனக்குப் பாரதப்போர் ஏற்பதிலே...

என்று அறிவுறுத்தி,

வெல்வம்என்று நீதான் விழிதுயில்வாய் பாரதனே

என்று இறுதி வெற்றியை ஆண் குழந்தையிடம் உறுதி செய்கிறார் பாரதிதாசன்.

9.1.3.2 ஆண் குழந்தையை நோக்கிப் 'பாரதப்போர் ஏற்பதிலே இன்பமுண்டு' எனக்கூறிய பாவலர் பெண் குழந்தையிடம் 'உயர்ந்த பாரதநாடு உன் உடைமை, பின் உனக்கு என்ன குறைச்சல்' எனப் பேசுகிறார்.

மொய்த்திருக்கும் உன்சமூகம் முப்பத்து முக்கோடி
வங்கத்து வீரருன்றன் வாழ்க்கையிலே சம்பந்தி
தேசத் துருக்கரெலாம் தேவியுன்றன் அண்ணன்மார்

மீசைத் தெலுங்கர்களும் வில்லர்களும் மைத்துனர்கள்
அமிழ்தக் கவிகள் அம்புவிக்குச் சொல்லிவைத்த
தமிழ்நாட்டு வீரரெலாம் சண்பகமே, சொந்தத்தார்

நாட்டுக்கு நூலிழைக்கும் நங்கையருன் அக்கையர்கள்
வீட்டில் துணிநெய்யும் வீரருன்றன் அம்மான்கள்
கன்னியாகுமரி முதல் கங்கைஇமயம் வரைக்கும்
உன்னிரத்தம் சேர்ந்த உடம்புடையார் பாரதத்தார்...

சந்தனக் காடு தவமலைகள் உன்னுடைமை
சிந்துநதி கங்கைநதி தித்திக்கும் பாற்குடங்கள்
யாவும் உனக்கே இளைய பெருமாட்டி...

உடைமை சிறந்த துண்டாம் உன்னுடைய பாரதத்தில்
படையிற் சிறந்தவராம் பாரத்ததாய் பெற்றமக்கள்
கோயில், மணிவீடு, கொட்டடிகள், சத்திரங்கள்
வாயிலிலே பொன்சிந்தும் மாளிகைகள் கோடியுண்டு
நெல்லும் மணிவகையும் நின்நாட்டில் வேண்டுமட்டும்
வெல்லக் கரும்பும் விளைவதுண்டாம் உன்நாட்டில்
எத்தாற் குறைச்சல் எவ்விதத்தால் தாழ்வுனக்குத்
தித்திக்குங் கற்கண்டே தேசமுத்தே கண்வளராய்

அழகான இப்பாடல் அழுத்தமான பாரதப் பற்றுக்கு அடிப்படை அமைப்பதை உணர்கிறோம்.

9.1.4 'எட்டிப் பறந்தால் மண் முழுவதும், ஏறிப் பறந்தால் வானமெலாம்' எனச் 'சித்தம் போலச் செய்யும் சிட்டுக் குருவிப் பெண்'ணை நோக்கி,

உன்னைக் கேட்பேன் ஒருசேதி
உரிமைப் பெண்ணின் நன்மகளே
தின்னத் தீனி தந்திடுவேன்
தெரிவிக் காமல் ஓடாதே
உன்னைப் போலே இன்பத்தில்
ஊறும் வகைதான் என்னேடி?

என்று கேட்கிறார் பாவலர் (தே. சே. 9.1.1923). கட்டின்றி-அடிமைக் கூண்டில் அகப்படாமல் திரியும் உரிமைப் பெண்ணின் நன் மகளாய்ச் சிட்டுக்குருவியைக் காண்பதும், உன்னைப் போல வாழ என்ன வழி என வினவுவதும் பாவலரின் விடுதலை வேட்கையைப் புலப்படுத்துகின்றன.

9.1.5 உலகம் முழுவதும் உலவி வந்த நிலவைப் பார்த்து அதன் பயணத்தின் நோக்கத்தைப் பல கேள்விகளில் பாவலர் வினவு கிறார். நிலவு, மறுமொழியாக 'நித்தமும் நாட்டை நிலையில் உயர்த்த', 'வீட்டைச் சுரண்டும் அடிமையை விலக்க', 'கொடுமை தவிர்த்துக் குலத்தைக்காக்க', 'சுதந்திர முடியின் சுகநிலை காண'த் துணை புரிவதே தன் பயணப் பயன் என்று சொல்கிறது. வினாவிடை அமைப்பில் சிறுவர்க்கும் புரியும் எளிய நடையில் அமைந்த இந்"நிலாப்பாட்டு"(தே.சே. 2.1.1923) அடிமை நிலையை அகற்றி விடுதலை காணும் அவாவைப் புலப்படுத்துகிறது.

9.1.6 'சுதந்திரம் உயிரின் இயற்கை' எனும் பெருந் தலைப்பின் கீழ் 'நாய்ப் பாட்டு' வெளியிடப்பட்டுள்ளது (க.ம.வெ. 1) பட்டு மெத்தையில் தூங்கிப் பாற்சோறு முதலியவற்றைச் சாப்பிட்டு வரும் 'மெத்தை வீட்டு வெள்ளை நாய்' ஒன்றும் 'கறுப்புத் தெருநாய்' ஒன்றும் உரையாடுகின்றன. வெள்ளை நாயின் கழுத்திலிருக்கும் ஒரு வடுவைப் பார்த்த கறுப்பு நாய் அதன் காரணத்தைக் கேட்கிறது, 'காதோரத்தில் வார் கொண்டு கட்டி வைப்பதால் வந்த வடு' என்று வெள்ளை நாய் விளம்புகிறது. அதனைக் கேட்ட கறுப்பு நாய்,

> அடிமை யாய்நீ இருப்பதேன்
> கதிதான கெடநீ நடப்பதா,?
> கட்டுப் பட்டுக் கிடப்பதா?
> சதிராய் உன்னிடம் அண்டேனே
> சதையில் ரத்தம் சுண்டேனே

என்று கூறி அடிமை வெள்ளை நாயிடம் நிற்க அஞ்சி ஓடி விடு கிறது. நாய்களின் மூலமாகச் 'சலுகைகளோடு கூடிய அடிமைத் தனத்திலும் வறுமை பொருந்திய உரிமை நிலை மேல்' என்பதைப் பாரதிதாசன் உணர்த்துகிறார்.

9.7.1 'தேசீயக் கப்பல்' எனும் பாடல் 'விடுதலைக்குச் செல்லும் கப்பல்' எனும் தலைப்பொடு 'ஏலப் பாட்டு மெட்டு' எனும் குறிப்புடன் வெளி வந்துள்ளது (க. ம. வெ : 2). பாரதத் திருநாட்டையே பயணக் கப்பலாகப் பார்க்கிறார் பாரதிதாசன்.

> சீரான இமயமலை வடகோடி முதலாய்த்
> தெற்குமுனை கன்னியா குமரிவரை நீளம்
> நேரான தொடர்மலைகள் இருபக்கம் உண்டு

நெடிதாய் இருக்குதே எங்களது கப்பல்,
பாராய் கொடிக்கம்பம் இமயமலைச் சிகரம் ;
பார்வைக்கும் எட்டாத அக்கம்பம் மீது
வார்கொண்ட மேகக் கொடிச்சீலை கட்டி
வானிற் பறக்கக் கிளம்புதே கப்பல் ;
உறுதிஎனும் பாயை விரியடா மேலே
உணர்வென்ற சுக்கானை நேரே பிடிப்பாய்,
முறையாய் நடக்கையில் ''பேதமாம்'' காற்று
மோதாத விதமாகப் பாரதத் தாரை
நிறையாக ஏற்றடா ஒற்றுமை ஆக்கி
நேராக ஓட்டடா பாரதக் கப்பல்
இறையும் சலிக்காத நல்வீரம் வேண்டும்
எதிரே சுதந்திரப் பொன்னாடு காண.

வேற்றுமைக் காற்று மோதாத வண்ணம் விடுதலைப் பொன்னாடு காண்பதற்காக விரைவாகச் செல்கிறது பாரதக் கப்பல்.

கடல்கிழிய ஓடுதே எங்களது கப்பல் !
காதவழி போகின்ற தேயோர் நொடிக்குள் !
விடுதலைப் பொன்னகரம் உயிருக்கும் இனிது
விழிகொண்ட ஆசையோ கடலினும் பெரிது
கெடுதலைகொள் அடிமையோ நரகினுந் தீது !
கீழான அடிமையைப் புழுவும் ஒப்பாது !
விடுதலைகொள் விடுதலைகொள் என்றதே உள்ளம்
விழிஎன்று காணும் அவ்வானந்த வெள்ளம் ?

இங்கே விடுதலைப் பேரின்ப வெள்ளத்தை விழி என்று காணும் என்று வினாவுகின்ற பாவலர்,

துளியில்லை சந்தேகம் இனியேது தாபம் ?
சுதந்தரப் பொன்னாடு மிகவும் சமீபம்

எனத் தானே விடை கூறிப் பாடலை முடிக்கிறார். கப்பலாகப் பாரத நாட்டைக் காணும் முறையால் இப்பாடல் புதுமையும் பொலிவும் பெறுகிறது.

9.1.8 'மகாவதி குணமாதரே வேகமாய்' என்ற மெட்டில் 'தேசீயத் திருமண வாழ்த்து' பாடுகிறார் பாரதிதாசன் (க. ம. வெ: 2).

வாழ்க தம்பதிகள் வாழ்கநற் சுற்றமே !
வாழ்க நற்பாரத சோதரர் முற்றுமே !
வாழ்க நற்பாரத தேசமும் புவியும்
வாழ்க எவ்வுயிரும் நனி வாழ்க

என முடியும் இப்பாடலின் இடையில்,

அடிமையும் மிடிமையும் ஆண்மையாய் மாற்றியே
ஆவியினும் இனிதாய்த் தேசத்தைப் போற்றியே
கடமை நினைந்திரு கையின்மேல் உரிமை
கண்டுயர் வெய்துக இத்தரை மேல்

என்று வாழ்த்தி வேண்டுகிறார். உயிரினும் இனிதாய்ப் பாரத நாட்டைப் போற்றுவதிலும் உரிமை கண்டு உயர்வெய்துவதிலும் பாவலனுக்கு இருந்த அக்கறையை அறிந்து கொள்கிறோம். வேணு நாயக்கரின் திருமண வரவேற்பில் பாரதியாரின் தேசியப் பாடலைப் பாடிய பாரதிதாசன் தாமே தேசியத் திருமண வாழ்த்துப் பாடும் அளவுக்கு வளர்ந்துள்ளதையும் காண்கிறோம்.

9.2 'தொண்டர் படைப் பாட்டு' எனும் நூல் மூன்றணா விலையில் கருத்து விளக்கப் படங்களோடு ''தாய் நாடு, தொண்டரின் எழுச்சி, தொண்டரைக் கூட்டுதல், வீரன் தோள், வீரத் தமிழர், மிதவாதியை எழுப்பல்'' முதலிய பலதுறைப் பாடல்களை உள்ளடக்கி வெளிவந்தது.[98] இந்நூலும் இப்போது கிடைக்க வில்லை என்பது முன்னரே சுட்டப்பட்டது.

சேர்வீர் தொண்டர்படைக் கெல்லோரும்—அரைநொடியில்
பாரீர் நமக்குவந்த கேடு—பொறுக்கவில்லை
வாரீர் இதனை அடியோடு—கல்ல எம்மோடு
இன்பம் பொலிந்த திருநாட்டை—நவமணிகள்
ஈன்றோர் குவித்துவைத்த வீட்டை—மறவர் குலம்
என்றும் மலிந்தி ருக்கும்—இணையுலகில்
இல்லாவிதம் கிடைத்த தேட்டைப்—பிறர்தளைந்த
வன்மை விலங்ககலப் பூட்டை உடைத்துக் காட்டச்
(சேர்வீர்)

கண்ணன் வழிப்பிறந்த சாதி—நமக்கருந்த
கஞ்சியற்று வயிற்றிற் பாதி—பிணிவகைகள்
நண்ணி வருந்துவது மீதி—அடிமையென

நம்மைப் பிடித்திட்ட வியாதி—தொலைந்ததென்று
விண்ணும் அதிர்சங்கை யூதிப்—'பராக்' கென்றோதி
(சேர்வீர்)

என நீண்டு செல்லும் இப்பாடல்[99] வெள்ளையர் ஆட்சியை நோயாகக் கருதி அது ஒழிந்ததென்று போர்ச்சங்கை ஊதச் சொல்கிறது. பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் எனும் பகுப்பில் அமைந்துள்ள இப்பாடலின் தொடக்கத்தில் ''ஸ்ரீ குணங்குடி மஸ்தான், 'போவோம் குணங்குடிக் கெல்லோரும்—புறப்படுங்கள்' என்று பாடிய மெட்டில் இதனைப் பாடித் தொண்டர்கள்—மற்றும் பாரதப் புத்திரர்களைத் தொண்டர் படையிற் சேரக் கேட்க வேண்டும்'' எனும் குறிப்பு காணப்படுகிறது. இப்பாடலும் 'தெய்வீகத் தாய்நாடு' (தே.சே. 7-11-1922) எனும் பாடலும் தொண்டர் படைப் பாட்டு நூலில் அடங்கியிருக்கலாம்.[100] 'மிதவாதியை எழுப்பல்' எனுந் தலைப்பில் ஒரு பாடல் இடம் பெற்றிருப்பதிலிருந்து பாரதிதாசன் தீவிரவாத அணிச் சார்பினர் எனக் கொள்ளலாம்.

9.3 காந்தியடிகள் 1920 ஆகஸ்டு 3இல் 'வாழ்நாள் முழுவதும் கதர் அணியப் போவதாக' உறுதி எடுத்துக்கொள்கிறார். 1921இல் அயல்நாட்டுத் துணிகளை இறக்குமதி செய்யாதீர் என வணிகர்களுக்கும் அவற்றை அணியாதீர் என மக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கிறார். பம்பாயிலும் பிற இடங்களிலும் அயலகத் துணி எரிப்பு இயக்கத்தைத் தொடங்கி வைக்கிறார்.[101] இராட்டினத்தின் தேவையை வலியுறுத்துகிறார். பேராயக் கட்சியின் கொடியில் இராட்டினம் இடம் பெறுகிறது. நாட்டு மக்கள் அனைவரும் நூல் நூற்றால் ஓராண்டுக்குள் இந்தியா விடுதலை அடைந்து விடும் எனக் குறிப்பிடுவதோடு[102] ஒவ்வொரு நாளும் அரை மணி நேரம் நூற்கும் பழக்கத்தை மேற்கொள்கிறார் காந்தியடிகள். பின்னர் கதரியக்கம் மக்கள் இயக்கமாக மலர்கிறது. கதரியக்கத்தோடு பாரதிதாசன் தம்மைப் பிணைத்துக்கொண்டதன் விளைவே 'கதர் இராட்டினப் பாட்டு' எனும் நூல்.[103] இது முன்னரே எழுதப்பெற்று 1930இல் வெளியானது. ஒன்றே காலணா விலையில் கருத்து விளக்கப் படங்களோடு வெளியாகியுள்ள இந்நூலில் கதர், இராட்டினம் பற்றி முறையே, 'காந்தியடிகளும் கதரும்', 'சுதந்திர தேவியும் கதரும்', 'தேசத்தாரின் பிரதான வேலை', 'இராட்டினச் சிறப்பு', 'அன்னைக்கு ஆடை வளர்க' எனும் ஐந்து பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

அன்னியர் நூலைத் தொடோம்' என்ற சேதி
அறைந்திடடா புவி முற்றும்—எங்கள்
அறுபது கோடித் தடக்கைகள் ராட்டினம்
சுற்றும்-சுற்றும்-சுற்றும்...

விதி நமக்கு வாய்த்த துண்டோ
வேற்றுவர் கைபார்க்க—நாம்
வேற்றுவர் கைபார்க்க
விளையும் பஞ்சில் விரல் பொருந்த
விடுதலை நீர்காண்பீர்.

இவை இந்நூலில் இடம் பெறும் பாடல்களில் சில. இவற்றிலிருந்தே பஞ்சில் விரல் பொருந்தினால் பாரதம் விடுதலை அடையும் எனப் பாரதிதாசன் கருதியதை அறியலாம்.

## 10 : மேயோ ஒரு பன்றி

10.0 கன்னி காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது ஆங்கிலேய அரசால் ஏவப்பட்டு, இந்தியாவில் நிலவும் சாதி சமய வேறுபாடுகள், மூடப் பழக்க வழக்கங்கள் முதலியவற்றைக் கண்டறிந்து, இந்திய மக்கள் தன்னாட்சிக்குத் தகுதியற்ற காட்டுமிராண்டி நிலையில் இருப்பதாய் உலகத்திற்கு உணர்த்தும் வகையில் 'இந்தியத் தாய்' என்னும் நூலை 1927இல் வெளியிட்டார். அந்நூல் அறிவுலகில் ஓர் அதிர்வை ஏற்படுத்தியது. அனைத்திந்தியப் பேராயக் கட்சியின் கடுமையான கண்டனத்திற்கு ஆளாகியது. உடனுக்குடன் அதனைக் கண்டித்து இலாலா லசபதிராய் முதலிய பலர் நூல்களையும், கட்டுரைகளையும் எழுதினர்.[104] 'இந்திய மாதா' என அதன் தமிழாக்கம் 1928இல் வெளியிடப்பட்டது. அதனை எதிர்த்தும் ஆதரித்தும் தமிழிலும் நூல்கள் வெளியாயின. வ.ரா அவர்களின் 'மாயா மேயோ அல்லது மேயோவுக்கு சவுக்கடி' (1928) என்னும் நூலும் கோவை ச. அய்யாமுத்து அவர்களின் 'மேயோ கூற்று மெய்யா? பொய்யா?' என்னும் நூலும் (1929) குறிப்பிடத்தக்கன.

10.1 பாரதிதாசன் அந்நூலை வன்மையாகக் கண்டித்து ''மேயோ ஒரு பன்றி'' என்று ஒரு சிறு நூல் எழுதியதாகத் தெரிகிறது. இன்று கிடைக்காத அந்நூலில், ''இந்தியா ஒரு நந்தவனம் அதன் அழகுகளை (அதாவது அறிந்து கொள்ள வேண்டிய செய்திகளை) அவள் காணாது விட்டாள். பூஞ்சோலையைப்

பெருக்கிக் கொட்டுகிற எருக் குழியையே (குறைகளையே) அவள் நந்தவனம் என்று கருதியிருக்கிறாள்.

குப்பை கூளங்களே அவள் கண்களில் பட்டுள்ளன. நல்ல காட்சிகளை (நமது நாட்டில் பார்க்க வேண்டிய இடங்களை—படிக்க வேண்டிய நூல்களை—பண்பாட்டை) அவள் கண்டு—கேட்டு அறியவில்லை.

குப்பை கூளத்தை—சாய்க்கடைளைத் தேடிச் சீய்க்கும் குணம் பன்றிக்குத் தானே உண்டு'' என்னும் கருத்து விளக்கப் பட்டிருந்தாக அறிகிறோம்.[105]

## 11 : மதுவிலக்கு

11.0 விடுதலை இயக்கத்தின் பன்முகப்பட்ட பணிகளுள் மதுவிலக்குக் கொள்கை விளக்கமும் ஒன்று. 1920இல் ஒத்துழையாமை இயக்கத்தோடு மதுவிலக்குப் பணியினையும் மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார் காந்தியடிகள். ''சமூகத் துறையிலும் நல்லொழுக்கத்துறையிலும் இது ஒரு ஜீவாதாரமான சீர்திருத்தமாகும். எனினும் காங்கிரஸ்காரர் கிரமமாக எவ்வளவு ஆர்வங் காட்ட வேண்டுமோ அவ்வளவு ஆர்வம் இதில் காட்டவில்லை'' என்றார் காந்தியடிகள்.[106] 1921இல் பேராயக் கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவராக இருந்த பெரியார் ஈ.வெ.ரா. தலைமையில் ஈரோட்டில் அவர் மனைவியும் தங்கையும் உட்படப் பலர் கலந்து கொண்டு கைதான கள்ளுக்கடை மறியல் நடைபெற்றது.[107] ''மது விலக்கில் ஈரோடு மட்டுமே அஞ்சாது பணியாற்றி வருகிறது. அதனால் இராமசாமிநாய்க்கருக்கு ஒரு மாதச் சாதாரணச் சிறைத் தண்டனை பரிசாகக் கிடைத்திருக்கிறது'' என்று காந்தியடிகள் 'யங் இந்தியா' (25-12-1921) இதழில் பாராட்டி எழுதினார். தனி மனிதனை, குடும்பத்தை, நாட்டை எவ்வாறு மது சீரழிக்கிறது என்பது பல வகைகளில் விளக்கப்பட்டது.

'கள்ளை அகற்றுதல் தேசக்கலை' எனக் கருதிய பாரதிதாசன் மதுவிலக்குப் பணியிலும் தன்னை இணைத்துக்கொண்டு பாடிய மூன்று பாடல்கள் கிடைத்துள்ளன.

11.1 புதுவையில் வாழ்ந்த பாவலர், 'மதியைக் கலக்குவது', ''நிதியனைத்தும் வீணாக்குவது'', 'நிதம் நலிய வைப்பது' என மதுவின் தீமைகளைச் சுட்டி, அதனை விலக்கச் சொல்லி 'மதுவிலக்குப் பாட்டு' (தே.சே 12-12-1922) பாடுகிறார்.

மதுவிலக்கு மதிதுலக்கு மனிதவாழ்வில் மேன்மைகொள்
மகிதலத்தில் உனதுநாட்டை வடுவகற்ற நோன்புகொள்...
நிறைகுளத்தைப் பாசிமூடி நிலைகெடுக்கும வாறுபோல்
நின்மனத்தில் தெளியவிக்கும் நீசமதுவை நீக்குவாய்!...
திறனிழந்து செயலிழந்து தெருவிலெங்கும் சிறியனாய்த்
திரியவைக்கும் குடியைவிட்டுத் தேசசேவை செய்குவாய்!

மதுவைவிலக்கி மதியைத்துலக்கி நாட்டுப்பணியில் நாட்டஞ் செலுத்தச் சொல்லுவதே பாட்டின் கருத்து.

11.2 குடியர்கள் குடியை விட்டுத் தெளிவுபெற்றுப் பாரதத் தேவியிடம் கூறுவதாகப் பிறிதொரு பாடல் (தே. சே. 22,11.1922) அமைகிறது.

அம்மா இனிக்குடிக்க மாட்டோம் அதன்தீமை
கைமேற் கனிபோலக் கண்டுவிட்டோம் ஏழைகள்
பொய்ம்மானைப் பின்பற்றி ராமன் புரிந்ததுபோல்
இம்மதுவின் மாயங்கண் டிடறித் தலைகவிழ்த்தோம்
நஞ்சிருந்த பாண்டத்தை நக்கி வசமழிந்து
நெஞ்சிலுர மிழந்து நிதியிழந்தோ மெந்தாயே!
பஞ்சத்தைத் தேசத்தைப் பாபத்தைப் பெண்டாட்டி
நெஞ்சத்தை யெண்ணி விஷப்புனலை நீக்கிவிட்டோம்...
ஈன்றாள் வெறுக்க இல்லாள் நடுநடுங்கச்
சான்றோர் அவமதிக்கச் சமமதித்தோம் இம்மதுவால்
ஊன்வேண்டும் கள்வகைக்கே யுரைக்கு மதுவெனும்பேர்
தேனுக்கு மிட்டழைத்தால் செம்மலர்தான் நாணாதோ ?
கள்ளென்னும் தாயோடு காமம்கொலை களவுப்
பிள்ளைகளும் பெண்டுமாய்ப் பின்தொடர்தல்
கண்டுகொண்டோம்...

சோர்வு மதிமயக்கம் துன்பமெலாம் ஒன்றாக்கி
ஆர்அனுப்பினார் மதுவென் றறியோம் அருந்தேவீ...
கொள்ளிப் பிசாசென்னும் கொள்கையினை நம்பாதார்
கள்ளைப் பிசாசென்றால் காரணமும் கேட்பாரோ...
உடலுறுதி வீரமிவை உண்டாக்கும் கள்ளென்று
மடையர்சிலர் கூறுவது வஞ்சமடி எந்தாயே...

என்கின்றனர் தெளிவு பெற்ற குடியர்கள். குடியர்கள் தெளிவு பெற்றுக் கூறும் பாடல் வரிகள் நம்மை மயக்கும் நயம் மிக்கன.

11.3. பிள்ளைப் பாட்டாக மதுவிலக்கு விடுகவி ஒன்று (க.ம.வெ : 2) பாடுகிறார் பாரதிதாசன்.

ஈக்கள் எறும்புகள் எலிகள் பூனைகள்
எருதுகள் குதிரைகள்
பூக்கள் மரங்கள் செடிகள் கொடிகள்
புளிகள் மிளகாய்கள்
ஊக்கங் கெடவைத் துங்கள் பணத்தை
ஒழித்துப் பாரதத்தை
ஏக்கங் கொள்ள அறிவை மயக்குவ
திவற்றில் எதுசொல்வாய்?

எனப் பன்மை விகுதியாகிய 'கள்' சேர்ந்த சொற்கள் பலவற்றை அடுக்கி, ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி, இறுதியில் 'புளி கள் - புளிக்கக்கூடிய கள்'' எனும் வினைத்தொகைத் தொடரை விடையாகச் சுட்டுகிறார். ஆக ஊக்கத்தைக் கெடுத்து, பணத்தை. ஒழித்துப் பாரதத்தை ஏக்கங்கொள்ளச் செய்வது மது என்பது பாரதிதாசன் கருத்து.

## 12 : மயக்கும் ஆங்கிலம்

12.0 ''தம்முடைய தாய் மொழியைவிடச் சிறப்புடையதாக ஆங்கில மொழியைக் கருதி வந்திருக்கிறோம். இதன் பயனாய். கல்வி கற்று அரசியல் உணர்ச்சிபடைத்த மக்களுக்கும் பாமர மக்களுக்கு மிடையே பெருத்த பிளவு ஏற்பட்டிருக்கிறது... இந்தக் கேட்டை அகற்றினாலொழிய, பாமர மக்களின் உள்ளம் வளர வகை யின்றிச் சிறைப்பட்டே இருக்க நேருமென்பதை எளிதில் உணர லாம். சுயராஜ்யத்தை நிர்மாணம் செய்வதில் பாமரமக்கள் உருவான எந்தப் பங்கும் கொள்ளமுடியாது''[108] என்று மிகுமக்கள் நலனுக்கு எதிரான ஆங்கில மோகத்தைச் சுட்டுகிறார் காந்தி யடிகள்.

12.1 வேறுவேறு பாஷைகள் கற்பாய்நீ
வீட்டுவார்த்தை கற்கிலாய் போ போ போ

என்று இகழும் பாரதி, ஆங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர், நம் பெருமைமிகு மரபுவழிச் செல்வங்களை முற்றிலும் அறியாமல் பேடிக்கல்வி பயின்றுழல்வதைத் தன் 'சுயசரிதையில்' மிகுந்த வருத்தத்துடன் குறிப்பிடுகிறார். அவரின் தொண்டராகிய பாரதி தாசனும் ஆங்கில மோகத்தைக் கடியும் வகையில் இயற்றியுள்ள பாடல் (தே.சே 23.1-1923 & 6.2.1923) குறிப்பிடத்தக்கது.[109]. 'பாரததேவி தனது மாணவர்களுக்குக் கூறுவது' என்னுந் தலைப்பில் அமைந்தது அப்பாடல்.

என்னாரு யிராக
    யான்பெற்றேன் உம்மையெலாம்
அன்னையென் றென்னை
    அறியீரோ மாணவரே

எனத் தன் மாணவர்களை நோக்கிப் பேசும் பாரதத்தாய் (23-1-1923)

அடிமையுற்ற அன்னை
    அரசுபெற உங்களினற்
கடமையின்ன தென்றுதான்
    கருதினிரோ மாணவரே

எனக் கடமையை நினைவுப்படுத்தி

சாங்கால மட்டும்
    சலித்துப் புடைத்தாலும்
ஆங்கிலத்தில் உம்நிலைமை
    ஆய்வதுண்டோ மாணவரே?...

அயலார் வெறும் பாஷை
    ஆய்வதனால் உங்களின்சாண்
வயிறு நிறையுமென்ற
    வார்த்தையில்தான் உண்மையுண்டோ?

என ஆங்கிலக் கல்வியின் பயனின்மையைச் சுட்டிப்

பழக்கி வரும் கல்வியிலே
    பாரதத்துக்கா வதுண்டோ?

எனத் தெளிவுபடுத்துகிறார்.

செந்தமிழாற் கம்பன்
    சிறந்தானா நேற்றிங்கு
வந்தவரின் ஆங்கிலத்தால்
    இன்பம் வளர்த்தானா?...

அருச்சுனன் போல் கண்ணன் போல்
    ஆக நினைத்தால்
மருளூட்டும் ஆங்கிலத்தை
    மாய்ப்பீர் உம் சிந்தையிலே...

வந்தவர்பால் நீங்களெல்லாம்
　　வாங்கியுண்ணக் கற்றீர்கள்
நொந்த உமதுகுலம்
　　ஈடேற நோக்கீரோ

என ஆங்கில மயக்கத்தை மனத்திலிருந்து மாய்த்துப் பாரதக் குலத்தை ஈடேற்றும் பார்வை பெறவேண்டும் என்கிறார்.

## 13 : 'நீச நாகரிகம்'

13.0 ''தேசீயம் தேசீய மென்று மேலைத் தேசீயத்தைப் பரப்பும் இயக்கங்களால் என்ன பயன் விளையும்? ஒத்துழையா இயக்கத்தால் பாரதநாட்டு உடை, பாரத நாட்டு ஒழுக்கம், பாரத நாட்டுப் பாஷைப் பற்று முதலிய உண்மைத் தேசீய உணர்ச்சி யன்றோ பரவிற்று? ஒத்துழையாமை ஒடுங்கினால் அதனூடே அவ்வுணர்ச்சியும் தானாகவே ஒடுங்குமன்றோ? இப்பொழுதே தாய்மொழியில் பொதுக்கூட்டங்களில் பேசிக் கொண்டிருந்த தலைவர்கள் மீண்டும் ஆங்கிலத்தில் பேசத் தொடங்கிவிட்டார்கள். இன்னும் பலவித மாறுதல்கள் நிகழும்''[110] என்று பாரத நாகரிகப் பாதுகாப்பு இயக்கமாக ஒத்துழையாமை இயக்கம் பயன் விளைத்ததைத் திரு. வி. க குறிப்பிடுகிறார்.

13.1 அவ்வியக்கத்தைச் சார்ந்தியங்கிய பாரதிதாசன் வழிபாடு, உடை, உணவு, மருத்துவம் முதலிய பல பழக்கவழக்கங்களில் பாரதத்தார் சிதைவுற்று வெள்ளையரைப் பின்பற்றுவதைக் கண்டித்து 'நீச நாகரிகம்' (தே. சே. 22.5.1923 & 29.5.1923) ஸ்வதர்மம் (தே. சே. 10.7.1923) முதலிய பாடல்களில் பேசுகிறார்.

'கோயிலிலென்ன, குளத்திலென்னபயன்! கும்பிடல் யாவும் வெளி வேஷம்' என்பது, 'சாத்திரம் பொய்மை, சரித்திரம் பொய் யெனச் சாற்றுவது' முதலிய பலவற்றை நீசநாகரிக வெளிப் பாடுகளாகச் சுட்டி வன்மையாகக் கண்டிக்கிறார். வெள்ளை யரைப்போலவே உடுத்துவது, முடிவெட்டிக்கொள்வது, தமிழைத் துப்பித்துப்பிப் பேசுவது ஆகியவற்றை,

வெள்ளைத்துரை உடைபோ லுடுப்போம் மயிர்
வெட்டிக்கொள்வோம் தமிழ் துப்பிச் செல்வோம்-எனத்
துள்ளுது மற்றொரு நாகரிகம் இதிற்
சொக்குதல் பற்பலர் பாரதமே

எனக் குறிப்பதோடு இவ்வாறு ஒழுகுவோரைத் 'துப்பிடு பாரதமே' என்கிறார் பாரதிதாசன். ''தேச உடையிருக்க வேற்றுடையைத் தீண்டுவதோ'' என்பதும் அவர் வினா. 'முந்தை வழங்கிய சத்துணவும் நல்ல மூச்சை வளர்த்திடும் பானகங் களும்' இருக்க அவற்றை விடுத்துச்

செந்தமி ழிற்பெய ரிட்டறி யாக்கொடு
தேயிலை காப்பியை முப்பொழுதும்-உண்டு
வந்தனை செய்யென நாகரிக மொன்று
வல்லமை காட்டுது பாரதமே

என வருந்துகிறார். 'நாடியைப் பிடித்தறிந்து கோடி வயித்தியம் செய்யும் பச்சிலை வழிப்பட்ட நம் மருத்துவ முறை'களைப் புறக்கணித்து

வெள்ளை வயித்தியம் தெய்விகமாம்-அதை
வேண்டி அழைப்பது செய்தவமாம்
உள்ள மகிழ்ந்து குதிக்குதிங்கே-புலை
ஊனர் விரும்பிய நாகரிகம்

என்று கடிகிறார். 'தின்னுதல், பூசுதல், தினம் பழகும் பொருள் எல்லாம் சீமையிற் செய்தவை நல்லவை' என்று தன்னை மயக்கும் நாகரிகத்தைக் கைவிட்டுத் 'தேசத்திலுள்ளவை போதும்' என்ற அறிவு பெறவேண்டும் என்கிறார்.

## 14: 'பசுத் தெய்வம்'

14·0 பசுவைப் போற்றுதற்குரிய தாயாகவும், தெய்வமாகவும் கருதுவது இந்துசமயமரபு. பல பயன்களை அளிக்கும் அதனைப் பாதுகாப்பதற்குரிய செல்வமாகக் கருதினர். இருக்கு வேதம், அதர்வவேதம், சதபத பிராமணம் முதலியன பசுவை வணங்குதற்குரியதாகவும் கொல்லக் கூடாததாகவும் குறிப்பிடுகின்றன. மகாபாரதம் பசுவின் புனிதத்தைப் பரக்கப் பேசுகிறது.[111] தொல்காப்பியர் குறிப்பிடும் ''ஆதந்தோம்பல்'' எனும் வெட்சித் திணை விளக்கத் தொடரும் (புறத்திணையியல் 2) ''ஆவும் ஆனியற்பார்ப்பன மாக்களும் .. நும் அரண்சேர்மின்'' எனும் புறநானூற்றுப் பகுதி(9)யும் மதுரையை அழற்படுத்தும் கண்ணகி. 'பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர் முதலியோரைக் கைவிட்டுத் தீயோரைச் சேர்க' எனத் தீத்தெய்வத்திற்கு ஆணையிடுவதும் (அழற்படு காதை 53-55) பசுப் பாதுகாப்புக் கருத்தைப்

புலப்படுத்துவன. ''இந்தியாவில் உள்ள முக்கிய பிரச்சினைகளில் பசுபாலனம் ஒன்று. பேச்சினாலும், பணத்தினாலும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. பசுபாலன அறிவுடைய நிபுணர் பலர் இந்த வேலைக்குத் தங்களை அர்ப்பணம் செய்ய வேண்டும். பணம் படைத்தவர்கள் சேவையுணர்ச்சியோடு இதில் ஈடுபட வேண்டும். சுயலாபமும் சுரண்டலும் இதில் கூடாது... பசுபாலனம் எளிதன்று, அன்னிய ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்றுவதைவிட இது கஷ்டமானது,''[112] என்றார் காந்தியடிகள். அவர் வகுத்தளித்த நிர்மாணத் திட்டங்களில் ஒன்றாகப் பின்னர் இணைக்கப்பட்டது 'பசுபாலனம்'.[113]

14.0.1 இந்து சமய மரபில் பசுக்கொலை கடும் பாவச் செயல்களில் ஒன்றாகக் கருதிக் கடியப்படுவது. இசுலாமிய மரபில் பசுக்கொலை விலக்கப் படவில்லை. இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர் மாட்டிறைச்சியை விரும்பியுண்ணும் மரபினர். உண்பதற்காகவே பசுக்கள் கொல்லப்பட்டன. இதனை எதிர்த்துப் பல குரல்கள் எழுந்தன. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839-1898) தன் 'ஆங்கிலியர் அந்தாதி'யில் ''சொல்லரு மேன்மைப் பசு மேடம் ஆதிய துய்த்துவக்கும் புல்லறிவாண்மை பொலி ஆங்கிலியர்'' (பா.1), ''இரக்கம் அணுவளவேனும் இல்லாமல் இளம் பசுக் கன்(று) அரற்ற அரிந்து வெந்(து) உண்டு குலாவிடும் ஆங்கிலியர்'' (பா. 5), ''பசுக்கொலை செய்யும் வம்பர்'' (பா. 83), ''ஆக்குட்டியும் தின்னும் பொல்லர்'' (இறுதிப் பா) என்றெல்லாம் 'ஆவுரித்துத் தின்றுழலும்' ஆங்கிலேயரைக் கடுமையாகத் தாக்குகிறார்.[114]

14.0.2 ஆங்கிலேயராட்சியை எதிர்ப்பதற்குரிய காரணங்களில் இதுவும் ஒன்றாக அமைந்தது. பசுவதைத் தடுப்பு இயக்கங்கள் தோன்றின. பசுப்புலாலினாலான நெய்யைத் துப்பாக்கித் தோட்டாக்களில் தடவுவதை இந்துப் படை மறவர்கள் (1867) எதிர்த்தனர். பசுக்கொலையை எதிர்த்துப் பல கலவரங்கள் நடந்தன. 1917இல் பீகாரில் ஒரு கலவரத்தில் முப்பது பேர் கொல்லப்பட்டதோடு 170 முசுலீம் கிராமங்களும் தரைமட்டமாக்கப்பட்டன.[115] பசுக்கொலையைச் சட்டத்தால் தடை செய்ய வேண்டும் என்று குரல் கொடுத்தனர். காந்தியடிகள்,

> ''பசுக்கொலையைச் சட்டத்தால் நிறுத்திவிட முடியாது. நல்ல அறிவு, கல்வி, கருணை இவைகளே இந்த அநீதியை நிறுத்த முடியம்... ஹிந்து மதம் பசுக்கொலை கூடாதென்று

ஹிந்துக்களுக்கே கட்டளையிட்டது, உலகத்துக்கல்ல ... இந்தியாவில் இருப்பவர்கள் ஹிந்துக்கள் மாத்திரமல்ல. முஸ்லீம், பார்சி, சீக்கியர், கிறிஸ்துவர், யூதர் அனைவரும் இருக்கிறார்கள். ஹிந்துக்கள் மதத்துக்கு விரோதமானது என்றால், இந்திய நாட்டில் சட்டபூர்வமாக ஏன் பசுவதையைத் தடுக்கவேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. நான் ஐம்பது வருஷமாக பசு வழிபாடு செய்பவன். பசுவுக்கு இந்திய வாழ்க்கையில் நிரந்தரமான இடமுண்டு. முஸ்லீம் மக்களுடைய மனத்தை ஹிந்து சகோதரர்கள் கவர்ந்தால் இவர்கள் மனம் புண்படாமலிருக்க வேண்டி அவர்கள் பசுவதையைத் தவிர்க்கலாம்'' [116] என்றார்.

14.1 பாரதிதாசன் 'பசுத் தெய்வம்' என்றொரு பாடல் வரைந்துள்ளார் (தே.சே. 10.4.1923). பசுவை ''மடியினில் பால் சுமந்தே மாந்தருக்களித்திட வருந்தாய்'', ''மோரொடு சுளைத் தயிரும் மணம் மொகு மொகுவென வரும் நெய்ப்பயனும் தரும்'' தாய், ''குவலயம் தனக்கொரு செவிலி'' என்றெல்லாம் குறிப்பதோடு,

நல்லதொரு தெய்வ முரைப்பேன்-எங்கள்
நாட்டினர் நலத்தையுல கூட்டநினைத்தே-நான்
சொல்லில் மட்டும் உரைப்பதன்றாம்-எங்கள்
சுருதியுரைத்த பல தெய்வங்களிலே-நல்ல
புல்லருந்தும் பசுமாடு-இன்பம்
பொழிந்து நிதம் உடலைப் பிழிந்து தரும்-புவிக்
கெல்லையற்ற உபகாரம்-நம்மை
இன்புறச் செயுந் தெய்வமென்று தொழுவோம்

என்று வேதம் உரைக்கும் தெய்வங்களில் பசுவும் ஒன்று எனக் குறிப்பிட்டுப் 'பசுவாசம் புரியுமிடம் மணிக்கோயில்' 'அதன் அடிகளில் வணங்கிடுதல் அருந் தவம்' என்கிறார்.

14.1.1 பசுவைப் பாதுகாப்பதில் பழங்காலம் எவ்வாறு சிறந்திருந்தது என்பதை விளக்குவதோடு அதன் புனிதத்தை மறந்த இன்றைய உலகைச் 'சனியுலகு' எனச் சாடுகிறார்.

காவலர் கடமையிலே-பசுக்
காப்பது தலையெனக் காத்துநின்றார்-எங்கள்
பாவலர் வாழ்த்திலெல்லாம்-தெய்வம்

பசுவினை மறந்தொரு பாட்டிலையாம்-திரு
தாவுதல் பூ வெளிலோ-அவள்
சந்ததம் கிடப்பது பசுவிடமாம்-அறத்
தேவர்கள் கூட்டமெல்லாம்-பசுத்
தெய்வத்தினிடம் வந்து நடம்புரிவார்...
எண்ணான் கறங்களிலே-பசு
இன்னுடல் உரஞ்சிடத் தறிநடுதல்-இது
பண்ணா திருப்பவரும்-தெய்வம்
பசுவினை வழிபட மறந்தவரும்-முன்னர்க்
கண்ணாற் பார்க்கரிதாம்-அந்தக்
காலத்தைக் கனவிலும் மறப்பதுண்டோ?-ஓ ஓ!
புண்ணாங் குழியுலகே-பசுப்
புனித மறந்த பெருஞ்சனியுலகே

என்று முப்பத்திரண்டு அறங்களில்[117] ஆவுரிஞ்சு தறிநடுதலும் ஒன்று என்பதைச் சுட்டிக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

பசுவைப் பாதுகாப்பது தொடர்பில்

எங்கணும் பசுச்சாலை-பசு
எழுந்ததும் எழும்பசிக்குணவிடுக-இனி
எங்கணும் புல் வெளிகள்-தன்
னிச்சையில் மேய்ந்திட ஆள்விடுக-மனம்
பொங்கிடும் இசைப்பாட்டில்-பசு
பூரிக்க இடையிடை புரிந்திடுவீர்-உல
கெங்கணும் பசுக்குளங்கள்-அதன்
இன்னுடல் அழுக்கறத் தேய்த்திடுவீர்

என அறிவுறுத்துகிறார். கண்ணன் குழலூதி நிரைமேய்த்ததை மனங்கொண்டு இசைப்பாட்டில் பசுவைப் பூரிக்கச் செய்யச் சொல்வது நோக்கத்தக்கது.

14.1.2 'பசுவைப் பகையென நினைப்பவர்கள் தருமத்தின் பகையாவார்', 'பசுக் கூட்டம் கொடுமையடையுமெனில் அறக்கடவுள் தீப்பொறியாய்க் கணப்பொழுதில் உலகை அழித்துவிடும்' என்றெல்லாம் எச்சரிப்பதோடு பசுவைக்

கொடுமை யிலாக்கவரும்-பிறர்
கொடும்பசி தனக்கெங்கள் உயிர்தருவோம்-இதை
விடும்படி கெஞ்சிடுவோம்-இதை

வெறுத்திடுங் குலத்தினுக் கறம்புகல்வோம்...
புத்தனென் றொருபெரியான்-முதல்
புலைதவிர் முனிவரின் பலநோன்பு-மிக
மொய்த்தஇந் நாட்டினிலே-கொலை
முதலெழுத் துரைப்பதும் போக்கிடுவோம்...

என்று பசுவை உணவுக்காகக் கொல்பவர்களுக்குத் தங்கள் உயிரையும் தந்து தடுத்து நிறுத்துவோம் என்கிறார். 'பசுத் தெய்வம்' என்னும் இவ்வொரு பாடலிலேயே பசுவைப் போற்றுதல், பாதுகாத்தல், கொலை தவிர்த்தல் ஆகிய அனைத்துச்செய்திகளையும் புலப்படுத்திவிடுகிறார் பாரதிதாசன்.

## 15 : பொருளியற் சமன்மை

15.0 காந்தியடிகள் வகுத்தளித்த நிர்மாணத் திட்டங்களில் ஒன்று 'பொருளாதாரச் சமத்துவம்' என்பது. அதுபற்றித் ''தேசத்தின் செல்வத்தில் பெரும் பகுதி சிலரிடத்தில் மட்டும் குவிந்திருக் கிறது. ஆனால் கோடிக் கணக்கான மக்கள் உண்ணவும் உடுக்கவும் வகையில்லாது அவதியுறுகிறார்கள். பொருளாதார சமத்துவம் என்றால் ஒரு புறம் இவ்விதம் குவிந்த செல்வத்தைக் கரைப்பதும், மறுபுறம் மேற்சொன்ன அவதியைப் போக்கி மக்களை உயர்த்துவதுமேயாகும். செல்வருக்கும், உணவற்ற கோடிக்கணக்கான ஏழை மக்களுக்குமிடையே இவ்வித வேற்றுமை இருக்கிறவரையில், அஹிம்சை முறையில் அரசாட்சி நடத்துவது சாத்தியமில்லை என்பது தெளிவு''[118] என்றார் காந்தியடிகள்.

15.1 பாரதிதாசன், பொதுவுடைமைக் கொள்கையைத் திசை யெட்டும்சேர்க்க விரும்பிய காலத்தில் ஓடப்பராயிருக்கும் ஏழையப் பர்க்காக உரத்துக் குரல் கொடுத்ததை உலகறியும். பேராயக் கட்சிக்காரராக இருந்த தொடக்கக் காலத்தில் பாடிய 'தேவியின் திட்டம்' (தே.சே. 6.4.23) என்னும் பாடல் காந்தியடிகள் குறிப்பிடும் பொருளாதாரச் சமத்துவத்தை வலியுறுத்துகிறது.

'தேவியின் இன்னருள் கிடைத்தது', 'ஊழையும் அன்னை மடித்திடுவாள்,' 'ஆரிய நாடு சுகம் பெற இன்னும் அரை க்ஷணம் உள்ளதென்றாள்' என்று தேவியின் அருள், ஆற்றல், கூற்று ஆகியவற்றைக் குறிப்பிட்டு,

போய்த்தொடு வோம்அந்த விண்ணை அமுதத்தைப்
பூமிக்கெலாந் தருவோம்
தாய்கொடுத் தாளிந்தச் சத்தியவேல் என்று
தாரணி ஆண்டிடுவோம்.
ஏழைகள் கையிருப் புள்ளவர் என்னும்
இரட்டையைக் கொன்றிடுவோம்
கூழுக் கொருத்தன் அழும்படி ஆண்டிடும்
கோலை முறித்திடுவோம்

எனப் பொருளியற் சமன்மைக்குப் போர்க்குரல் கொடுக்கிறார் பாரதிதாசன்.

## 16: அகாலியர் போர்த்திறன்

16.0 *சீக்கியர்களின் கடைசிக் குருவாகிய கோவிந்தசிங்(1666-1708) சீக்கிய மக்களைச் சீர்திருத்தும் நோக்கில் புதிய முறைமை களையும் கட்டுப்பாடுகளையும் உருவாக்கினார்.*

''குரு பதவிகளுக்குப் பதிலாக, கல்சா என்னும் பெரியோர்கள் அடங்கிய சபையை நிறுவினார். நூதன முறையில் ஓர் உபநயனச் சட கையும் ஏற்படுத்தினார். இதில் புனிதமாக்கும் கருவியாகக் கத்தி பயன்படுகிறது. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் வளர வேண்டிய குணங்களுக்கு வெளியடையாளங்களாகச் சிலவற்றைச் சீக்கியர்கள் தரிக்க வேண்டும் என்று விதித்தார். இவற்றின் பெயர்கள் 'க' வர்க்கத்தில் தொடங்குவதாலும், இவை ஐந்து ஆனபடியாலும் இவற்றைப் பஞ்ச ககாரங்கள் என்று அழைப்பர். இவை யாவன. 1. கங்கம் (சீப்பு), தூய்மையைக் குறிப்பது. 2. கரம் (கைவளை), நேர்மையைக் குறிப்பது. 3. கச்சம் (அரைச்கச்சம்) புலனடக்கத்தைக் குறிப்பது. 4. கிரிப்பான் (கத்தி), ஆன்ம சக்தியைக் குறிப்பது. 5. கேசம், (நீண்ட மயிர்) தியாகத்தைக் குறிப்பது. இவ்வைந்தையும் அணிகலமாகவுடைய ஒவ்வொரு சீக்கியரும் சிங்கத்தைப் போல அஞ்சா நெஞ்சத்தோடு கடவுளின் ஊழியராக இருக்க வேண்டும் என்று குருகோவிந்தசிங் விதித்தார்.''[119]

'குருகோவிந்தர்' எனும் பாட்டிலும்

…அநீதியும் கொடுமையும் அழித்திடுஞ் சாதி;
மழித்திட லறியா வன்முகச் சாதி;
இரும்பு முத்திரையும் இறுகிய கச்சையும்
கையினில் வாளும் கழன்றிடாச் சாதி….''

எனப் பாரதி பாடுவார்.

16.1. ஆன்ம சக்தியைக் குறிக்கும் புனிதக் கருவியாகக் கருதப்படும் கத்தியை அணிகலமாகக் கொண்டு அகாலியர்கள் வெளியில் நடமாடுவதைப் பற்பலமுறை உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் உள்ள அரசுகள் தடைப்படுத்த முயன்றன. அகாலியர்களின் தொடர்ச்சியான எதிர்ப்புகளால் அம்முயற்சிகள் வெற்றி பெற வில்லை. 1923இல் அப்படியொரு முயற்சியில் ஆங்கிலேய அரசு ஈடுபட்டது. அதை முறியடித்து அகாலியர் வெற்றி கண்டனர். நாட்டின் நான்கு திசைகளிலும் அவர்கள் போர்த்திறன் பரவிப் புதிய எழுச்சியை உருவாக்கியது. இந்நிகழ்ச்சியை 'அகாலி யரின் ஆண்மை' என்னும் பாடல் (தே. சே. 10.7.23) வாயி லாகப் பாராட்டுகிறார் பாரதிதாசன்.

''அகாலியர் கையோடு கிருபான் (ஓர் வித கத்தி) வைத்திருப்பது வழக்கம். சர்க்கார் தங்கள் சட்டத்திற்கு விரோதம் என்று மறுத் தார்கள். அகாலியர் ஸ்வதர்மத்தை விட்டுவிடவில்லை. அவர் கள் சத்யாக்ரஹம் நடத்தி வெற்றியில் ஏறி விட்டார்கள்'' என்னும் குறிப்பை முன்வைத்துப் பாடல் தொடங்குகிறது. அகாலியர் துணிவோடு போர்க்குக் கிளம்பியதை,

எங்கள் சாதித் திருக்கைவ ழக்கமாம்
எங்கள் கத்தி எமக்குயிர் போன்றதாம்
தங்கள் வன்மையைக் காட்டுக ஆளுவோர்
சாதல் நேரினும் கைப்படை விட்டிடோம்
பொங்கிப் பாயும் கடலினைப் போலவே
போய்ச்சி றைப்படல் எங்கட்கு வெல்லமாம்
அங்கிவ் வாறு கிளம்பினார்!''

எனப் படம் பிடித்து, 'நாட்டு மக்களே! அகாலியரின் ஆண்மை யைக் கண்டீர்களா ?' எனக் கேட்கிறார்.

நின்று பாடிக் கிளம்புமாம் கூட்டம்—அந்
நீளக் கத்தியை ஏந்திய கையொடே,
வன்பு கொண்டவர்'வா'சிறைக் கென்பராம்
வாய்மைக் கூட்டமும் தோள்தட்டிச் செல்லுமாம்

என்பு நோக அடிப்பதுண் டாமதை
''ஈச னாரருள்'' என்று நகைப்பராம்!
அன்றொ டன்றித் தினந்தினம் வெற்றியாம்
அகாலி வீரரின் ஆண்மையைக் கண்டிரோ!

என்று கொடுஞ்சிறைக்கும் தடியடிக்கும் அஞ்சாது தொடர்ந்து போராடியதைப் பாராட்டுகிறார்.

'நாட்டில் இந்தநற் றெய்விகப் போர்த்திறன்
நாலு திக்கினும் சென்று கொளுத்துது'

என்பதோடு, இதிலிருந்து நாட்டு மக்கள் பெற வேண்டிய பாடத்தைப் பாடல் இறுதியில்,

வீட்டி லில்லை துயில்வதி லில்லை—யிவ்
வீண் பசப்பினில் இல்லை சுதந்திரம்!
ஆட்ப டாது யதேச்சையி லோடிய
அகாலி வெற்றி அரும்பணி கண்டிரோ

எனச் சுட்டுகிறார். 'வீட்டுக்குள் முடங்கிக் கிடப்பதனாலோ வீண் பசப்புப் பேச்சுகளினாலோ விடுதலை கிடைப்பதில்லை. ஆட்படாமல் ஈடுபாட்டோடு போராடுவதுதான் அதற்கான வழி' என்கிற பாடமே இப்பாடலின் முத்தாய்ப்பான செய்தி.

## 17 : தாயின் மணிக்கொடி

17.0 ஒரு நாட்டின் உருவாக்கத்தில் மதிப்பு மிக்க சின்னமாகக் கருதப் படுவது 'தேசியக் கொடி'. வணங்குதற்குரிய அதனைப் பாதுகாப்பதற்கு நாட்டு மக்கள் இன்னுயிர் ஈவதற்கும் தயங்க மாட்டார்கள். பாவலர்கள் அதனைப் பாடி மகிழ்வர்.

17.0.1 இன்று பட்டொளி வீசிப் பறக்கும் இந்தியத் தேசியக் கொடியின் வரலாறு பேராயக் கட்சியின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. வங்கப் பிரிவினையை யொட்டி வீறுகொண்ட தேசிய இயக்கம் 1906இல் கொடியினைப் பெற்றெடுத்தது. கொடியின் நடுவில் தேவநாகரியில் 'வந்தே மாதரம்' என்றெழுதப்பட்டதோடு, அடிப்பகுதியில் இந்து-முஸ்லீம் இணைப்பைக் காட்டும் வகையில் சூரியனும், பிறை நிலவொடு சேர்ந்த விண்மீனும் இடம் பெற்றிருந்தன. பேராயக் கட்சி வரலாற்றில்

முதன்முதல் கல்கத்தா மாநாட்டில்தான் (1906 திசம்பர்) அக் கொடி ஏற்றப்பட்டது. இப்போது மூவண்ணத்தில் இராட்டையை நடுவில் பெற்றிருக்கும் பேராயக் கட்சிக் கொடி 1931இல் உருவானது. நாடு விடுதலையடைந்தவுடன் கட்சிக் கொடியில மைந்த இராட்டையின் இடத்தில் அசோகர் தூணில் காணப்படும் சக்கரம் இடம் பெற்றுப் புதிய தேசியக் கொடியாக மாற்றம் பெறுகிறது.[120]

17.0.2. கொடிக்கு இழைக்கப்படும் குற்றம் நாட்டுக்கு இழைக்கப் படும் குற்றமாகக் கருதப்படுதல் மரபு. 1923இல் நடந்த நாகபுரிக் கொடிப்போர் விடுதலை இயக்கத்தை வீறு கொளச்செய்தது.1923 மார்ச்சு 11ஆம் நாள் ஜபல்பூருக்கு வரும் காங்கிரசுக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்களுக்கு நகராட்சியின் சார்பில் வரவேற் பளிப்பதென்றும் அப்போது தேசியக் கொடியை நகர்மன்றத்தில் (டவுன்ஹால்) ஏற்றிவைப்பதென்றும் நகராட்சி மன்றத்தினர் முடிவுசெய்தனர்.ஆனால் காவல் துறையினர் அவ்விரண்டு செயல் களையும் செய்யக் கூடாதென்று தடைவிதித்தனர். அதற்கு முந்திய ஆண்டு காங்கிரசின் சட்டமறுப்பியக்கக் குழுவினர் ஜபல்பூர் வந்தபோது நகராட்சி மன்றத்தின் சார்பில் வரவேற் பிதழ் வழங்கப்பட்டதோடு நகர்மன்றத்தில் தேசியக் கொடியும் ஏற்றி வைக்கப்பட்டது. அந்நிகழ்ச்சி பாரளுமன்றத்தில் பெரும் விவாதத்திற்குள்ளாகியது. இனி இத்தகைய நிகழ்ச்சிகள் நடை பெறாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று உதவி இந்திய மந்திரி கூறினார். அதை நடைமுறைப்படுத்தும் வகையில் அடுத்த ஆண்டில் தடை விதிக்கப்பட்டது. ஆனால் ஜபல்பூர் நகரப் பெரும்பான்மை மக்கள் தன்னைக் கண்டு வேண்டிக் கொண்டதற்கிணங்கத் தடை விதித்ததாகக் காவல்துறைத் துணைக்கண் காணிப்பாளர் கூறினார். மார்ச்சு 12இல் ஜபல்பூரில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் சக்கரவர்த்தி இராச கோபாலாச்சாரியார், ''....தங்களுடைய கோரிக்கை நிறைவேறும் வரை ஜனங்கள் சும்மா இருக்கக்கூடாதென்றும், தகுதியான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுச் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க நூற்றுக்கணக்கானவர்கள் முன்வரவேண்டுமென்றும் ......இவ் விஷயம் இந்தியா முழுமையையும் பொறுத்ததாகுமென்றும் உடனே அனைவரும் இவ்விஷயமாய் ஈடுபட வேண்டுமென்றும் காங்கிரஸ் காரிய கமிட்டி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமென் றும் கூறினார்.''[121]

பின்னர் 'சத்தியாக்கிரக வாரம்' மேற்கொள்ளப்பட்டது. அதன் இறுதிநாளாகிய ஏப்பிரல் 13இல் நாகபுரியில் தேசியக்கொடி

ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டதைக் காவல்துறையினர் தடுத்தனர். தொண்டர்களைத் தாக்கியதோடு சிலரைத் தண்டனைக்கு உட்படுத்தினர். பின்னர் தேசியக்கொடியின் மதிப்பைக் காக்க மே முதல்நாளில் நாகபுரியில் 'சத்தியாக்கிரகம்' தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது. அதன்படி சேத் ஜம்னாலால் பஜாஜின் தலைமையில் நாக புரியில் கொடியை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். ஊர்வலம் தடுக்கப்பட்டுத் தொண்டர்கள் சிலர்க்குத் தண்டனை வழங்கப்பட்டது. உள்ளாட்சி நிறுவனங்கள் தம் கட்டடங்கள் மீது தேசியக் கொடியைப்பறக்கவிட்டால் அவற்றிற்கு வழங்கப்படும் மானியம் நிறுத்தப்படு மென்றும் இல்லாவிட்டால் வேறுவிதத் தண்டனை வழங்கப்படு மென்றும் அரசு ஆணையிட்டது. அரசின் அடக்குமுறை அதிகமாக அதிகமாகக் கொடிப்போர் தீவிரமடைந்தது.[122] நாகபுரி நகரைக்களமாகக்கொண்டு நாடு தழுவிய அளவில், நாட்டு மக்கள் பலரும் கலந்து கொள்ளும் வகையில் பேராட்டம் விரிவடைந்தது. தமிழகத்திலிருந்தும் திருப்பாதிரிப்புலியூர் தேவநாகய்யா, வேலூர் உபயதுல்லா தலைமையில் பலர் நாகபுரி சென்று போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைப்பட்டனர். நாடகாசிரியர் தெ. பொ. கிருஷ்ணசாமிப்பாவலர் கொடிப் போராட்டத்தின் பின்புலத்தில் 'தேசியக் கொடி' என்னும் நாடகத்தை நடத்தி விடுதலை வேட்கையை வளர்த்தார். திருப்பூரில் 1932இல் குமரன் சட்ட மறுப்பியக்கத்தில் ஈடுபட்டுக்கொடிகாத்து உயிர் நீத்த நிகழ்ச்சியும் குறிப்பிடத்தக்கது.

17.0.3 கவிமணி தேசிக விநாயகம், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம், பாலபாரதி ச. து. சு. யோகியார் முதலிய பல பாவலர்கள் கொடியைப் போற்றி வணங்கும் பாடல்களைப் புனைந்துள்ளனர். தமிழில் உள்ள கொடிப் பாடல்களுள் பாரதியாரின் 'மாதாவின் துவஜம்' (1909 ஜன்ம பூமி) தொன்மையானது. 'தாயின் மணிக் கொடி'எனப் பின்னர் தலைப்பு மாற்றம் பெற்றுள்ள இப்பாடல், கொடியில் இடம் பெற்றுள்ள இந்திரன் வச்சிரம், இளம் பிறை, 'தாய் மந்திரம்' (வந்தே மாதரம்) ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. முதன்முதல் கல்கத்தாவில் ஏற்றப்பட்ட கொடியில் பிறையும் வந்தேமாதரமும் இடம் பெற்றிருந்தன. 'வச்சிரம்' இடம் பெறவில்லை. ஆனால் பாரதியின் 'குருமணி' யாகிய நிவேதிதா தேவி வடிவமைத்துக் கல்கத்தா காங்கிரசின் கண்காட்சியில் வைக்கப்பட்ட கொடியில் வச்சிரம் இடம் பெற்றிருந்தது. பிறை இடம்பெறவில்லை.[123] கல்கத்தா மாநாட்டில் கலந்துகொண்டவர் பாரதியார். ஆதலால் ஏற்றப்பட்ட கொடியின் சின்னங்களையும்

நிவேதிதா வடிவமைத்த கொடியின் சின்னத்தையும் இணைத்த ஒரு புதுக்கொடியைப் புனைந்துரைக்கிறார் எனலாம்.

17.1 பாரதிதாசனும் 'தாயின் மணிக்கொடி' என்னுந் தலைப்பில் தேசியக் கொடியைப்பற்றி 1935இல் பாடியுள்ளார். 'தாயின் மணிக் கொடி பாரீர்' எனத் தொடங்கும் பாரதியார் பாடல் தொடரிலிருந்து தலைப்பு அமைக்கப்பட்டிருந்தாலும் பாரதி பாடலிலிருந்து ஓரளவு வேறு பட்ட பாடல் இது. கொடியில் இடம் பெற்றுள்ள சின்னம் எதுவும் இப்பாடலில் குறிக்கப்படவில்லை. 'தமிழ் நாட்டுமறவர், சேரன்தன் வீரர், தெலுங்கர், கன்னடர், ஒட்டியர், மராட்டர், ரஜபுத்ரவீரர், பஞ்சநதத்துப் பிறந்தோர், வங்கத்தினோர்' முதலிய பலர் சேர்ந்து நின்று கொடியைக் காப் பதாகப் பாரதியார் பாடுவார். பாரதிதாசனோ மேற்சுட்டிய பல பகுதியினரைக் குறிப்பிட்டு இவர்களைக் கொண்ட சேனை எங்கள் 'பாரத அன்னை' வசம் இருக்கிறது. ஆதலால் ''சந்ததம் வெல் வதும் தாரணி ஆள்வதும் எங்கள் மணித்துவசம்'' எனப் பிறிதொரு வகையில் பாடுகிறார். மணிக்கொடியின் பெருமை, பாரத நாட்டின் சிறப்பு, மறவர்களின் ஆற்றல் முதலியவற்றைப் பேசும் வகையில்,

மன்னிய பாரத நாட்டின் கொடிக்கு
வணக்கம் புரிந்திடுவோம்-நம்
அன்னை மணிக்கொடி வாழிய வேஎன
அணிவ குத்திடுவோம்-நம்
முன்னைப் பெரும்புகழ் எண்ணிடு வோம்; குறி
நோக்கி முன்னேறிடுவோம் — உயர்
குன்றென வேநிமிர்வோம்;நடப் போம் பகைக்
கூட்டத்தைச் சீறிடுவோம்.
வானிம யாசலம் தென்கும ரிக்கிடை
வாய்ந்த பெரும்பூமி-அது
கானவ ரிப்புலி போலும்முப் பத்துமுக்
கோடி மக்கள்பூமி-என்று
நானில மீதினில் எங்கள் மணிக்கொடி
நாளும் பறக்குதங்கே-நம்
மானம் அஃதேஎன எண்ணஎண்ண நெஞ்சில்
வீரம் பிறக்குதிங்கே.
செந்தமிழ் வீரர்கள் வங்கர் தெலுங்கர்கள்
சீக்கியர் ராஜபுத்ரர்-உளம்
முந்தும் துருக்கர்கள் வில்லினர் வேலினர்
வாளினர் மொய்ம்புடையார் - எனும்

பந்தியின் வாய்ந்திடு சேனையெலாம் எங்கள்
பாரத அன்னைவசம் - எனில்
சந்ததம் வெல்வதும் தாரணி ஆள்வதும்
எங்கள் மணித்துவசம்.

மாக்களைத் தந்த பெரும்புவிக் கே நல்ல
மக்களைத் தந்தநிலம்;- அது
பாக்கியம் என்று பணிந்திடும் எங்களின்
பாரத அன்னைநிலம் - எங்கள்
ஆக்கையும் ஆவியும் அன்னவட்கே எனப்
பேரிகை ஆர்த்திடுவோம்-அவள்
தூக்கும் சுதந்திர மாகொடி நாளும்
துலங்கிடக் காத்திடுவோம்

எனும் பாடல் அமைந்துள்ளது.

17.1.1 இந்தப் பாடல் எந்தச் சூழலில் தோன்றியது என்பதைப் பாரதிதாசனொடு நெருங்கிப் பழகிய பெரியவர் எஸ். ஆர். சுப்பிர மணியன் விளக்குவதாவது :

நாங்கள் புதுவையிலிருந்து ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் நடத்திக் கொண்டிருந்த நேரம் (1935). ஒரு நாள் காலை ஏழு மணியிருக்கும்.அப்போது தமிழ்நாடு காங்கிரசின் பொன்விழா (50 ஆம் ஆண்டு) தொடர்பில் செய்தித்தாளில் ஒரு போட்டி பற்றிய அறிவிப்பு வந்தது. 'தேசியக் கொடியைப் பற்றிச் சிறந்த பாட்டு எழுதுகிறவர்களுக்கு 1000 ரூபாய் பரிசு அளிக்கப்படும்' என்று அறிவித்திருந் தார்கள். அந்தப் போட்டியில் கலந்துகொள்ளுமாறு நான் கவிஞரை வேண்டினேன். கவிஞரோ 'போட்டி நடத்துகிறவர்கள் நமக்கு ஒன்றும் பரிசு கொடுக்கமாட்டார்கள். முன்பு ஒரு போட்டியில் பாரதியாருக்கே பரிசு கொடுக்கவில்லை... எவனாவது பார்ப்பானுக்குத் தான் கொடுப்பார்கள்' என்று கூறிக் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். நான் அந்த அளவில் விட்டுவிடாமல் 'போட்டியில் கலந்துகொள்ள வில்லையென்றாலும் கொடியைப்பற்றிப் பாட்டெழுதினால் நம் கவிதா மண்டலத்தில் வெளியிடலாமே' என்றேன். கவிஞர் உடனே எழுதத் தொடங்கி விறுவிறு வென்று எழுதி முடித்தார். அடுத்து வந்த 'ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' இதழில் (வெளியீடு-7) பாடல் வெளியானது.[124]

போட்டி அறிவிப்பின் பின்புலத்தில் புதுப்பாடல் பிறந்ததை அறிகிறோம்.

17.2 ''கொடிக்கு வணக்கஞ் செலுத்திப் பாடிய தேசியப் பாடல்களில் இந்தப் பாட்டுக்கு இணையாக வேறு எந்தப் பாட்டையும் சொல்ல முடியாது'' என்னும் எஸ். ஆர். சுப்பிரமணியன் ''இந்தப் பாட்டு இவ்வளவு சிறப்பாக உருவானதற்கு வேறு ஒரு காரணம் இருக்க லாம். கவிஞருக்குப் பிரெஞ்சு நாட்டின் தேசியப் பாடலான 'வீரர் எழுச்சிப் பாடல் (மர்செயேஸ்)' மீது அளவற்ற ஈடுபாடு உண்டு. பல நேரம் வெளிப்படையாகவே அதன் சிறப்புபற்றிப் பேசியிருக்கிறார். அதைப் போலவே சிறந்த ஒரு பாடல் இயற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர் அடி மனத்தில் இருந்திருக் கலாம். அழகான பாடல் உடனே பிறந்ததற்கு அதுவும் காரண மாகலாம்''[125] என்று பாவேந்தரின் அடி மனத்தையும் வெளிக் கொணர்கிறார். பாவேந்தரின் கொடிப் பாட்டில் அணிவகுப்புக் குரல் மேலோங்கியிருப்பது மேற்கூற்றை உறுதி செய்யும்.

## 18 : மாதர் குரல்

18.0 ''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்கும்'' என்ற பாரதி, ''எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை'' என்று கூறும் 'பெண்கள் விடுதலைக்கும்மி' பாடினார். பாரதிதாசனும் 'வெற்றி நெருக்கம்' எனும் ஒரு கும்மிப்பாட்டு (தே.சே. 22.5.1923) பாடியுள்ளார்.

18.1 ஒரு பெண் பல பெண்களை நோக்கிப் பாடுகிற பாடல் இது. முதலில் 'இந்த நேரத்தில் வாழ்க்கை இனிக்கிறது. ஆதலால் நல்ல பாட்டுரைப்பேன். அதைக் கேட்டுக்கொண்டே கும்மி தட்டிடுவீர்' என்று அப்பெண் அறிவுறுத்துகிறாள். வாழ்க்கை இனிக்கக் காரணமென்ன?

வேட்கை இருக்குதடீ இந்த நேரத்தில்
வெற்றி இருக்குது பார் எதிரே
நாட்டில் விடுதலை என்பதோர் நற்பதம்
நம்மை நெருங்குது மாதர்களே

ஆதலால் இனிமேல்,

மேட்டு நரிகட்கும் மேய்ந்திடும் கூகைக்கும்
மேனி நடுங்கிடப் போவதில்லை

பூட்டிய வண்டி யவிழ்ப்ப தில்லை உயிர்
போகு மட்டும் விடப் போவதில்லை

என்கிறாள். அச்சம் சிறிதுமின்றி, எடுத்த முயற்சியில் உயிர்போகும் வரை பின்னிடாமல் பாடுபடும் உறுதி புலனாகிறது. ஆதலால்,

ஏட்டிலும் வெற்றி எழுத்திலும் வெற்றி எல்
லாமினி வெற்றி யென்றே மகிழ்வீர்

என்னும் தன்னம்பிக்கையோடு பாடி முடிக்கிறார். நாட்டு விடுதலை, மாதர்களுக்கு நற்பதம் நல்குவது என்பதன் மூலம் மண் விடுதலையும் பெண் விடுதலையும் பிணைந்து நிற்பதை உணர்த்துகிறார் பாரதிதாசன். காந்தியடிகள், கட்டுமானத் திட்டங்களில் ஒன்றாகப் பெண்ணுரிமையைச் சேர்த்திருப்பதும் ''இன்றைய சுயராஜ்யப் போராட்டத்தில் ஆண்களோடு பெண்களும் சம அங்கம் வகிப்பதற்கானவற்றைச்செய்ய வேண்டுமென்ற உணர்ச்சி காங்கிரஸ்காரருக்கு இன்னும் ஏற்படவில்லை. இதனால்தான், இந்த நிர்மாணத் திட்டத்தில் பெண்ணுரிமைபற்றிய சேவைகளையும் சேர்த்திருக்கிறேன்" [126] என்று குறிப்பிடுவதும் இவண் நோக்கத்தக்கன.

## 19 : உரிமைத் தாய்தனைப் போ என்று சொல்வதா ?

19.1 பாரதிதாசனை நாட்டுக்கு நல்ல முறையில் அறிமுகப்படுத்திய 'பாரதிதாசன் கவிதைகள்' (முதற்றொகுதி) 1938இல் திருவாட்டி குஞ்சிதம் குருசாமி அவர்களால் வெளியிடப்பட்டது. அத்தொகுதியில் இடம் பெற்றுள்ள 'உன்னை விற்காதே' எனும் பாடல் முதலில் தேசசேவகன் (19.12.1922) இதழிலும் பின்னர் ஸ்ரீசுப்ரமண்யபாரதி கவிதா மண்டலம் இதழிலும் (வெளியீடு-7, 1935) 'சில தருமங்கள்' என்ற தலைப்பில் வெளியானது. அப்பாடல் பாரதிதாசனின் பாரதப் பற்றையும் விடுதலை வேட்கையையும் தெளிவாகக் காட்டுவதாம். அதுபற்றிப் புதுமைப்பித்தன் கூறுவதைப் பார்ப்போம்:

''அவர் (பாரதிதாசன்) ஏதோ சுயமரியாதைக் கொள்கைகளுக்கு அடிமையானவர். அதனால் அவரிடம் தேசபக்திப் பாட்டுக்களை பார்க்க முடியாது. அந்த மட்டில் அவர் மட்டமான கவிஞரென சிலர் சித்தாந்தம் பண்ணுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு 'உன்னை விற்காதே' என்ற பாட்டை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இன்பம் வந்து நெருங்கிடு நேரத்தில்
ஈனர் அஞ்சிக் கிடக்கிற நேரத்தில்
ஒன்றி லாயிரம் தர்க்கம் புரிந்து பின்
உரிமைத் தாய்தனைப் போவென்று சொல்வதால்
என்னை யீன்ற நறுந்தாய் நாட்டினை
எண்ணும் தோறும் உளம்பற்றி வேகுதே
அன்பி ருந்திடின் நாட்டின் சுகத்திலே
ஆயி ரம்கதை ஏன்வளர்க் கின்றனர்?

இப்படிப் பாடுவோரைத் தேசப்பற்று இல்லாதவர் என்று குற்றம் சாட்ட வேண்டும் என்னில், பாரதியார் தொடுத்து வைத்த பாணியில், அவர் கற்பனையை அவலமாக்கி, உயிரற்ற கொடிப் பாட்டு நாட்டுப் பாட்டு என்ற எதிரொலித் தான் கோவில்களைப் பிறர் போல் அவரும் கட்டவில்லை என வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். அதெல்லாம் மறைவாக நமக்குள்ளே பேசிக்கொள்கிற கதைகளாக இருக்க முடியுமே தவிர, மேடை ஏறாது''[127]

19.2 அந்தப் பாடலின் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக்காட்டி உரத்துக் கேட்கிறார் புதுமைப்பித்தன். முழுப் பாடலையும் படித்துப் பார்த்தால் அவர் கூற்று இன்னும் வலுப்பெறும். 'பாரதக்குலம் நெஞ்சிலூறிக் கிடந்த தம் பூமியை நேரில் மற்றவர் ஆண்டிடப் பார்த்திடும் பஞ்சையாக' இருக்கக்கூடாது எனப் பேசும் பாரதிதாசன்,

இன்பம் வேண்டிப் பிறன்வச மாவதை
இந்தத் தேசம் இகழ்ந்திடு மட்டிலும்
துன்ப மன்றிச் சுகம்கிடையா தென்றே
துரைகள் சேர்ந்த சபைக்குமுன் கூறுவேன்
பார தத்திருத் தாயெனும் பேச்சிலே
பச்சை யன்பு பொழிந்திடு கின்றவர்
வீரத் தால்உள மேசெய லாயினோர்
விழியி லாதவர் ஊமைய ராயினும்
கோரித் தாவுமென் உள்ளம் அவர்தம்மை

எனப் பாரத விடுதலைக்குப் பாடுகின்றவரைத் தழுவிக் கொள் கிறார். இன்பம் வேண்டிப் பிறனிடம் அடிமையாவதை இகழ வேண்டும் என்கிற பாரதிதாசன், ஒற்றுமையின்மையால் உரிமைத் தாய்தனை எட்டிப் போகச் செய்யும் நாட்டு மக்களை எண்ணி நெஞ்சம் எரிகின்றார்.

## 20 : தன்மான இயக்கச்சார்பு நிலையிலும்...

20.0 சுயமரியாதை இயக்கம் தொடங்கி ஈராண்டுகளுக்குப் பின்னர், 1928இன் பிற்பகுதி முதல் பாரதிதாசன் அவ்வியக்கக் கொள்கை களைப் பின்பற்றுபவராயும் இயக்க நடவடிக்கைகளில் கலந்து கொள்பவராயும் மாற்றம் பெறுகிறார். குடும்ப அளவில் தீபாவளி முதலிய விழாக்களும் சமயச் சடங்குகளும் கைவிடப் படுகின்றன.[128] பேராயக் கட்சிச் சார்பு நிலையினின்று மாறித் தன்மான இயக்கத்தை வளர்த்தெடுக்கும் பணியில் தன்னை ஈடு படுத்திக்கொள்கிறார்.

20.0.1 ''நம் நாட்டு மக்களிடையே காணப்படும் மத பேதம் ஜாதி பேதம் மூடப் பழக்க வழக்கங்களைக் கவனிக்கும் எந்த அறிவாளிக்கும் 33 கோடி மக்களில் ஒருவன் மற்றொருவனைக் கலக்காதபடி இடையிடையே திரை போட்டிருப்பது புலனாகாமற் போகாது. இந்த நிலையில் இவர்களை ஒன்றுபட்ட மக்கள் அடையத்தகும் பதவிக்கு எப்படி அழைத்துச் செல்ல முடியும் ?

சுதந்தரம் அடைந்தபின் இந்த ஜாதிபேதம் மூடவழக்கங்கள் அனைத்தையும் நீக்கிக் கொள்ளலாம் என்பர் சிலர். சக்கர மில்லாத வண்டியில் ஏறிச் சென்று காரியத்தை முடித்துக் கொண்டு பிறகு சக்கரம் போட்டுக் கொள்ளலாம் என்பது சரி யாகுமா என்பது தான் நமது கேள்வி''[129] என்பதே சுய மரியாதை இயக்கத்தின் கருத்து நிலை. ஆதலால் மக்களிடம் மண்டியிருக்கும் மடமையைப்போக்குவதற்குமுன் மண்ணடிமையை நீக்க வேண்டுமென்னும் பாரதிதாசனின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுகிறது. மடமை ஒழிப்பே மண்ணடிமையைத்தீர்ப்பதற்கான முதற்பணி என மாற்றம் பெறினும், 'ஒன்றுபட்டு ஆங்கிலே யரை எதிர்க்க வேண்டும், பாரத நாடு விடுதலை அடைய வேண் டும்' என்ற அடிப்படையில் ஊன்றி நிற்கிறார் பாரதிதாசன்.

20.0.2. குமுகாயச் சீர்திருத்த இயக்கமாகத் தோன்றிய தன்மான இயக்கம்,

> பிரிட்டிஷ் முதலிய எந்த முதலாளித்தன்மை கொண்ட ஆட்சியிலிருந்தும் இந்தியாவை பூரண விடுதலை அடையச் செய்வது.
>
> சுதேச சமஸ்தானங்கள் என்பவைகளையெல்லாம் மாற்றி இந்தியா முழுவதையும் தொழிலாளிகள், குடியான வர்கள், சரீரவேலைக்காரர்கள் என்பவர்களுடைய நேரடியான ஆட்சிக்கு கொண்டு வருவது

முதலியவற்றைத் தனது கொள்கைகளாக அறிவித்ததும்,[130] இந்திமொழிக் கல்வி கட்டாயமெனப்பட்ட 1937ஆம் ஆண்டு வரையிலும் ஒன்றுபட்ட விடுதலை இந்தியாவையே குறிக்கொண் டிருந்ததும்[131] மனங்கொள்ளத்தக்கன. இந்தப் பின்புலத்தில் 'குடியரசு', 'ஸ்ரீ சுப்ரமண்யபாரதி கவிதா மண்டலம்', 'மணிக் கொடி' முதலிய இதழ்களில் முப்பதுகளில் வெளிவந்த பாரதிதாச னின் பாரதப் பற்றுப் பாடல்கள் நோக்கத்தக்கன.

20.1 'பாரதிதாசன் கவிதைகள் முதற்றொகுதியில் முதற் பாடலாக உள்ள 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' 1930இல் தனி நூலாக வெளிவந்தது. இப்பாடலில் மூடப்பழக்க வழக்கங்கள் நம் நாட்டில் எந்த அளவு வேரூன்றியிருக்கின்றன என்பதைக் கிண்ட லாக விளக்குகின்றார். இங்கிலாந்து நாட்டிலிருந்து ஆங்கி லேயன் ஒருவன் பேசுவதாக அவர் காட்டுவதில் ஒரு பகுதி :

ஓ!என் சகோதரரே ஒன்றுக்கும் அஞ்சாதீர்!
நாவலந் தீவு நமைவிட்டுப் போகாது
வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்
ஆகையால் எல்லோரும் அங்கே தனித்தனிதான்
ஏகமன தாகிஅவர் நம்மை எதிர்ப்பதெங்கே ?....
மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சிசெய்தே
ஓடச்செய் தால்,நமையும் ஓடச்செய்வார் என்பேன்.

இதன் மூலம் மூடப்பழக்க வழக்கங்கள் நமக்குள் வேற்றுமை விளைவிப்பதோடு விடுதலைக்கும் முட்டுக்கட்டையிடுகின்றன என்பதைப் பாவலர் உணர்த்துகிறார். 'தேசிய விடுகவி'யில் அடிமை ஒழிப்பை முன் நிறுத்திய அவர் சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் மடமை ஒழிப்பை முன்வைப்பவராக மாற்றம் பெறு கிறார்.

20.2 புதுவையில் 1932இல் நிகழ்ந்த ஒரு சுயமரியாதைத் திருமணத்தில் மணமக்கட்குப் பாரதிதாசன் அளித்த வாழ்த்திலும் அவரின் பாரதப் பற்றைக் காண்கிறோம். அவ்வாழ்த்து 1932 அக்டோபர் 9ஆம் நாள் 'குடியரசு இதழில்' இடம் பெற்றுள்ளது. சுயமரியாதை இயக்கத்தின் நிலை விளக்கமாகப் பாடலின் பெரும்பகுதி அமைந்துள்ளது. 'உயர்வு தாழ்வற்ற ஒற்றுமை வாய்ந்த இந்தியா'தான் சுயமரியாதை இயக்கத்தின் குறிக் கோள் என்பதுபோல் பாடலின் பெரும்பகுதி நடக்கிறது.

உலகினிற் பழஞ்சீர் இலகிய இந்தியா
விழிமூடிற் றென்னும் பழிமூடா வண்ணம்
மக்களே எழுக வாழ்வினில் உயர்க
என்றுணர் வளிக்க எழுந்ததெம் இயக்கம்....
பாரத நாட்டை வீரர்தம் நாடாய்ப்
புரியுந் தன்மை பூண்ட தென்போம்....
அந்த இயக்கம் அறைவதென் னவெனில்
எல்லோரும் ஓர்குலம் எனப்படல் வேண்டும்
எல்லோரும் இந்தியர் எனப்படல் வேண்டும்....
ஒருவனை எய்த்துமற் றொருவன் உண்ணும்
இருதயந் தன்னில் எரிமூட்ட வேண்டும்
சுதந்திரம் சமத்துவம் சகோதரத் துவமெனும்
இதந்தரும் பதவி எவர்க்கும் வேண்டும்
எழுபது கோடித் தடக்கைகள் இருந்தும்
எழுபது கோடிச் சுடர்விழி இருந்தும்
குளிர்முப் பத்தைந்து கோடிமுகம் பூண்டும்
நீடுமுப் பத்தைந்து கோடிவாய் நிறைந்தும்
பாரத நாடெனும் பழம்பெருந் தேவிதான்
ஒற்றுமை உணரா ஒரே காரணத்தால்
அங்கம் சிதைப்பட் டழிதல் நன்றா ?
என்றுதான் சொல்லிற் றெங்கள் இயக்கம்...

பாரதியாரின் 'எங்கள் தாய்' எனும் பாடலை நினைவுறுத்தும் வகையில் அமைந்த இப்பாடல் வரிகள் 'எல்லாரும் இந்தியர்' எனப்படுதலில் பாரதிதாசனுக்கு இருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றன.

20.3 'கிண்டற்காரன்' என்னும் புனைபெயரில் பாரதிதாசன் வெளியிட்ட படைப்புகள் பகுத்தறிவுச் சிந்தனையும் நகைச்சுவை உணர்வும் மிக்கன. அவற்றுள் ஒன்று :

சுயமரியாதைக்காரனுக்கும் சுயராஜ்யவாதிக்கும் ஓர் உரையாடல் நடக்கிறது.

''காங்கிரஸ் ஒன்றே சுயராஜ்யத்திற்கு ராஜபாட்டை'' என்கிற சுயராஜ்யவாதிக்குச் '' சுயமரியாதை இயக்கம் அந்த ராஜபாட்டையை உண்டாக்கும் முனிஸிபாலிட்டி'' என்கிறான் சுயமரியாதைக்காரன்.[132] இங்கே 'சுயராஜ்யம்' சுயமரியாதைக் காரனுக்கும் உடன்பாடானதே என்பதும் 'சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்' என்பதும் புலனாகின்றன.

# 21 : தீண்டாமை ஒழிப்பு

21.0 ''இந்தியாவில் ஹரிஜனங்கள் ஒதுக்கித் தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப் பார்த்தால், இதற்குச் சமானமாக உலகத்தில் எங்குமே கொடுமை இருந்ததில்லை என்று சொல்லத் தோன்றுகிறது''[133] என்றார் காந்தியடிகள். மேலும் இந்து மதத்தில் ஏற்பட்ட மாசு என்றும் 'சாபம்' என்றும் சொல்லத்தக்க தீண்டாமையை ஒழிக்க வேண்டியது இன்றியமையாப் பணி என்று வலியுறுத்தினார்.

21.1 ''புதுச்சேரி மாநிலத்தின் ஹரிஜன மக்களின் குரலாகவே பாவேந்தர் விளங்கிவந்தார். பெரும்பாலான கிராம ஹரிஜனத் தலைவர்கள் அவரது சீடர்கள்''[134] என்பார் எஸ். ஆர். சுப்பிர மணியன்.

'பிறப்பில் உயர்வு தாழ்வு பேசும் சமூகம் சிறப்படையாது ; சேரிப் பறையர், தீண்டாதார் என்று சொல்லப்படுபவர் நம் உற்றார் ; பொய்ம்மை வருணபேதம் போனால் புனிதத்தன்மை நம்மில் நாம் காண்போம்' என்பதை வலியுறுத்துவது பாரதிதாசனின் 'தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு'. வேதச் சார்பு, ஆரியச் சூழ்ச்சி முதலியவற்றை வன்மையாகச் சாடும் இப்பாடல் 1930இல் வெளியானது. சுயமரியாதை இயக்கஞ் சார்ந்தபின் வெளிவந்த இப்பாடல்,

> இதந்தரும் சமநோக்கம் இல்லா நிலத்தில் நல்ல
> சுதந்தரம் உண்டாகுமோ?...
> அடிமைகொடிய தென்போர் அவர்சோதரர்க் கிழைக்கும்
> மிடிமையை எண்ணார்

என்று எல்லோரும் சமம் என்னும் நிலை எய்தினால் விடுதலை எய்தலாம் என்கிறது.

'பஞ்சமர், பார்ப்பனர் என்பதெல்லாம் பாரத நாட்டுப் பழிச் சின்னத்தின் பேர்' என்னும் பாரதிதாசன்,

> தீண்டாமை என்னுமொரு பேய்—இந்தத்
> தேசத்தினில் மாத்திரமே திரியக் கண்டோம்—எனில்
> ஈண்டுப் பிறநாட்டில் இருப்போர்—செவிக்
> கேறியதும் இச்செயலைக் காறி யுமிழ்வார்

என்று தீண்டாமையின் இழிவைச் சுட்டி,

கோரும் இமயாசலமுதல்—தெற்கில்
கொட்டுபுனல் நற்குமரி மட்டும் இருப்போர்—இவர்
யாருமொரு சாதியெனவும்—இதில்
எள்ளளவும் பேதமெனல் இல்லையெனவும்—நம்
பாரத நற்றேவி தனக்கே—நாம்
படைமக்கள் எனவும் நம்மிடை இக்கணம்—அந்த
ஓருணர்ச்சி தோன்றிய உடன்—அந்த
ஒற்றுமை அன்றோ நமக்கு வெற்றியளிக்கும்

என்று பாரததேவியின் படைமக்கள் வெற்றிபெறும் வழியை 'ஞாய மற்ற மறியல்' (1930) பாடல் வழி விளக்குகிறார்.

21.2 'சமூகத்திருத்தம்' எனும் பாரதிதாசன் பாடல் (ஆத்மசக்தி 1923 அக்டோபர்) கோயிலுக்குள் தாழ்த்தப்பட்டோர் நுழைய முடியாமலிருந்த நிலையை அடிப்படையாகக்கொண்டது. அக்காலத்தில் நடந்த நிகழ்ச்சி யொன்றை இப்பாடல் விளக்கு வதாகத் தோன்றுகிறது. கோயில் சுற்றுமதிற் சுவரின் உட்புறத் தில் சாமி உலாவரும் சேதியை அறிந்து, அதனைக் காணும் ஆவலுடன் வந்த பறையர்கள் தங்கள் உடல் வெளியிலிருக்கத் தலையை மட்டும் கோயிலுக்குள் நுழைத்தனர். இதனைச் சாமிக்கு உடையவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை, ஆதலால் அஞ்சிய பறையர் அருகிலிருந்த மரத்தின் கிளையிலேறிச் சாமியைக் காணமுயன்றனர். சினமுற்ற மேல்சாதியினர் அவர் களை மரத்திலிருந்து கீழே விழும்படிச்செய்து கடுமையாகத் தாக் கினர். இந்த நிகழ்ச்சியைப் பாடலில் விளக்கிவரும் பாரதிதாசன்,

வாழ்ந்து மதியிழந்த மனிதர்களே
மனத்தில் உயர்த்தியென நினைப்பரே !
தாழ்ந்த குலம் தமக்குள் உயர்ந்திடவே
தாவும் கிளையினையும் முறிப்பதுண்டோ ?
தாழ்ந்த குலமென இங்குரைப்பீரேல்
சமூகம் இழிந்ததென்று நானுரைப்பனே

எனப்பாடலை முடிக்கிறார்.

21.3 தாழ்த்தப்பட்டார்க்கு ஆலயங்களுள் நுழைந்து வழிபடும் உரிமை இல்லாதிருந்த இத்தகு நிலையை மாற்றியமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்துக்களாகிய தாழ்த்தப் பட்ட மக்கள் மற்றவர்களைப் போலவே ஆலயத்துள் நுழைந்து வழிபடவும், கோயில், குளங்கள், சத்திரங்கள் முதலியவற்றைப்

பயன்படுத்தவும் உரிமை வேண்டும் என்று தன்மான இயக்கம் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தி வந்தது.[135]

பாரதிதாசன் 'ஆலய உரிமை' (1930) என்னும் பாடலில் தாழ்த்தப்பட்டார்க்கு நுழைவுரிமை மறுக்கப்படுவதை வன்மையாகக் கண்டித்து,

உயர்ந்தவர் கையில் வரத்தினைச் சாமி
ஒளிமறைவில் தரத்தான்—மிகப்
பயந்திழிந் தோர்களைக் கோயில் வரா வண்ணம்
பண்ணினதோ அறியேன்...

தாழ்ந்தவர் வந்திடில் தன்னுயிர் போமெனின்
சாமிக்குச் சத்திலையோ ? — எனில்
வீழ்ந்த குலத்தினை மேற்குல மாக்கிட
மேலும் சமர்த்திலையோ ?

என்று கிண்டல் செய்வதுடன்,

தாழ்த்தப் பட்டார்க்குத் தனிக்கோயில் நன்றெனச்
சாற்றிடும் தேசமக்கள்—அவர்
வாழ்த்தி அழைக்கும் ''சுதந்தரம்'' தன்னை
மறித்திடும் நாசமக்கள்

என்று தீண்டாமையை மேற்கொள்வோர் நாட்டு விடுதலையைத் தடுத்து நிறுத்துவதாகக் குற்றஞ்சாட்டுகிறார். சில தலைவர்களை நோக்கி,

முப்பது கோடியர் பாரதத்தார் இவர்
முற்றும் ஒரே சமுகம்—என
ஒப்புந் தலைவர்கள் கோயிலில் மட்டும்
ஒப்பாவிடில் என்ன சுகம் ?

எனக் கேட்கிறார். மதுரை மீனாட்சியம்மன் கோயிலில், பல முன்முயற்சிகளுக்குப்பின், 1939 ஜூலை8இல் ஏ. வைத்திய நாதய்யர் தலைமையில் ஐந்து தாழ்த்தப்பட்ட தோழர்கள் நுழைந்து வழிபாடு செய்த வரலாற்று நிகழ்ச்சி[136] ஈண்டு மனங் கொளத்தக்கது.

# 22 : 'முசுலீம் சிங்கக்கன்று'

22.0 1937இன் இறுதி, 1938ஆம் ஆண்டின் தொடக்கக் குடியரசு இதழ்களை நோக்கினால் தன்மான இயக்கமும் முசுலீம் லீக்கும் மிக நெருக்கமாக இணைந்து செயல்பட்டமையை அறிய முடிகிறது. 28.11.37இல் ஆம்பூரில் நடைபெற்ற வடவார்க்காடு மாவட்ட இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் 'மாஜிமந்திரி, கான்பகதூர் கலீபுல்லா ஸாஹிப்' தலைமையேற்றதும், ஆம்பூர் முசுலீம் லீக் கிளை, தோழர் ஈ. வெ. ராவுக்கு வரவேற்பளித்ததும், (கு.அ 5.12.37 ப 8-9), பாலக்காட்டை அடுத்த புதுநகரம் முசுலீம் லீக் ஆண்டுவிழாவில் 6.12.37இல் தோழர் ஈ.வெ.ரா. சொற்பொழிவாற்றியதும் (கு.அ 12.12.1937 ப 9,11) மேலும் 2.1.38இல் நிகழ்ந்த ஈரோடு முசுலீம் லீக் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியதும் (கு.அ 9.1.1938 ப 5) முதலிய பல நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கன.

22.0.1 உங்கள் மார்க்கத்தில் மனிதன் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்பதும் மக்களுக்குள் ஜாதிபேதப் பிரிவு இல்லை என்பதும் சமூக காரியங்களில் உள்ள ஒற்றுமையும் மனிதாபிமானமுள்ள எந்த மனிதனும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயமாகும் ..

கல்வியிலும் சமூகத் துறையிலும் பொருளாதாரத்திலும் அரசியலிலும் பிற்படுத்தப்பட்டு தாழ்த்தப்படுத்தப்பட்டு கிடந்த மக்கள் முன்னேற்றமடைய முயற்சிக்கு வழி காட்டியவர்கள் முதல் முதல் முஸ்லீம்களேயாகும்...

ஜஸ்டிஸ் இயக்கத்துக்கு கூட 35 வருஷத்துக்கு முன்னமேயே வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கு வழிகாட்டியவர்கள் முஸ்லீம்களே யாகும். அதாவது முஸ்லீம் லீக்கே யாகும்...

இன்று வகுப்பு நீதியையும் வகுப்புரிமையையும் மக்களுக்கு முதல் முதல் இவ்வளவு ஞாபகப்படுத்திக் கொடுத்தவர்களே மூஸ்லீம்கள் என்கிறேன். அந்த ஒரு காரணத்தாலேயே ஜஸ்டிஸ் கட்சிக்காரரும் சுயமரியாதைக்காரரும் முஸ்லீம்களை ஆதரித்தும் அண்டியும் நின்று தொண்டாற்ற வேண்டுமென்று மக்களுக்கு போதித்து வருகிறேன்...[137]

இந்தியாவைப் போலுள்ள ஒரு நாட்டுக்கு இன்று முக்கிய மாய் வேண்டியது இந்து முஸ்லீம் ஒற்றுமையே யாகும். அது மாத்திரமல்லாமல் இந்தியாவில் உள்ள பல் வேறு ஜாதி வகுப்பாரின் ஒற்றுமையுமாகும். இந்தக் காரியங் களை செய்யாமல் அரசியல், பொருளாதாரம் முதலிய பெரிய விஷயங்களைப்பற்றி பேசுவதோ செய்யமுயற் சிப்பதோ மானங்கெட்டதும் முட்டாள்தனமானதும் அல்லா விட்டால் பித்தலாட்டம் சூழ்ச்சிகரமான சுயநலமானது மாகும் என்பது எனது அபிப்பிராயம்.

எல்லாவற்றையும் விட இந்து முஸ்லீம் ஒற்றுமை இல்லா மல் இந்நாடு ஒரு விரற்கிடை அளவாவது முன்னேற் றமடையாது. இந்து முஸ்லீம் ஒற்றுமை இல்லாமல் இந் நாட்டு மக்களுக்கு ஒரு கடுகளவு சுதந்தரம் கூட ஏற்பட்டு விடாது—இந்து முஸ்லீம் ஒற்றுமை இல்லாமல் இந்நாட்டு மக்களுக்கு விநாடி நேர சாந்தியும் ஏற்பட்டு விடாது" [138]

என்றும் பெரியார் ஈ.வெ.ரா பேசியுள்ளவை மனங்கொள்ளத் தக்கவை.

22.1 பாரதிதாசன் 'முஸ்லீம் இளைஞர்களுக்கு வேண்டுகோள்' எனுந்தலைப்பில் எழுதியுள்ள பாடல் இந்தப் பின்புலத்தில் நோக்கத்தக்கது. 9.1.1938 குடியரசு இதழின் அட்டைமுகப்புப் பாடலாக வெளிவந்துள்ள அப்பாடல் 'சேனாதிபதி'யாகவும் 'சிங்கக் கன்று'ஆகவும் முசுலீம் இளைஞனை முன்னிலைப் படுத்தி,

இன்றிந்த நாட்டினிலே பிறந்தோர்க் கெல்லாம்
எதுவேண்டும்? போராடும் சக்தி வேண்டும்...
சிந்துபொழி யும்தேசம் கேட்ப தெல்லாம்
திறல்பொழியும் வீரனைத்தான்! நாயை யன்று!

என்று நாட்டின் தேவையை நினைவுறுத்தி 'உன் இனத்தை ஒற்றுமைப்படுத்தி, முன்வைத்த காலைப் பின்வைக்காது வெற்றி நோக்கி நடத்து. உன்னுரிமையை விடாதே, உன் மானம் சிந்துமெனில் நீ சாதல் நன்று' என்று அறிவுறுத்துகின்றது. முசுலீம் இளைஞனை நோக்கி உன் உரிமையை விடாதே என அறிவுறுத்தும்போதும்

'இந்தியர்கள் யாரும்' எனும் நோக்க மின்றி,
இம்மியள வேபேதம் கொண்டிட் டாலும்,

அந்தநெடும் பாம்பினத்தின் விஷப்பல் லைப்போய்
அடியோடு பெயர்த்துவிடு ! இரக்கம் வேண்டாம்

என வேறுபாட்டுக்கிடமில்லாமல் 'அனைவரும் இந்தியர்' என்னும் ஒருமையுணர்வைப் பெறவேண்டும், அதற்கெதிரானவற்றை இரக்கமின்றி அடியோடு அழிக்கவேண்டும் என்று குறிப்பிடுதல் அழுத்தமான இந்தியப்பற்றை அறிவிக்கின்றது. [139]

## 23 : மாற்றமும் முடிவும்

23.1 கதரியக்கத்தைத் தூக்கிப்பிடித்த பாரதிதாசன் பின்னர் 'கதரா? தூக்குக்கயிறா ?' (பு. மு. 21.9.1931) முதலிய கட்டுரைகளில் கதரையும் காந்தியடிகளையும் சாடுகிறார். 'தெய்வ மகாமன்று' எனப் பேராயக் கட்சியைப் போற்றியவர்,

ஓநாய்க் கூட்டம் உண்ணும் சேற்றுக்
காட்டுக் குட்டை இந்நாள் காங்கிரசு (கு 1.6.58)

எனக் கடுமையாகத் தாக்குகிறார்.

'தெய்விகத் தாய்நாடு' 'அன்புதரும் பாரதத்தாய்' என்று பலவாறு பாரதத்தைப் பாடி மகிழ்ந்தவர்,

செந்தமிழா உன்நாட்டின் பேரென்ன செப்பென்றால்
இந்தியா என்றே இளிக்கின்றான் என்தாயே !

பைந்தமிழ் நாட்டினையும் பாரதம் என்றுசொல்வான்
எந்தவகை இச்சேய் உருப்படுவான் என்தாயே!
(கு 17.6.58)

எனப் பாரத உணர்வைப் பழிப்பவராகிறார். இந்திய விடுதலைக்குக் குரல் கொடுத்தவர்

நாயும் ஒப்பாத அடிமை வாழ்வை
நாலு கோடித் தமிழரா ஒப்புவர் ? (கு 16.9.58)

என வினவி,

தமிழ்நாட்டை விடுதலை செய்வோம்—கெட்ட
சழக்கர் ஆட்சியை வேரோடு கொய்வோம் (கு 18.6.58)

எனத் தமிழக விடுதலைக்கு முழக்கமிடுகிறார்.

23.2 வாழ்நாளின் இறுதி ஆண்டுகளில் இந்தியப் பெருநாட்டை ஒரே நாடாகக் காண்பதில் நாட்டம் மிக்கவராக மாற்றம் பெறுகிறார்.

23.2.1 கோவை மாவட்ட மடத்துக்குள ஊராட்சி ஒன்றியச் சார்பில் 11.9.1962இல் பாரதியார் நினைவுநாள் பாட்டரங்கம் பாவேந்தர் தலைமையில் நிகழ்ந்தது. ''இந்நாள் பாரதி இன்ப நினைவு நாள்'' எனத் தொடங்கும் தலைமைக் கவிதையில்,

இறந்தநாள் விழா ஏற்றதா பாரதி
பிறந்தநாள் விழா சிறந்ததா என்ற
கேள்வி ஒன்று கிடைத்திருக் கின்றது...
இரண்டு விழாவும் சரிநிகர் என்பேன்.
இறந்தநாள் பிறந்தநாள் என்பன மட்டுமா
பாரதி நாட்டுப் பிரிவினை எதிர்ப்புநாள்
பாரதி இந்தி எதிர்ப்பு நாள், பாரதி
ஆங்கில எதிர்ப்புநாள், பாரதி அறிவு நாள்,
பாரதி தமிழிலக்கிய நாள், பாரதி
பச்சைத் திருநாள் பலவும் பாரதி
விழாவே ஆகும் விடாது நடத்தலாம்...[140]

எனப் பாவேந்தர் தொடர்கிறார். பலவகையாகப் பாரதி விழாக்கள் நடத்தலாம் என்பதில் முதல் வகையாகப் 'பாரதி நாட்டுப் பிரிவினை எதிர்ப்புநாள்' நடத்த அறிவுரை வழங்குவது நோக்கத்தக்கது.

23.2.2 இந்திய எல்லையில் சீனப்படையெடுப்பு நிகழ்ந்தபோது 'அழைப்பு', 'உலகின் அமைதியைக் கெடுக்காதே', 'என் நாட்டில் கைவைத்தாய் சீனா', 'சீனாக்காரன் தொலைந்தான்', 'சீனாவை எதிர்ப்பது தமிழர் கடன்', 'சூயென் லாய் சீனரின் நோய்', 'தேசத்தைக் காத்தல் செய்', 'முனையிலே முகத்து நில்', 'வருக போரே' முதலிய பல பாடல்கள் வாயிலாகச் சீனத்தைக் கடுமையாகத் தாக்கியதோடு பாரத நாட்டின் பெருமையையும் ஒருமையையும் வலியுறுத்திப் பாடினார்.

பாரத வீரம் பழநாள் தொட்டே
வழிவழி வந்த தாகும் இந்நாட்டில்
அதனால் அன்றோ ஐயனா ரிதனார்
மக்கள் மாநிலம் தோன்றிய போதே

வாளோடு தோன்றினான் மாபா ரதத்தான்
'என்று கூறினார். இதனைக் கூறி
இற்றைநாள் ஆயிரத் திருநூறு ஆண்டும்
ஆயின. அன்றியும் அவர்க்கு முன்னர்
பல்லா யிரமாண்டு பழைய ரான
தொல்காப் பியரும் தூய பாரத
போர்த்திறம் பற்றிப் புகன்றார்! மேலும்
பாரதர் மறத்தனம் பற்றியும் பகர்ந்தார்...

வீரர் நாடு வீரம் மறந்ததேன்?
பாரத நாடு போரை மறந்ததேன்?...
கோயிலைக் கட்டுவ தொன்றையே செய்தோம்
தாயிலைக் காப்பதைச் சற்றும் மறந்தோம்
பக்தியை வளர்த்தோம் பாரதம் காக்கும்
கத்தியை ஒடித்தோம்; என்ன கண்டோம்
நாம்அ டைந்தஇந் நன்றிலா நிலையில்
சீனன் எதிர்த்ததில் சிறிதும் வியப்பேது![141]

என்று புறப்பொருள் வெண்பாமாலைக்கும் தொல்காப்பியத்திற்கும் புதுவிளக்கம் தந்து பழைய வீரம் பத்தியினால் செத்ததென்கிறார்.

*சீனாக்காரன் தானே வந்தான் போருக்கு—நம்*
*சிறுத்தைக் கூட்டம் வேறே இங்கே யாருக்கு*
*போனால் கிடைக்கும் போரில்—அந்தச்*
*சீனாக் காரன் ஈரல்*

*சீனனுக்கே இங்கே என்ன வேலை? நம்*
*சிங்கப்படை கிழிக்கட்டும் அவன் தோலை*
*தானே வந்தான் கொழுத்து—தன்*
*தலை இழந்தது கழுத்து![142]*

எனப் பாட்டு வரிகளிலேயே சீனரை வேட்டையாடுகிறார் பாவேந்தர். மேலும் 'நாட்டன்பையும் பாரத வீரரின் எழுச்சியையும் சீன எதிர்ப்பின் இன்றியமையாமையையும் விளக்கும் மிகச் சுவையுடைய ஒரு நகைச்சுவை நாடகம் பாவேந்தரால் 'பாரதப் பாசறை' என்னும் பெயரில் இயற்றப்பட்டு அவரின் 74ஆவது பிறந்த நாள் விழா (29.4.1963) வின்போது சென்னை இராசா அண்ணாமலை மன்றத்தில் நடத்தப்பெற்றது.

'கற்கண்டு' என்ற பெயரில் தனி நூலாக முன்னரே வெளியிடப் பட்ட பாவேந்தரின் நாடகப்பகுதிகளோடு சீன எதிர்ப்பையும் இணைத்து எழுதப்பட்டதே 'பாரதப் பாசறை.'[143]

23.2.3 சீன எதிர்ப்புக்குப் பாரதப் பாசறை அமைத்த பாவேந்தர், பம்பாயில் நிகழ்ந்த அனைந்திந்தியப் பாட்டரங்கொன்றில் கலந்துகொண்டு இந்தியாவை 'நாவலந்தீவு' என நவில்வதே எவ்வினத்தார்க்கும் இனிப்பது என்றும் எல்லோரும் படித்தவர் என்னும் நன்னிலை ஏற்பட வேண்டும் என்றும் மாற்றுச் சட்டைகளாகிய மதங்களால் மக்கள் பிளவுபடாமல் எல்லாரும் இந்நாட்டு மக்கள் என்று உணர வேண்டும் என்றும்

பழம்பெரு நிலத்தில் பலமொழி பலஇனம்
இருப்பதால் இஃதொரு பல்கலைக் கழகம்

என்றும் ஓரினத்துக்குள்ள ஒரு மொழியைப் பலவினத்துள்ளும் பரப்ப முயலாமல்

அவ்வவ் வினத்தின் அவ்வம் மொழிகளைச்
செம்மை செய்து செழுமை யாக்கி
இனத்து மக்கள் எவர்க்கும் பரப்பும்
ஒன்றினால் நாட்டில் ஒற்றுமை ஏற்படும்
என்பதென் எண்ணம்

என்றும் தான் விரும்பும் பல திருத்தங்களைக் குறிப்பிட்டார். தன் அத்தானிடம் கேள்வி கேட்கும் பெண்ணுக்கு விளக்கமளிக்கும் வகையில் அமைந்த அந்தப் பாடலின் இறுதியில்,

நானிங்கு நவின்ற திருத்தம் வைத்துப்
பாரடி நாவலந் தீவின் பரப்பை நீ
பிரிந்த பகுதி பிணைந்தது பாரடி
பிரிய நினைத்தவர் பிழை உணர் கின்றனர்
பெருநி லத்தில் ஒரேகொடி பறந்தது!
நாவலந் தீவினர் எல்லாரும் நல்லவர்
எல்லாரும் வீரர் எல்லாரும் கவிஞர்
இமையச் சாரலில் ஒருவன் இருமினான்
குமரி வாழ்வான் மருந்துகொண் டோடினான்
ஒருவர்க்கு வந்தது அனைவர்க்கும் என்ற

மனப்பாங்கு வளர்ந்தது வேண்டிய மட்டும்!
இமயம் மீட்கப் பட்ட திதோபார்
சீனன் செந்நீர் கண்ணீ ராக
எங்கோ ஓட்டம் பிடிக்கின் றானடி![144]

என்று பிரிய நினைத்தவர் பிழையுணர்ந்து ஒன்றுபட்ட நாவலந் தீவு சீனரை ஓட்டியதாகக் கற்பனைச் சிறகை விரிக்கிறார் பாவேந்தர்.

23.3 பிரிவினையை விரும்பாமையோடு, ஒன்றுபட்ட நாவலந் தீவைப் பாவேந்தர் வரவேற்கிறார் என்பது உறுதியாகிறது. கூர்ந்து நோக்க வேண்டிய இறுதிக்கால மாற்றம் இது. தமிழ், தமிழர் நலன்களுக்கு எதிரானவற்றை இறுதி மூச்சுவரையில் எதிர்த்துப் போராடிய பாவேந்தர், கடைசி ஆண்டுகளில், குறிப்பாக 1962இல் மேற்குறித்த மாற்றம் பெறுவதைக் காண முடிகிறது. சீனப் படையெடுப்பு இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பட்ட கருத்து நிலைகொண்ட அமைப்புகளையும் ஆட்களையும் 'இந்தியப் பாதுகாப்பு, சீன எதிர்ப்பு' என்னும் ஓரணிக்குக் கொண்டு வந்தது. இமயம்முதல் குமரிவரையுள்ள எல்லோரும் இந்திய மக்கள் என்னும் ஒருமைப்பாட்டுக் குரல் மேலோங்கி ஒலித்தது. பாரதிதாசன் கருத்து மாற்றத்திற்குச் சீனப்படையெடுப்பு முதன்மைக் காரணமாகலாம். 1962இன் தொடக்கத்தில் தமிழகத்தில் நடந்த பொதுத் தேர்தலில் குடியேற்றம், விழுப்புரம் ஆகிய இடங்களில் பேராயக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்துப் பேசினார் பாவேந்தர்.[145] எனினும் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் போக்கு அவர்க்கு வருத்தமளிப்பதாகவும் அவற்றில் நம்பிக்கையிழக்கச் செய்வதாகவும் அமைந்தது. ''கலகக்கட்சிகள்'' ''கட்சிகள் மதங்கள் சாதிகள் என்னும் முட்கள்'' (கு.தி.இ 15.4.62 ப 3) என அவற்றைக் குறிப்பதோடு 'இருப்பவரையும் இல்லாதவரையும் ஒட்டச் சுரண்டிக் காசடிப்பதற்காகக் கட்சிகள் இருப்பதாக'க் குறிப்பிட்டு,

இந்நாள் இருக்கும் கட்சிகள் தாமும்
கட்சியின் தலைவர் என்று கழறும்
ஆட்கள் தாமும் அறங்கொல் பவரே!
தமிழ கத்தின் தலைவர் என்பவர்
தமிழைச் சாக டிக்கப் பின்னிடார்
தமிழ்தொலைப் பார்க்கே தாளம் போடுவர்!
பொழுது விடிந்து பொழுது போனால்
காசு பறிப்பதே கடனாக் கொள்வர்[146]

என்று கட்சித் தலைவர்களின் போக்கையும் சாடுகிறார். ''நான் எந்தக் கட்சியினையும் சார்ந்தவனல்லன் என்று அவர் தம்முடைய இறுதிக் காலத்திலேயே தெரிவித்திருந்தார்.''[147] என்று பாவேந்தர் பற்றி மயிலை. சிவமுத்து குறிப்பிடுகிறார். இவற்றிலிருந்து தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் பால் அவர்க்கு ஏற்பட்ட நம்பிக்கையிழப்பு புலனாகிறது. இக்காலக் கட்டத்தில் 'பாரதி பிரிவினை எதிர்ப்பு நாள்' கொண்டாடச் சொன்னதையும், பாரதி வரலாற்றுத் திரைப்பட வடிவை எழுதி முடித்ததையும் பாரதியின் பால் பாவேந்தர் கொண்டிருந்த இணையற்ற ஈடுபாடு மேலெழுந்ததன் விளைவு எனக் கருதலாம். ஆக, பாரதி நினைவு மேலோங்கியமை, தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளில் நம்பிக்கையிழப்பு, இவற்றிற்கு மேலாகச் சீனப்படையெடுப்பு முதலியவற்றின் பின்புலத்தில் பாவேந்தரின் 'ஒரே இந்தியா' உணர்வு நோக்கத்தக்கது எனலாம்.

## 24 : தொகுப்பும் முடிப்பும்

24.1 தன்னை 'ஓர் இந்தியன் என்று அகம்பாவத்தோடு' எண்ணத் தொடங்கிய பாரதிதாசன், பேராயக் கட்சியில் இணைந்து, பாரத நாட்டைப் பலவாறு போற்றி, விடுதலையின் மேன்மையை வெளிப்படுத்தி, தெய்வங்களிடம் விடுதலைக்குக்குரல் கொடுத்து, தலைவர்களின் தொண்டைப் புகழ்ந்து, புலனாய்வுத் துறையினரிடமிருந்து விடுதலை மறவர்களைப் பாதுகாத்து, ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு, கதரியக்கம் மதுவிலக்கு முதலியவற்றைப்பாடி, பண்பாட்டுச் சீர் குலைவுகளைக் கண்டித்து, தாயின் மணிக்கொடியை வணங்கி, தன்மான இயக்கஞ் சார்ந்த நிலையிலும் நாட்டு விடுதலைபால் நாட்டம் குறையாமல் காந்தியடிகளின் கட்டுமானத்திட்டங்கள் பலவற்றை வலியுறுத்திப் பாரத விடுதலைக்குப் பலவகையானும் பாடுபட்டவர் என்பதைக் கண்டோம்.

24.2.1 'பாரதிதாசன்' என்னும் புனைபெயரைப் பயன்படுத்திக் கனகசுப்புரத்தினம் எழுதிய விடுதலை இயக்கப் பாடல்கள் பலவும் பாரதியாரின் மறைவுக்குப் பின்னரே, குறிப்பாக 1922ஆம் ஆண்டு தொடங்கியே வெளிவந்துள்ளன. பாரதியாரின் மறைவால் ஏற்பட்ட இடைவெளியும், ஒத்துழையாமை இயக்கம் கதரியக்கம் முதலியவற்றின் வீச்சும் தாக்கமும் பாரதிதாசனை இப்பாடல்கள் எழுதத் தூண்டியிருக்கலாம். பாடுபொருள்,

மொழிநடை, கற்பனை முதலியவற்றில் பாரதியின் செல்வாக்கை இப்பாடல்களில் காண முடிகிறது. ''சுப்ரமணிய பாரதியார் இறந்த பின்னர்தான் பாரதிதாஸன் அவர் மாதிரியைப் பின் பற்றிப் பத்திரிகைகட்குப் பாட்டுக்கள் எழுதலானார். இவரது பாட்டுக்கள் நமது பாரதியாரின் பாட்டைப் போலவே இருக்கும்[148] என்னும் குறிப்பும் நோக்கத்தக்கது,

24.2.2 பாரதியைக் காண்பதற்கு முன்னரே இசைப்பாடல்கள் இயற்றவும் பாடவும் தெரிந்த பாரதிதாசன் எழுதிய விடுதலை இயக்கப் பாடல்கள் பலவும் இசைப்பாடல்களாகவே உள்ளன. சில வண்ணப் பாடல்களுக்கு

*நாதந்தி னாதந்தி*
*நாதந்தி னாதந்தி*
*நாதந்தி னாதந்தி - தந்தி னாதந்தி*
*நாதந்தி னாதந்தினா*

*தானன தத்தத் தானன தானன*
*தானன தத்தத் தானன தானன தனதான*

*தந்தத் தனதன தனதன தனதன*
*தந்தத் தனதன தனதன தனதன*
*தந்தத் தனதன தனதன தனதன தனதான*

எனச் சந்தக் குழிப்புகளைத் தந்துள்ளார். 'காவடிச் சிந்து', 'நொண்டிச் சிந்து', 'கும்மி மெட்டு', 'ஆநந்தக் களிப்பு' எனுங் குறிப்புகளுடைய பல சிந்துப் பாடல்களும்; 'இராகம் சஹானா ஆதி தாளம்', 'நோட்டு, தாளம் ஒற்றை', 'போனால் வருமோ வாலிபம் என்ற மெட்டு', 'பராபரக்கண்ணி போற் பாடுக' எனும் குறிப்புகளுடைய இசைப்பாடல்களும்; 'பல்லவி - அனுபல்லவி - சரணங்கள்' எனும் உறுப்புகளுடைய கீர்த்தனையும் விடுதலை இயக்கப் பாடல்களில் அடங்கியுள்ளன. ''இதுபோன்ற பாட்டுக்கள் பிள்ளைகளுக்குப் பாடமாய் விட்டால் தாமாகவே ஒரு ராகத்தையேற்படுத்திக் கொள்வார்கள்'' (சிட்டுக் குருவி) என்றும், குணங்குடி மஸ்தானின் பாடலொன்றின் முதலடியைச் சுட்டி அந்தப் பாடலின் மெட்டில் தன் பாடலைப் பாடித் ''தொண்டர்கள் மற்றும் பாரதப் புத்திரர்களைத் தொண்டர் படையிற் சேரக் கேட்க வேண்டும்'' என்றும் அவர் தந்துள்ள குறிப்புகள், பாடல்கள் பலவும் மக்களிடம் சென்று சேரவேண்டும், பாடல்களை எளிதில் புரிந்துகொண்டு விடுதலை இயக்கத்தில் அனைவரும் இணைய வேண்டும் என்று பாரதிதாசன் கருதியதைப் புலப்படுத்துகின்றன.

24.2.3 தன்மான இயக்கத்தோடு தொடர்புகொண்ட பின்னரும் பாரத விடுதலைப் பற்றாளராகப் பாரதிதாசன் இருந்திருக்கிறார். ஆனால் அடிமை நிலையை அகற்றுவதே அடிப்படை முதற்பணி என்ற நிலைமாறி மடமையை ஒழித்தலே அடிமைநிலையை அகற்றவும் அடிப்படை என்பவராக மாற்றம் பெறுகிறார். தன் மான இயக்கம், இந்தியாவை முழு விடுதலை அடையச் செய் வதைத் தனது குறிக்கோள்களில் ஒன்றாகக் குறிப்பிட்ட போதிலும் தன் பணிகளில் அரசியல் விடுதலைக்கு அழுத்தம் தராது சாதி சமய மூடநம்பிக்கைகளின் பேரால் மக்களை மடமையில் ஆழ்த்தியிருப்பதையே வன்மையாக எதிர்த்துப் போராடியது. ஆதலால் பாரதிதாசன், தன்மான இயக்கச் சார்பிதழ்களான புதுவை முரசு (1930-1932), குடியரசு (1929-1940) முதலிய இதழ்களில் மடமை ஒழிப்பு மேலோங்கவும், ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் (1935), மணிக்கொடி (1933-1935) முதலிய இதழ்களில் அடிமை ஒழிப்புக் குரல் ஒலிக்கவும் எழுதி வந்தார் என்பது மனங்கொள்ளத்தக்கது.

24.2.4 பிற்காலத்தில் தமிழ்நாட்டின் விடுதலைக்காகப் பாரதி தாசன் பாடியுள்ள பல பாடல்களில் காணப்படும் சொற்செறிவு, உணர்ச்சிப் பெருக்கு, ஓட்டநடை முதலியவற்றை இப்பாடல்களில் பெரும்பாலும் காண முடியவில்லை. இதற்குக் காரணம் இவை பாரதிதாசனின் வளர்ச்சி வரலாற்றுத் தொடக்ககாலத்தில் எழுதப்பட்டவை என்பதே. என்றாலும் 'மகாசபை' (காங்கிரசு) என்பதை 'மகா மன்றம்' என்றும் ''செந்தமிழிற் பெயரிட்டறி யாக் கொடு தேயிலை காப்பியை'' என்றும் குறிப்பிடும் போதும் ஆங்கில மோகத்தைச் சாடித் தமிழின் சிறப்பைக் குறிப்பிடும் போதும் அவர்க்குரிய நற்றமிழ்ப் பற்றின் தடயங்களைக் காண முடிகிறது.[149]

24.3. 'சிறுவர் சிறுமியர் தேசீய கீதம்' என்னும் நூலில் அடங்கிய 'தேசிய விளையாட்டுப் பாட்டுகள்'; 'தொண்டர் படைப் பாட்டு' நூலில் அடங்கிய 'வீரன் தோள், வீரத் தமிழர், மிதவாதியை எழுப்பல்' முதலிய பலதுறைப் பாடல்கள்; வ ரா அவர்களின் 'சுதந்திரன்' இதழுக்கு எழுதிய பாடல்கள்; 'கற்பகம்', 'தாய்நாடு முதலிய இதழ்களில் எழுதியவை; 'மேயோ ஒரு பன்றி' என்னும் நூல் முதலிய பாரதிதாசனின் பல படைப்புகள் இன்னும் கிடைக்க வில்லை. அவை கிடைப்பின் இந்நூல் இன்னும் விரிவடைய வாய்ப்புண்டு.

## சான்றெண் விளக்கம்

1. விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, ப 62, ம. பொ. சிவஞானம், 1970, சென்னை.

2. ஷை, ப 91 - 92.

3. பாரதியாரின் பாதையிலே, ப 41, ம. பொ. சிவஞானம், 1979, சென்னை.

4. ஷை, ப 44.

5. தமிழ் இலக்கியங்கள் கூறும் வர்க்க சமுதாயம், ப 83, கே. முத்தையா, 1989, சென்னை.

6. சித்திரபாரதி, ப 42, ரா. அ. பத்மநாபன், 1982, சென்னை.

7. ஹிந்துஸ்தான், பாரதிமலர், 10.9.1939, சென்னை.

இக்குறிப்பில் பாரதியாரோடு வ.உ.சி. சேர்ந்து பாடிய 'சுதேச கீதங்கள்' வெளியிடப் பட்டதாக வரும் செய்தி புதுமை யானது. இதுவரை இப்படியொரு நூல் இருப்பதாகத் தெரிய வில்லை.

8. ஷை.

9. பாவேந்தர் நினைவுகள், ப 89-90, முருகுசுந்தரம், 1979, சிவ கங்கை.

* பாரதியாரோடு பத்தாண்டுகள், பாவேந்தர் சொற் பொழிவு, பாரதிதாசன் குயில் (தி.இ), ப 22, 10.6.1967, புதுவை.

பாரதியாரோடு தொடர்பேற்படுவதற்கு முன்னர் என்னு டைய நிலைமையை நீங்கள் அறிய ஆசைப்படுவீர்கள். யான் ஒரு தமிழாசிரியன். மேலும், அக்காலங்களில் பலவகை யான இசைப் பாக்களைப் பக்தி நெறியில் பாடிக் கொண் டிருந்தவன். அக்காலத்து யான் பாடிய பாக்கள் எங்கள் ஊர்ப் புறங்களிலும், சென்னை முதலான இடங்களிலுமுள்ள அன்பர்களால் விரும்பி, பொருள் கொடுத்து ஏற்றுப் பாடப் பெற்றன."

10. ஹிந்துஸ்தான், பாரதி மலர், 1939.

11. கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப 39, மன்னர் மன்னன், 1985, விழுப்புரம்.

* இதே நூலின் 31ஆம் பக்கத்தில் 26.7.1909இல் ஆசிரியப் பொறுப்பேற்றதாக ஒரு குறிப்பு காணப்படுகிறது. நூலாசிரியரை 2.12.1990இல் புதுவையில் நேரில் கண்டு உசாவிய போது 16.7.1909 சரியான நாள் என உறுதி செய்தார்.

12. ஹிந்துஸ்தான், பாரதி மலர், 1939.
13. பத்திரிகையாளர் பாரதியார், ப 181, பெ.சு.மணி, 1989, சென்னை.
14. பாரதிதாசன் இதழ்ப்பணிகள், ப 414, டாக்டர் மா. அண்ணாதுரை, 1990, ஈரோடு.
15. ஆசிரியர்வாழ்க்கைக் குறிப்பு, பாரதிதாசன் கவிதைகள், ப 5-6, 1938, கடலூர்.
16. பாவேந்தர் நினைவுகள், ப 86.
17. மார்கழியின் உச்சியில் (க), கவிஞர் சுரதா, அரும்புகள் மொட்டுகள் மலர்கள் (நூ), ப 19, கவிஞர் முருகுசுந்தரம் (தொ.ஆ), 1980, சிவகங்கை.
18. சித்திர பாரதி, ப 173.
19. பாரதிதாசன் குயில் (தி.இ), ப 22, 10.6.1967.
20. வேணுகோபாலரின் திருமண நாள் தெரியவரின் அறிமுக நாளைத் தெளிவாகக் குறிப்பிட இயலும். அதனை அறிய இயலவில்லை. பாரதிதாசனே தோராயமாகக் காலத்தைக் குறிப்பிடுவதால் 1910இன் இறுதியில் அறிமுகம் நிகழ்ந்திருக்கலாமோ எனவும் கருத முடிகிறது.
21. 'காங்கிரஸ் முறைமைகளின் சீர்திருத்தம்' (க), இந்தியா (கி.இ) 14-7-1906.

    ம.அ: பாரதிதரிசனம், முதல்பாகம், ப 14, இளசை மணியன் (ப.ஆ), 1975, சென்னை.
22. தேச சேவகன் இதழ்கள் (கி. இ) பல, புதுவையிலுள்ள அருங்காட்சியக வரலாற்றுக் கழகப் பகுதியில் உள்ளன. 'ஆத்மசக்தி' இதழ்த்தொகுப்பு (தி. இ) பாவேந்தர் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் - ஆய்வு மையப் பகுதியில் உள்ளது. அவ்விதழ்களில் வெளிவந்த பாரதிதாசன் பாடல்கள் பலவும்,

    1935இல் பாரதிதாசனை ஆசிரியராகக்கொண்டு புதுவையிலிருந்து வெளிவந்த கவிதை இதழாகிய 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்'

* 1980களில் எஸ்.ஆர். சுப்பிரமணியன் அவர்களை நிர்வாக ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த கவிதைத் திங்கள் இதழாகிய 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்'
* 1985இல் வெளியான 'கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்' என்னும் மன்னர்மன்னன் அவர்களின் நூல்

முதலியவற்றில் மீண்டும் அச்சேறியுள்ளன.

23. பாரதி தமிழ், நூற்பகுதி ப 12, பெ. தூரன் (தொகுத்துப்பதிப் பித்தது), 1953, சென்னை.
24. 'கண்ணன் - என் தந்தை' - கண்ணன் பாட்டு, பாரதியார்.
    * மகாகவி பாரதியாரின் மும்மணிகள், ப 38 - 40, டி.வி.எஸ். மணி, சீனி. விசுவநாதன் (தொ.ஆ), 1979, சென்னை.
25. ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் (தி. க. இ), ப 2, 1983 ஜூன், திருமண வாழ்த்துப் பாடல்.
26. வாழ்த்துப் பகுதி', புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனார், கவிஞரும் காதலும் (நூ), புலவர் ந. இராமநாதன், 1960, தஞ்சை.
27. மயிலம் சுப்பிரமணியர் துதியமுது, பாரத நாட்டின் விடுதலை வேண்டல், கனக சுப்புரத்தின முதலியார், 1926, புதுவை.
28. 'வளர்ந்ததிங்கொருதீ', மணிக்கொடி, ப 6, 5.10.1933, சென்னை.
29. எத்தையும் தாயும், ப 29-30, தங்கம்மாள் பாரதி, 1978, சென்னை.
30. சக்தி (தி. இ), சித்திரபானு—கார்த்திகை (1942), ப 154, சென்னை.
31. பாவேந்தர் நினைவுகள், ப 87.
32. பாரதிதாசன், பெரியார் ஈ. வெ. ரா, திரு. வி. க, காமராசர், ஜீவானந்தம் முதலிய தலைவர்களையும் போற்றியுள்ளார். எனினும், இந்திய விடுதலை இயக்கத்திற்கு அவர்கள் பாடுபட்டதை விதந்து பேசவில்லை. ஆதலால், அவர் களைப் போற்றுவது இவண் குறிப்பிடப்படவில்லை. விடுதலை இயக்கத்திற்குப் பாடுபட்டவர்கள் என்ற நோக்கில் அவரால் போற்றப்படும் சில தலைவர்கள் வேறு நோக்கில் அவரின்

தாக்குதலுக்கும் உள்ளாகின்றனர். ஈண்டு, போற்றுவதே கருத்தில் கொள்ளப்பட்டு விளக்கமளிக்கப்படுகிறது.

33. கதர் இராட்டினப் பாட்டில் இடம் பெற்றுள்ள 'அன்னைக்கு ஆடை வளர்க', 'காந்தியடிகளும் கதரும்' ஆகிய பாடல்கள் தனித்துச் சுட்டத்தக்கன. 'இழந்த காந்திக்கு இரங்கல்' (கு. 1.2.48), 'காந்தியண்ணல்' (கு. 1.3. 43), அண்ணல் பெயர் வாழ்க' (கு. 1.4.48) என்பன அவர் மறைந்த பின் எழுதியவை.

34. 'நெஞ்சுக்கு நீதி', தேச சேவகன் (கி.இ), 12.6.1923, புதுவை.

35. இந்தியா (கி.இ), ப 2, 18.5.1907.

ம. அ: பாரதியின் கட்டுரைச்செல்வம், ப 34, சீனி விசுவநாதன், 1989, சென்னை.

36. ஸ்ரீ லாலா லஜபதிராய், பிணிக்கிரங்கல், தேச சேவகன் (கி. இ), 10.7,1923.

37. சக்தி (தி. இ), சித்திர பானு-மார்கழி (1942), ப 207.

38. 'முனையிலே முகத்துநில்', பாரதிதாசன் கவிதைகள் நான்காம் தொகுதி, ப 204, 1977, சென்னை.

39. கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப 95-96.

40. ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு, பாரதிதாசன் கவிதைகள், ப 7, 1938.

41. தேசீய கவிராஜசிங்கம் சுப்பிரமணிய பாரதியார், ப 38, எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர், 1962, சென்னை.

42. சக்தி (தி.இ), சித்திரபானு—மார்கழி (1942), ப 208.

43. பாரதி புகழ் பரப்பிய முன்னோடிகள், ப 160, பெ.சு.மணி, 1983, சென்னை.

44. பாரதிதாசன் கவிதைகள், இரண்டாம் பகுதி, ப 39, 1949, புதுச்சேரி.

45. பாரதிதாசன் குயில் (தி.இ), ப 24, 10-8-1967.

46. கொடைத்தமிழன், மணிக்கொடி, 22-7-1934.

47. விடுதலைப் போராட்ட மலர், கலைக்கதிர், ப 77, ஆகஸ்டு, 1957, கோவை.

48. பாரதிதாசன் கவிதைகள் (நான்காம் தொகுதி), ப 205—207.
49. வ.உ.சிதம்பரம்பிள்ளை சரித்திரம், ப 28, பரலி. சு. நெல்லையப்பர், 1944, சென்னை.
50. தேனருவி, ப 97, பாரதிதாசன், 1956, புதுச்சேரி.
51. புகழ் மலர்கள், ப 85—88, பாரதிதாசன், 1978, சென்னை.
52. ஸ்வராஜ்யா (நா.இ), குரோதன ஹூ ஆனி மீ 3தீ, சென்னை. ம.அ: தினமணி கதிர் (கி.இ), 1-4-66, சென்னை.
53. பாரதிதாசன் குயில் (தி.இ), ப 2, 10-7-67.
54. நாவலர் சோமசுந்தர பாரதியின் தமிழ் இலக்கியப்பணி, ப 234-235, டாக்டர் ச. சாம்பசிவனார், 1985, மதுரை,
55. புகழ் மலர்கள், ப 43.
56. மாவீரன் வாஞ்சிநாதன் (க), கார்ல் மார்க்சின் இலக்கிய இதயம் (நூ), ப 74, பெ.சு. மணி, 1986 சென்னை.
57. புதுவையில் தேசபக்தர்கள், ப 46—48, என். நாகசாமி, ஸ்ரீ சுந்தரேச ஐயர், ஸ்ரீஸ்ரீ ஆசாரியார், யதுகிரி அம்மாள், 1966, சென்னை.
58. நாள் மலர்கள், ப 83, பாரதிதாசன், 1978, சென்னை.
59. பாவேந்தர் வாழ்க்கைக் குறிப்புகள், மன்னர்மன்னன், ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது (நூ), ப 10, பாரதிதாசன், 1978, சென்னை.
60. புதுவையில் தேச பக்தர்கள், ப 46.47.
61. மாவீரன் வாஞ்சிநாதன் (க), கார்ல் மார்க்சின் இலக்கிய இதயம் (நூ) ப 74.
62. மடலின் முழு வடிவம் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் (தி.க.இ) (எஸ்.ஆர். சுப்பிரமணியன்), 1982 ஆடி, ஆவணி, புரட்டாசி இதழில் (ப 7—8) வெளியிடப்பட்டுள்ளது.
63. பாவேந்தர் நினைவுகள், ப 87.
64. இந்தியா (கி.இ), ப 5—6, 5-12-1908. ம.அ: பாரதியின் கட்டுரைச் செல்வம், ப 154.
65. இந்தியா (கி.இ), ப 2, 9-1-1909. ம.அ: பாரதியின் கட்டுரைச் செல்வம், ப 154—155.

66. புதுவையில் தேசபக்தர்கள், ப 53—54.

67. ஹிந்துஸ்தான், பாரதி மலர், 10-9-1939.

68. மடலின் முழு வடிவம் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் 1982 ஆடி ஆவணி புரட்டாசி இதழில் (ப 9) வெளியிடப் பட்டுள்ளது.

69. புதுவையில் தேசபக்தர்கள், ப 50.

70. வாழ்த்துப் பகுதி, கவிஞரும் காதலும் (நூ).

71. பாவேந்தர் நினைவுகள், ப 87.

72. சித்திர பாரதி, ப 82.

73. வீரவாஞ்சி, ப 188—190, ரகமி, 1984, சென்னை.

74. புதுச்சேரி கண்காணிப்பு நடவடிக்கை நீதிபதி நாதோ அரசு தலைமை வழக்கறிஞர்க்கு 10-7-1912 ஆம் நாள் எழுதிய மடலிலும், பிரெஞ்சு இந்திய ஆதிக்கப் பகுதிகளின் ஆளுநர் அ. துய்ப்ரா பாரிசிலுள்ள ஆதிக்க நாடுகளின் அமைச்சருக்கு 10-1-1912இலும் பின்னரும் எழுதிய மடல்களிலும் இத் தொடர்பிலான செய்திகளைக் காணலாம். பாரிசு தேசிய நூலக ஆவணக் கருவூலப் பிரிவிலுள்ள அம்மடல்கள் தமிழாக்கப்பட்டு 1982 நவம்பர்—டிசம்பர் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

75. புதுவையில் தேச பக்தர்கள், ப 111.

76. அச்சம் அவர் அறியாதது (க), மன்னர்மன்னன், 'அரும்புகள் மொட்டுகள் மலர்கள் (நூ), ப 85—86.

77. பாரதிதாசன் பார்வையில் பாரதி, ப 56, டாக்டர் ச.சு. இளங்கோ, 1982, சிவகங்கை.

78. மாவீரன் வாஞ்சிநாதன் (க), கார்ல் மார்க்சின் இலக்கிய இதயம் (நூ), ப 78.

79. புதுவையில் தேச பக்தர்கள், ப 106—107.

80. புதுவையில் தேச பக்தர்கள், முகவுரை, ப vii.

81. பாவேந்தருடன் (க), சு.ர. சுப்பிரமணியன், ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் (தி.க.இ), ப 21, 1983, புதுவை.

82. இந்நூலாசிரியருடன் நேருரை, 24-11-90, சென்னை.

83. குயிலின் எதிரே மயில் (க), பாவேந்தர் உள்ளம் (நூ), ப. 164—168, மன்னர்மன்னன், 1990, விழுப்புரம்.

84. மதுரை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு, ப 263, ந. சோமயாஜுலு, 1980.

85. இந்நூலாசிரியருடன் எஸ். ஆர். சுப்பிரமணியன் நேருரை, 24-11-90, சென்னை.

86. புதுயுகக் கவிஞர், ப 41, திருலோக சீதாராம், 1981, சென்னை.

87. கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப 98—100.

88. பெல்காமில் 39ஆவது இந்தியத் தேசீய மாநாட்டில் மகாத்மா காந்தி 26-12-1924இல் நிகழ்த்திய சொற்பொழிவில் ஒரு பகுதி நவசக்தி (கி.இ), ப 6, 29-12-1924.

89. நினைவு அலைகள் (தன் வரலாறு), முதல் பாகம், ப 364. நெ.து. சுந்தரவடிவேலு, 1983, சென்னை.

90. நவசக்தி (கி.இ), ப 11—12, 21-11-1924.

91. 21-11-1924 நவசக்தி இதழில் 'தமிழ் மாநாடு' எனுந் தலைப்பிலான ஆசிரியவுரை, ப 6.

92. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கையிலே, ப 10, முல்லை முத்தையா, 1949, சென்னை.

93. ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு, பாரதிதாசன் கவிதைகள், ப 7, 1938.

94. கதர் இராட்டினப் பாட்டு, முகவுரை, காசி ஈ லக்ஷ்மண்ப்ரசாத், 1930, புதுவை.

95. நிர்மாணத் திட்டம், மகாத்மா காந்தி, மு. அருணாசலம் (மொழி பெயர்த்தவர்), காந்தி இலக்கியச் சங்கம், 1986, மதுரை.

96. கதர் இராட்டினப் பாட்டு, முகப்பு அட்டையின் உட்பக்கக் குறிப்புகள், 1930, புதுவை.

97. ஷை

98. ஷை

99. தொண்டரைச் சேர்த்தல், தேச சேவகன் (கி.இ), 7-11-1922.

100. 'தொண்டர் படைப்பாட்டு' நூலில் 'தொண்டரைக் கூட்டுதல்', 'தாய்நாடு' எனுந் தலைப்புகளில் சுட்டப்படும் பாடல்கள் இவையாக இருக்கலாம். தனிப் பாடல்களாக வெளியான போது தரப்பட்ட தலைப்புகள் சில, நூல்வடிவில் தொகுக்கப் பட்ட போதும், இதழ்களில் மறுமுறை வெளியிடப் பட்ட போதும் மாற்றம் பெற்றுள்ளன. காட்டாக, 'சில தர்மங்கள்,' 'உன்னை விற்காதே' எனவும், 'பாரத சமூக மன்றம் (காங்கிரஸ்) சொல்கிறது' என்பது 'பாரத சமூகத்திற்கு' எனவும், 'நிலவும் பிள்ளையும்', 'நிலாப்பாட்டு' எனவும், 'தேசியக் கல்யாணப் பாட்டு', 'தேசியத் திருமண வாழ்த்து' எனவும் திரிந்துள்ளமையைச் சுட்டலாம். 'தெய்வீகத் தாய் நாடு' பாடலைப் பற்றிய சிறு விளக்கம் இந்நூலில் (ப 20) தரப்பட்டுள்ளது.

101. Mahatma Gandhi – A chronology, pp 81-87, compiled by K. P. Goswami, 1971, New Delhi.

102. ஸ்வராஜ்யம், ப 63, கிருஷ்ணஸ்வாமி சர்மா, 1921, சென்னை.

103. இந்த நூல் பற்றிய விளக்கமான செய்திகள், பாரதிதாசனின் கதரியக்க ஈடுபாடு ஆகியன இந்நூலின் 'கதர் இராட்டினப் பாட்டு' எனும் தனிக் கட்டுரையில் தரப்பட்டுள்ளன.

104. மேயோவின் 'இந்தியத்தாய்' நூலையடுத்து விளைந்த படைப் புகள் சில :

- Father India, Ranga Iyer C.S., Nov. 1927.
- Miss Mayo's Mother India A Rejoinder, Natarajan K, Dec 1927.
- A son of Mother India answers, Makerji Dhanagopal, Feb 1928.
- India, His chıracter; Chapman J.A, 1928.
- Unhappy India, Lajpat Rai, 1928
- Mother India Ka Jawab, Lakhanpal (Mrs) C, 1928...

105. பாவேந்தருடன் பயின்ற நாள்கள், ப 142-143, பாவலர்மணி சித்தன், 1990, சென்னை.

106. நிர்மாணத் திட்டம், ப 12.

107. தமிழர் தலைவர், ப 68-69, சாமி சிதம்பரனார், 1975, திருச்சி.

108. நிர்மாணத் திட்டம், ப 29.

109. தேச சேவகனில் 23-11-1923இல் வெளியான பாடல் பகுதி மட்டும் தனியாகத் திரு. மன்னர்மன்னனின், 'கறுப்புக்குயி லின் நெருப்புக் குரல்' நூலிலும் (ப. 131-133), அதன் தொடர்ச்சியாக 6-2-1923இல் வெளியான பாடல் பகுதி மட்டும் திரு. எஸ். ஆர். சுப்பிரமணியன் 'ஸ்ரீ சுப்ரமண்யபாரதி கவிதா மண்டலம் (1982 ஆடி ஆவணி புரட்டாசி) இதழிலும் வெவ்வேறாக மீண்டும் வெளியிடப்பட்டுள்ளன.

110. 'பெல்காம் காங்கிரசு, நவசக்தி (கி. இ), ப 6-7, 26.9.1924.

111. Vedic Mythology, P 151, A. A. Macdonell, Strassburg Velaag Von Karl J. Trubner 1897. Note on the Sacred Cow of the Hindus' (E), The Ocean of story, Vol II, PP 240-242, C. H. Tawney's translation of Somadeva's Kathaa Sarit saahara, Edited by N. M. Penzer, 1968 Delhi.

112. நிர்மாணத் திட்டம், ப 49—51.

113. 19ஆவது திட்டமாக இணைக்கப்பட்டுள்ளது. இது காந்தி யடிகளுக்கும் உடன்பாடானதே. காந்தியடிகள் 16.1,1946ஆம் நாள் ஜீவன்ஜி தேசாய்க்கு எழுதிய மடலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
காண்க: Constructive Programme, its meaning and place, P 31, M. K. Gandhi, Navajivan Publishing House, 1983, Ahemedabad.

114. ஆங்கிலியர் அந்தாதி, வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், புலவர் மு. வலவன், வே. தட்சிணாமூர்த்தி (ப. ஆ), 1985, சென்னை.

115. Cows, Pigs, wars & witches, The riddles of culture, P 16, Mervin Harris, William Collins sons & co Ltd Glasgow 1977, Great Britain.

116. நிர்மாணத் திட்டம், ப 53.

117. முப்பத்திரண்டு அறங்களில் பசுவிற்கு வாயுறை, ஆவுரிஞ்சு தறி ஆகிய இரண்டு அறங்கள், பசு தொடர்பில் இடம் பெற் றுள்ளன.

காண்க: அபிதான சிந்தாமணி, ப 73, ஆ. சிங்காரவேலு முதலியார், 1910, மதுரை.

118. நிர்மாணத் திட்டம், ப 31.

119. சீக்கிய மதம் (க), கலைக் களஞ்சியம் (நூ), ஐந்தாம் தொகுதி, ப 2, 1958, சென்னை.

120. நமது கொடியின் தோற்றமும் வளர்ச்சியும், ஏ. கோபண்ணா, தினமணி (நா. இ), ப 2, 15.8.1987.

121. நவசக்தி (கி.இ), ப 3, 23.3.1923.

122. நவசக்தி (கி.இ), ப 6, 16.3.1923.
டி ப 3, 27.4.1923
டி ப 3, 4.5.1923 முதலிய பல இதழ்களில் கொடிப்போர்ச் செய்திகள் பதிவாகியுள்ளன. தமிழில் விடுதலை இயக்கம் பற்றி வெளியாகியுள்ள நூல்களில் கொடிப் போர் பற்றிய செய்திகள் பிறழ உணரும் வகையில் எழுதப்பட்டுள் ளமையால் ஈண்டு சற்று விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

123. The Vajra as a National Flag (E), The Complete works of sister Nivedita, p 166, 1975, Calcutta.

124. இந்நூலாசிரியருடன் எஸ். ஆர். சுப்பிரமணியன் நேருரை, 24.11.90, சென்னை.

125. டி

- அந்தப் பிரெஞ்சுப் பாடல் 'தூக்குவீர் கத்தியை' என்ற தலைப்பில் சிறு குறிப்போடு தமிழாக்கம் செய்யப்பட்டு ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் வெளியீடு 2இல் வெளிவந்துள்ளது நினைக்கத்தக்கது.

126. நிர்மாணத்திட்டம், ப 25.

127. புரட்சிக் கவிதை (க), புதுமைப்பித்தன், புரட்சிக் கவிஞர் (நூ), ப 56, முல்லை முத்தையா (தொ.ஆ), 1949, திருச்சி.

128. பாவேந்தரும் புதுவைச் சிவமும், சில நினைவுகள், ப. 28, சிவ. இளங்கோ, 1990, புதுச்சேரி.

* கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப 205.

129. ஸ்வராஜ்யம் (க), புதுவை முரசு (கி.இ), ப 10, 24.11.1930.

130. குடியரசு (கி.இ), ப 13, 1.1.1933.

131. 1937இன் இறுதியில்தான் சோமசுந்தர பாரதியாரால் தனித்தமிழ் நாடு கோரிக்கை எழுப்பப்படுகிறது. எனினும்

அது முழு வடிவம் பெற்று, பெரியார் ஈ. வெ. ரா. முதலியோர் களாலும் 1938 பிற்பகுதி முதல் வலியுறுத்தப்படுகிறது. Tamil Renaissance and Dravidian Nationalism, pp 236-238, K. Nambi Aaooran, 1980, Madurai.

132. புதுவை முரசு (கி. இ), ப. 6, 24.8.1931, புதுச்சேரி.

133. நிர்மாணத் திட்டம், ப. 11.

134. பாவேந்தருடன் (க), ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் (தி. க. இ.), ப. 18, டிசம்பர் 1983.

135. திருநெல்வேலி (1927) முதலிய பல இடங்களில் நடந்த மாநாடுகளில் இத்தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. இயக்கக் கொள்கைகளில் ஒன்றாகவும் குறிக்கப் பட்டது. காண்க : குடியரசு, 11.12.1927 : 3.6.1928...

136. தமிழ் நாட்டில் காந்தி, ப. 623, அ. இராமசாமி, 1969, சென்னை.

137. ஆம்பூரில் தோழர் ஈ. வெ. ரா. வீரமுழக்கம், குடி அரசு, ப. 8, 5.12.1937.

138. புது நகரம் முஸ்லீம்லீக் ஆண்டுவிழாக் கொண்டாட்டம், ஈ. வெ. ரா சொற்பொழிவு, குடி அரசு, ப. 5, 9.1.1938,

139. 1930 திசம்பரில் அலகாபாத்தில் நடைபெற்ற முசுலீம் லீக் மாநாட்டிற்குத் தலைமையேற்ற கவிஞர் இக்பால் அவர்களால் முதன்முதல் முசுலீம் நாட்டின் எல்லை வரையறுத்து விளக்கப் பட்ட தெனினும் 1940 மார்ச்சில் இலாகூரில் நிகழ்ந்த முசுலீம் லீக் மாநாட்டிற்குப் பின்னரே தனி நாட்டுக் கோரிக்கை வலுப்பெற்றது.

1941 ஏப்பிரலில் சென்னையில் நடந்த 28ஆவது அனைத்திந் திய முசுலீம் லீக் மாநாட்டில், தனது தலைமையுரையில் திராவிட நாட்டுக் கோரிக்கையை ஆதரித்ததோடு பார்ப்பனரல் லாதார் இயக்கத்திற்கு முழு ஆதரவைத் தருவதாக முகமது அலி ஜின்னா குறிப்பிடுமளவுக்குக் காலவோட்டத்தில் தன்மான இயக்கத்தார்க்கும்முசுலீம் லீக்கினர்க்கும் நெருக்கம் ஏற்பட்டது. காண்க : Tamil Renaissance and Dravidian Nationalism pp 242-246.

140. பாரதிதாசன் குயில் (தி. இ.), ப. 22, 10.8.1967.

141. அழகப்பா தமிழ் மன்றச் சிறப்பு மலர், 1962-63, அழகப்பா கல்லூரிகள் வட்டம், காரைக்குடி.

142. பாரதிதாசன் கவிதைகள்-நான்காம் தொகுதி, ப. 198.

143. பாரதப்பாசறை நாடக விளம்பர அறிக்கையின் ஒளிப்படப்படி, பாரதிதாசன் இதழ்ப்பணிகள் (நூ), ப. 176க்கும் 177க்கும் இடையில்.

144. குயில் (தி. இ. மு.), ப. 10-12, 1.7.62, சென்னை.

145. பாவேந்தர் நினைவுகள், ப. 29.

146. பொங்கல் சிறப்பிதழ், கலை விருந்து (தி.இ.மு.), 14.1.1962, சென்னை.

147. நான் அறிந்த பாரதிதாசன் (க), அரும்புகள் மொட்டுகள் மலர்கள் (நூ) ப. 105.

148. ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு, பாரதிதாசன் கவிதைகள், ப. 7, 1938.

149. காண்க: 'கதர் இராட்டினப்பாட்டு' எனும் கட்டுரையின் 1.7 பகுதி.

*இணைப்பு :*

## 'கதர் இராட்டினப் பாட்டு'

0.1 ஒத்துழையாமை இயக்கக் கருத்துகளை வலியுறுத்திப் பாரதிதாசன் எழுதியதாகக் குறிப்பிடப்படும் இருபது சிறுசிறு நூல்களில் இன்று கிடைக்கும் நூல் 'கதர் இராட்டினப் பாட்டு' மட்டுமே. ஆதலால் அந்நூல் ஆய்வு நோக்கில் தனித்து இக்கட்டுரையில் விரிவாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

0.2 பாரதிதாசன் கதரியக்கத்தோடு தம்மைப் பிணைத்துக் கொண்டு முரட்டுக் கதரை ஆடையாக உடுத்திக் கதர் மூட்டையைத் தோளில் சுமந்து வீடு தோறும் விற்றார்.

> புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை நான் 1922ஆம் ஆண்டில் ஒரு தேசிய இயக்கச் செயல் வீரராகக் கண்டது என் நினைவில் இன்றும் பசுமையாக உள்ளது. காந்திஜி 1922ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டதும் கதர் இயக்கத்தை ஆரம்பித்தார். கதர்ப் பிரச்சார விற்பனை இயக்கம் புதுவையிலும் நடைபெற்றது. அப்போது ஒரு நாள் ஜெகநாதக் கிராமணியும் இன்னும் சிலரும் தங்கள் தோள்களில் துணிகளைச் சுமந்து கொண்டு காந்தி, நேரு வீதிகளில் இருந்து ஒவ்வொரு கடையாகச் சென்றும், தெருவழியாக நடந்து மக்களிடத்திலும் சென்று கதர்த்துணிகளை விற்றனர். அன்னிய நாட்டுப் பொருட்களைப் பகிஷ்கரித்துக் கதராடையை வாங்கி அணிய வேண்டும் என்று பிரச்சாரம் செய்தனர். இதை நேரில் கண்ட நானும் அவர்களுடன் சிறிது தூரம் சென்று வந்தேன்.
>
> பாவேந்தர் பாரதிதாசன் வெகுநாள் வரையில் கதர் வேட்டி, முரட்டுக் கதர் கோட்டு, பூப்போட்ட கதர் மேலாடை இவற்றை அணிந்திருந்ததையும் நான் பார்த்திருக்கிறேன்.[1]'

எனும் புதுவை வ. சுப்பையா அவர்களின் கூற்று நோக்கத் தக்கது. 'தாய்நாடு விடுதலை பெறக் கதர்தான் கதிமோட்சம்' என்று பெரும்பணி செய்வதுடன் நின்றுவிடாமல் தம் கையால் நூற்ற கதர் நூலிலிருந்து கயிறு திரித்துத் தம் தலைமகளுக்கு அரை ஞாண் கட்டியதும், அம்மகளைப் பெற்ற மனைவிக்கு அந்த ஆண்டு தீபாவளிப் பரிசாக முரட்டுக் கதர்ப்புடவையை வழங்கியதும்[2] குறிப்பிடத்தக்கன. மேலும் பாரதிதாசனின் நண்பர் புதுவை ஜெகநாதம் அவர்களின் நாட்குறிப்பில் 13-1-1922இல் உ.பாத்தியாயர் கனக. சுப்புரத்தின முதலியாரிடம் 1-6-0வுக்கு நான்கு முழம் கதர் வேட்டி வாங்கியதாகவும், 15-1-1922இல் சுப்புரத்தின உபாத்தியாயரிடத்தில் மீனாட்சியம்மாளுக்குச் சேலை வாங்கினதில் பாக்கி 2-12-0 [3] எனவும் குறிக்கப்பட்டுள்ள செய்திகள் பாரதிதாசன் கதர் விற்பனையில் முனைப்பாக ஈடுபட்டமையை உறுதி செய்கின்றன.

0.3 'கதர் இராட்டினப் பாட்டு' வெளிவருவதற்கு முன்னரே, இராட்டினத்தைத் 'தேவி மாசக்தி அளித்த தெய்வீகப்படை' யாகப் போற்றும் தனிப்பாடல்கள் சிலவும் பாரதிதாசனால் எழுதப் பட்டுள்ளன. நூலில் இணைக்கப்படாத அப்பாடல்களின் கருத்தைக் காண்போம் :

தேவர்க்கு விடுதலை தந்திடத் தேவி
இந்திரன் தோளுக்கு வச்சிரம் ஈந்தனள்,
பார்த்தனுக் களித்தது பாசுப தாஸ்திரம்,
இராமனின் உரிமையைக் காப்பதற் கெனவே
இராமனின் தோளினில் வில்லொன்றை யிட்டனள்,

கண்ணன் கையில் சக்கரம் அளித்தனள்
கண்ணன் உலகைப் பகைகொன்று காத்தான்
''இதோஉம் விடுதலை'' என்றனள். நாமெலாம்
எங்கென்று கேட்டதில் ராட்டினம் காட்டினாள்[4]

என்று விடுதலையின் சின்னமாக இராட்டினத்தைக் காட்டுகிறார்,

தேசத் திரவியம் பஞ்சிழை யாக்குதல்
தெய்வந் தரும்பொருள் ராட்டினமாம்[5]

எனப் பிறிதொரு பாடலிலும் குறிப்பிடுகிறார். தெய்வந் தந்த பொருளாகிய இராட்டினம் நாட்டு விடுதலையை ஈட்டித் தரு

மென உறுதியாக நம்பினார் பாரதிதாசன். நம்பிக்கையின் நிறைவெளிப்பாடே 'கதர் இராட்டினப் பாட்டு.'

1.0 'கதர் இராட்டினப் பாட்டு' 1930ஆம் ஆண்டில் 'காசி ஈ.லஷ்மண் ப்ரசாத்' என்பவரால் புதுவையில் இருபது பக்க அளவில் ஒன்றே காலணா விலையில் வெளியிடப்பட்டது.[6] எனினும் இந்நூலில் இடம் பெற்றுள்ள பாடல்கள் முன்னரே தனித்தனியாக இதழ்களில் வெளிவந்துள்ளன. நூலின் இறுதியில் இடம் பெற்றுள்ள 'பாரததேவி வாழ்த்து' 6-2-1923ஆம் நாளிட்ட தேசசேவகன் இதழில் அட்டை முகப்பில் வெளிவந்துள்ளது. 'சுதந்தரதேவியும் கதரும்' என்னும் பாடல் 1923 ஜூலை 'ஆத்ம சக்தி' இதழில் வெளிவந்தது. அப்போது இப்பாட்டுக்குரிய இராகம்—நாட்டை தாளம்—ஆதி' என்றிருந்த குறிப்பு, நூலில் 'இராகம்—பியாக் தாளம்—சாப்பு' என மாற்றம் பெற்றிருக்கிறது. ஆக நூல் 1930இல் வெளிவந்ததெனினும் அதிலுள்ள பாடல்கள் பலவும் கதரியக்கந் தொடங்கிய காலத்திலேயே எழுதப்பட்டன என அறிய முடிகிறது. ''என் தாயார் அப்போது கழுத்தில் அணிந் திருந்த பத்து பவுன் நகையை விற்று அந்தப் பணத்தில் தாம் எழுதிய 'கதர் இராட்டினப்பாட்டு' நூலை வெளியிட்டார். நாங் களே அந்நூலைத் தைத்து ஒட்டி விற்பனைக்கு அனுப்பினோம்''[7] என்று பாவேந்தரின் முதன் மகள் சரசுவதி அம்மையார் குறிப் பிடுகிறார். ''கையினால் செய்த அச்சு உருட்டைகளால் படம் சேர்த்து நூல் அழகுற வெளிவந்த சில நாட்களில் பிரஞ்சு ஆட்சியின் காவலர்கள் இவரின் வீட்டில் நுழைந்தனர். நூலின் அச்சுப்படிகளைக் கையோடு எடுத்துச் சென்றனர். அவர்களின் ''அச்சம்'' பறந்துவிட்டது போலும்!

அந்தக் கெட்டிக்காரக் காவலரின் கண்ணில் பொடிதூவி விட்டுச் சிலபடிகள் மறைந்தன. அவை நமக்குக் கிடைத்தன, கால் நூற்றாண்டுக்குப் பிறகு![8] என்னும் குறிப்பு காவல் துறையின் பறிமுதலுக்குப் பின்னும் நம் பார்வைக்கு நூல் கிடைத்தமையைச் சுட்டும்.

1.1 நூல், 'ஓம்' பிள்ளையார் சுழி ('உ') ஆகியவற்றோடு 'வந்தே மாதரம்' எனத் தொடங்கி 'வந்தே மாதரம்' என முடிகிறது. அட்டையின் முகப்பில் இராட்டினத்தின் படமும் காந்தியடிகளின் அரையுருவப்படமும் இடம் பெற்றுள்ளன. நூலினகத்தே கதர் இராட்டினம் பற்றிய ஐந்து பாடல்களும் இரண்டு கருத்துவிளக்கப் படங்களும் உள்ளன. இவற்றொடு நூல்தொடக்கத்தில்

வெளியீட்டாளரின் முகவுரையும் அதையடுத்து, 'பாரததேவி' எனுந்தலைப்பில் ஒரு நேரிசை வெண்பாவும் 'ஜன்ம பூமியின் சிறப்பு' எனுந் தலைப்பில் ஒரு நேரிசை வெண்பாவும் அமைந்துள்ளன. நூலின் முடிவாகப் 'பாரததேவி வாழ்த்து' எனுந் தலைப்பில் பதினான்கு வரி நிலைமண்டில ஆசிரியப்பா இடம் பெற்றுள்ளது.

1.2 கதர், இராட்டினம் பற்றிய ந்து பாடல்கள், முறையே 'காந்தியடிகளும் கதரும்', 'சுதந்தர தேவியும் கதரும்', 'தேசத்தாரின் பிரதான வேலை', 'இராட்டினச் சிறப்பு', 'அன்னைக்கு ஆடை வளர்க' எனுந்தலைப்பின். ஐந்து பாடல்களுக்கும் முறையே 'வீரம்', 'சிங்காரம்', 'சாந்தம்', 'சிங்காரம்', 'சோகம்' எனச் சுவைகள் சுட்டப்பட்டுள்ளன. முதல் நான்கும் இசைப் பாடல்கள். அவற்றுக்குப் பண்ணொடு தாளம் அல்லது மெட்டுகள் குறிக்கப்பட்டுள்ளன. முதல் பாட்டுக்குரிய 'ஹார் மோனியஸ்வரம்' அலகிடப்பட்டு 'சாப்பு' எனுந் தாளக்குறிப் போடு நூலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பாட்டுக்குரிய 'இராகம்-பியாக், தாளம்-சாப்பு' மூன்றாம் பாட்டுக்கும் நான்காம் பாட்டுக்கும் முறையே 'கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு' என்ற குறத்திப்பாட்டின் மெட்டும் 'தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே' என்ற மெட்டும் குறிக் கப்பட்டுள்ளன. ஐந்தாம் பாட்டு பஃறொடை வெண்பாவில் அமைந்தது. அதற்குப் பண்ணொடு தாளமோ மெட்டோ குறிக்கப் படவில்லை.

1.2.1 இந்த இசைக்குறிப்புகள், சுவை சுட்டுதல், படவிளக்கம் முதலியன நாடு முழுவதும் இப்பாடல்கள் பாடப்பெற்று மக்களனைவரும் கருத்துகளை எளிதில் புரிந்து கதரியக்கத்தில் சேரவேண்டுமெனப்பாரதிதாசன் கருதியதைக் காட்டுகின்றன.

1.3 'காந்தியடிகளும் கதரும்' என்னும் முதற்பாட்டு, கதர்க் குல்லாயணிந்த தேசியத் தொண்டனொருவன், யானை மேலமர்ந்துள்ள பறையறையும் வள்ளுவனை நோக்கி "'அன்னியர் நூலைத் தொடோம் என்ற சேதி அறைந்திடடா புவி முற்றும்" எனக்கூறும் அமைப்பில் தொடங்குகிறது. இவ்வமைப்பே படமாக ஒருபக்க அளவு வரையப்பட்டுள்ளது. சுதந்தர தேவியும் கதரும்' எனும் இரண்டாம் பாட்டில் 'சுதந்தரம்' ஒரு மங்கையாக உருவகப்படுகிறது. அம்மங்கையைக் கண்டு காதற் கொண்டே ஓர் ஆண்மகனிடம் அவள், 'இராட்டினத்தில்

நூலிழைத்து நெய்து உடுப்பாய், அந்நியர் நூலைத் தொலைப் பாய், அப்புறம் என்னைக் கலப்பாய்' எனக்கூறி மறைந்து விடுகிறாள். பாட்டு, இருவர் தம் உரையாடல் அமைப்பில் செல்கிறது. 'தேசத்தாரின் பிரதான வேலை' எனும் மூன்றாம் பாட்டு 'பஞ்சுவிளைப்பீர், இழை நூற்பீர்' எனப் பாரத நாட் டாரை ஆசிரியரே வேண்டிக் கொள்வதாக அமைகிறது. 'இராட் டினச்சிறப்பு' எனும் நான்காம் பாட்டு, பாடுவோனாகிய தலைவன், இராட்டினத்தைத் தலைவியாக்கி அவளை முன் னிலைப்படுத்தி 'நாம் ஈன்ற பிள்ளையே சுதந்தரம்' எனப் பேசு வதாக அமைந்துள்ளது. 'அன்னைக்கு ஆடை வளர்க' எனும் இறுதிப்பாட்டு பாஞ்சாலியாகப் பாரதத்தாளையும் துச்சாதன னாக அதிகாரம் கொண்டவர்களையும் கண்ணனாகக் காந்தி யடிகளையும் காட்டுகிறது. இப்பாட்டின் தொடர்பில் பாரதத் தாயின் ஆடையைத் தொப்பியணிந்த ஆங்கிலேயன் பறிப்பது போன்று ஒரு பக்க அளவில் கருத்து விளக்கப்படமொன்றும் காணப்படுகிறது.

1.3.1 மூன்றாவது பாட்டு மட்டும் ஆசிரியன் நேர்முகமாக நாட் டினரை நோக்கி வேண்டுகோள் விடுவதாக அமைகிறது. ஏனைய பாடல்களையெல்லாம் நாடகப்பாங்கோடு ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களைக் களத்தில் காட்டி அவர்களின் உரையாடல், செயல்களை விளக்கிக் கதைச்சாயல் விரவ உருவாக்கியிருக்கும் ஆசிரியரின் கலைநுட்பம் குறிப்பிடத் தக்கது.

1.4 பாட்டுகளில் சொல்லப்படும் கருத்துகளைப் பின் வருமாறு பாகுபடுத்தலாம்:

'வேற்றுவர்கை பாரோம்' அந்நியர் இந்நாட்டைச் சந்தையென் றாக்கினர். அவர்தம் சூழ்ச்சிகள் இனியும் செல்லா, அந்நியர் நூலைத் தொடோம்.

'இராட்டினச் சிறப்பு' 'இராட்டினம் பண்டு பாரதத்திலேயே பிறந்தது. ஊட்டமுறத் தோளுரமும், உடலழகும், ஊக்கமும் கொடுப்பது. அதைத் தொட்ட கைகள் விட்டதில்லை எனச் சுற்றினால் 'சுதந்தரம்' கிடைக்கும்.

'கதரணிவீர்' 'பால் நுரைபோல் பாரதத்தில் பஞ்சு விளைத்துப் பனிமலை போல் அதனைத் தூய்மை செய்து சிலந்தியிழைபோல்

நூல்நூற்று வானம், புனல், சுடர் நாணும்படி வண்ணக் கதராடை செய்து குவிப்போம்.

**'ஏதமில் காந்தி'** : 'அறம் வளர்க்க வந்த கண்ணன் காந்தி, இன்னல் செய்தார்க்கும் இடர் செய்திடாமல் இராட்டினம் சுற்று வீர், கதரணிவீர்' என்று சொன்ன மொழி வாழ்வினுக்கோர் அமுதம்.

**'எழில் பாரதத்தாள்'** : 'விண் கொள் இமய வெற்பை முடியாக வும் பண்கொள் குமரியைப் பாதமாகவும் கொண்ட பாரதம், போர்நின்ற வீரர்குலம் பூத்த நிலம். கனுவகல் கரும்பும் கதலியும் செந்நெலும் கொண்டது. நான் பாரத நற்புத்திரன் ஆக உடல் வளர்த்த நாடு என் உயிர்'

1.5 ஐந்து பாட்டுகளும் வேறுபட்ட யாப்பமைப்பில் இயற்றப் பட்டுள்ளன. படிப்பார் சிறிதும் சலிப்பின்றி அதிக ஈடுபாட் டோடு படிக்கவும் எளிதில் நினைவில் நிறுத்திக் கொள்ளவும் இவ்வோசை வேறுபாடு துணை செய்யும். வேறுபாட்டைப் புரிந்து கொள்ளும் வகையில் ஐந்து பாட்டுகளிலிருந்தும் நிரலே ஒவ் வொரு பகுதி கீழே தரப்படுகிறது :

i ''கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்
கழறுகின்றேன் அதைக் கேளே—நீவிர்
கதரணிவீர் உங்கள் பகைவரின் வேரங்குத்
தூளே-தூளே-தூளே''

ii ''கன்னியுரைத்தது கேட்டிடுவீர், உள்ளக்
காதல் இருப்பது மெய் எனிலோ-அட
சின்ன இராட்டின நூலிழைப்பாய்-அதில்
தீட்டின்றி நெய்த உடை உடுப்பாய்...''

iii ''ஏனத்தினிற் சோறு கேட்கும்
ஏழையரும் யாரும்-நம்
ஏழையரும் யாரும்-பஞ்
சிழையை நூற்றுத்தறி நெய்வதால்
கொத்தடிமை தீரும்''

iv ''கூட்டதமுதம் நானுனக்கு ராட்டினப் பெண்ணே-அடி
கொஞ்சுகிளி நீ எனக்கு ராட்டினப் பெண்ணே.''

v ''முப்பத்து முக்கோடி மொய்ம்புடைய மைந்தர்களை
இப்புவியில் பெற்ற எழில்பார தத்தாளின்
ஆடை பறித்தார் அதிகாரம் கொண்டவர்கள்
ஓடி அவளின் உடைமீட்க வேண்டாமோ''

1.6 பாட்டுகள் அனைத்தும் எளிய சொற்களால் இயன்றன. பாட்டில் பயிலும் அடல், இன்னல், கன்னல், குலிசம், சூல், பானல், வெற்பு ஆகிய அரிய சொற்களில் சிலவற்றுக்கும் அங்கங்கே பொருள் தரப்பட்டுள்ளது. புத்திரன், சொர்ணம், பிர தானம், சதுர் முதலிய பிறமொழிச் சொற்களும் ஏனம், காப்பரிசி, சதை முதலிய வழக்குச் சொற்களும் 'பாரதத்தாள்' 'பாரதர்' ஆகிய புதிய சொல்வடிவங்களும் இடம் பெற்றுள்ளன. 'பால் நுரைபோல் பஞ்சு', 'பானல் விழி', 'பாளை பிளந்த சிரிப்பு', 'தேனை ஈ மொய்த்தல் போல் இராட்டினத்தைச் சேர்ந்து சுற்றல்', 'சிலந்தியிழை போல் மெல்லிழை' எனவரும் உவமைத் தொடர்களும், 'வாய்க்குமுதம்', 'எழுச்சிக்கனல்' எனவரும் உருவகத் தொடர்களும் 'பொதிபொதி', 'நெய்துநெய்து' என வரும் அடுக்குத் தொடர்களும் குறிக்கத்தக்கன. 'இராட்டினம்', 'ராட்டினம்', 'அன்னியர்' 'அந்நியர்' என இருவகைச் சொல் வடிவங்கள் இடம்பெறுகின்றன. 'அறுபது கோடித் தடக்கைகள்' என ஓரிடத்தும் 'முப்பத்து முக்கோடி மொய்ம்புடைய மைந்தர்கள்' எனப் பிறிதோரிடத்தும் மாறுபாடாக மக்கள் தொகை சுட்டப்படுகிறது.

1.7 இந்நூலுக்குப் பின்னர் வெளியான பாரதிதாசன் பாடல்களின் சாயலை இதில் ஓரளவு காணமுடிகிறது. 'பானல் விழியுடை யாள்' 'பாளை பிளந்த சிரிப்பினிலே' எனவரும் இந்நூற்றொ டர்கள் 'புரட்சிக் கவி'யில் இடம் பெற்றுள்ள 'பானல் விழி மங்கையிடம்' 'பாளைச் சிரிப்பில் நான்' ஆகிய தொடர்களை நினைவுபடுத்துகின்றன. முதற்பாட்டு, 'வள்ளுவனை நோக்கிப் பறை கொட்டு' என்று முதல் தொகுதி (வாளினை எடடா) யிலும் 'பெய்யும் முகிலின் இடிபோல்—அடடே பேரிகை முழக்கு' என்று இரண்டாம் தொகுதி (பகை நடுக்கம்)யிலும் உள்ள பாடல்களின் அமைப்பை ஒருபுடையொத்திருப்பதோடு 'காதலா கடமையா' நூலின் தொடக்கப் பகுதியை நினைவுறுத்து கிறது. 'அறைந்திடடா' 'கன்னலடா' எனவரும் 'அடா' விளி பாரதிதாசனின் பிற்காலப் பாடல்களில் 'பாரடா உனது மானிடப் பரப்பை' (முதல் தொகுதி) 'நகையோடு நோக்கடா'

(அழகின் சிரிப்பு) என மிகுதியாக இடம் பெறுகிறது. 'பண்டை முதல் இழை நூற்பதிலே யாம் சிங்கம்—சிங்கம்—சிங்கம்' எனுந் தொடர் 'ஆண்மைச் சிங்கத்தின் கூட்டம்' எனும் முதல் தொகுதிப் பாடல் (சங்க நாதம்) வரியில் வீறு பெறுகிறது.

1.8 'சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்தவர் பாரதி தாசன்' என்பதை மெய்ப்பிக்கும் வகையில் பாரதிப் புலவனின் தாக்கத்தைப் பாட்டுகளில் காண முடிகிறது. 'அறுபது கோடித் தடக்கைகள்' எனப் பாரதியின் பாரத நாட்டுப் பாடலொன்றில் (எங்கள் தாய்) வருந்தொடர் அப்படியே முதற்பாட்டில் இடம் பெற்றுள்ளது. 'கலி தொலைத்துக் கிருதயுகம் காணப் பெறு வோமே' எனும் மூன்றாம் பாட்டின் இறுதி ''இடிபட்டசுவர் போலே கலி விழுந்தான் கிருதயுகம் எழுக மாதோ'' எனும் பாரதிப் பாடல் (புதிய ருஷியா) அடியின் மறுபதிப்பே. 'கூட்டமுதம் நானுனக்கு... கொஞ்சுகிளி நீ எனக்கு'' என இராட்டினப் பெண்ணை நோக்கிக் கூறும் நான்காம் பாட்டின் தொடக்கம் 'தோயுமது நீ எனக்கு-தும்பியடி நானுக்கு' எனும் பாரதிப் பாடலை (கண்ணம்மா என் காதலி—யோகம்) நினைவு படுத்துகிறது. பாரத தேவியைக் 'கடையுகம் முற்றினும் திறல் கெடாக்காளி'யாகவும் சுதந்திரத்தைக் 'காளியனுப்பிய கன்னி' யாகவும் பாரதிதாசன் காட்டுவதில் பாரதியின் கருத்து வீச்சைக் காண்கிறோம், அண்ணல் காந்தியைக் 'கண்ணக் காந்தி'யாகக் காணும் பாரதிதாசனின் பார்வை 'இடிமின்னல் காக்க குடை செய்தான் என்கோ' எனும் பாரதி (மகாத்மா காந்தி பஞ்சகம்) வரியொடு ஒப்பு நோக்கத்தக்கது. எனினும் பாரதியின் மறை வுக்குப் பிறகே கதரியக்கம் எழுச்சி பெற்றதால் அதனைப் பாடும் வாய்ப்பு பாரதிதாசனுக்குக் கிடைத்ததைப் போல் பாரதிக்குக் கிடைக்கவில்லை என்பது மனங் கொளத்தக்கது.

# சான்றெண் விளக்கம்

1. நான் அறிந்த பாவேந்தர் பாரதிதாசன், இலட்சியப் பயணம்—சுதந்திரம் பொன்விழா மலர், 1937—1987, ப 100, 1987, புதுவை.

2. கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப 114, மன்னர் மன்னன், 1985, விழுப்புரம்.

3. ஷை

4. 'இராட்டினம்—தெய்விகப்படை', தேசசேவகன் (கி. இ.), 31.7.1923, புதுவை.

5, 'நீச நாகரிகம்', தேசசேவகன் (கி. இ.), 29.5.1923.

6. இந்நூல் பல்வேறு உருவில் பின்னர் வெளியாகியுள்ளது.

* 'தேசிய கீதம்-கதர் இராட்டினப் பாட்டு' எனும் தலைப்பில் இந்நூலே 1955இல், அமைப்பில் சிறுமாற்றத்தோடு திருச்சி முல்லைப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

* 1963இல் சென்னை முத்தமிழ் நூலகப் பிரசுரம் வெளியிட்ட 'முல்லைக்காடு' மறுபதிப்பின் இறுதியில் 'நாட்டுப் பாடல்கள்' எனும் பகுதியில் 'கதர் இராட்டினப் பாட்டு'ப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

* 1977இல் சென்னைப் பாரி நிலையம் வெளியிட்ட பாரதிதாசன் கவிதைகள் நான்காம் தொகுதியின் ஈற்றயல் பகுதியில் 'கதர் இராட்டினப் பாட்டு' இணைக்கப்பட்டுள்ளது.

7. என் தந்தையார் (க), திருமதி சரசுவதி கண்ணப்பர், அரும்புகள் மொட்டுகள் மலர்கள் (நூ), ப 64, கவிஞர் முருகு சுந்தரம் (தொ. ஆ), 1980, சிவகங்கை.

8. குயில் கூவிக் கொண்டிருக்கிறது, ப 16, மன்னர்மன்னன், 1978, குறிஞ்சிப்பாடி.

# திருத்திப் படியுங்கள்

| பக்கம் | வரி | இதனை | இவ்வாறு |
|---|---|---|---|
| 4 | 10 | விடப்படுள்ளன | விடப்பட்டுள்ளன |
| 12 | 13 | அனுபவிப்பதைத் | அனுபவிப்பதைக் |
| 26 | 9 | எங்குளப்பகை | எங்குலப்பகை |
| 29 | 14 | பெருத்தலைவர்கள் | பெருந்தலைவர்கள் |
| 36 | 9 | அயலாரான | அயலாரை |
| 43 | 9-10 | உலகத்லுள்ள | உலகத்திலுள்ள |
| 43 | 33 | த மட்டிலுந்தானா | மட்டிலுந்தானா? |
| 45 | 11 | பாாதியார் | பாரதியார் |
| 46 | 12 | 2.2.2.1 | 8.2.2.1 |
| 48 | 10 | வேறோரு | வேறொரு |
| 48 | 23 | மாரேசன் | மயூரேசன் |
| 50 | 10 | ஜீனில் | ஜ-மினில் |
| 53 | 6 | பெறாத | பொறாத |
| 53 | 9 | ஆதிகாரி | அதிகாரி |
| 53 | 28 | எதுதுல்லாமல் | எதுவுமில்லாமல் |
| 54 | 4 | சிறைசாலை | சிறைச்சாலை |
| 54 | 5 | முகிழ்ந்தது | முகிழ்த்தது |
| 60 | 9 | பரரதிதாசன் | பாரதிதாசன் |
| 61 | 12 | பாரத்ததாய் | பாரதத்தாய் |
| 67 | 7 | சாய்க்கடைளை | சாய்க்கடைகளை |
| 67 | 8 | விளக்கப்பட்டிருந்தாக. | விளக்கப்பட்டிருந்ததாக |
| 69 | 23 | பங்ரும் | பங்கும் |
| 80 | 30 | ருக்கக்கூடாதென்றும் | இருக்கக்கூடாதென்றும் |
| 80 | 32 | முன்வரவேன்டு மென்றும் | முன்வரவேண்டு மென்றும் |
| 111 | 7 | சுப்பிரமணியன் | சுப்பிரமணியனின் |
| 115 | 15 | ஒருநாள் ஜெகநாதக் கிராமணியும் | ஒரு நாள் கவிஞர் பாரதி தாசனும் ஜெகநாதன் அச்சகத்தின் உரிமை யாளர் ஜெகநாதக் கிராமணியும் |
| 117 | 3 | ஈ. லஷ்மண் | ஈ. லக்ஷ்மண் |
| 118 | 7 | ந்து பாடல்கள் | ஐந்து பாடல்கள் |
| 118 | 10 | தலைப்பின் | தலைப்பின |
| 118 | 14 | குறிக்கப்பட்டுள்ளள | குறிக்கப்பட்டுள்ளன. |



ஒருதீமை கண்டால் ஒதுங்கிநிற்றல் தீமை;
எருதுமேல் ஈமொய்த்த போது—பெருவால்
சுழற்றுவதால் துன்பம் தொலையுமா? ஈக்கள்
புழுக்குமிடம் துய்தாகிப் போகுமா?—இழுக்கொன்று
காணில் நமக்கென்ன என்னாமல் கண்டஅதன்
ஆணிவேர் கல்லி அழகுலகைப்—பேணுவதில்
நேருற்ற துன்பமெலாம் இன்பம்...

வலியாரால் வாடும் எளியாரின் சார்பில்
புலியாகிப் போர்தொடுக்கும் போதில்—வலியோர்கள்
எய்யும்கோற் புண்ணும் இனிதாகும்...

மக்கள்நலம் காத்தல் கண்டு ஆளவந்தார்
எக்கேடு சூழினும் அஞ்சேன்; ஒருநாள்
சிறைக்கதவு திறக்கப் பட்டது; சென்றேன்;
அறைக்கதவு புனிதப் பட்டது; மீண்டேன்.
புதுவை அரசியற் போரில் இறங்குவேன்
இதைவை யேன்எனில் அதைவிட்டு வையேன்
நாய்பல நாற்புறம் வாய்தி றக்கினும்
தாய்மொழித் தொண்டு தவறிய தில்லை.
நன்றி மறந்தவர் இன்று வரைக்கும்
குன்று கொணர்ந்து தூற்றுவர்; நன்றெனப்
பட்டதைச் செய்வேன்; பகைவருக்கு அஞ்சேன்...